தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

வெளியீடு—10—1—1974]
Issued—10—1—1974]

REPORTING SECTION
BILLS SECTION

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு
OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை 1973 நவம்பர் 23
Friday 23rd November 1973

தொகுதி XLIV—எண் 1
Volume XLIV—No. 1

©
தமிழ் நாடு அரசு
1973
GOVERNMENT OF TAMIL NADU
1973

LEGISLATURE LIBRARY MADRAS
BILLS SECTION

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.

Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை 50 காசுகள்]
PRICE 50 PAISE]

தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

தமிழ் நாடு ஆளுநர்.

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

TAMIL NADU LEGISLATURE L.D.
17 SEP 1976
MADRAS

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (**முதலமைச்சர்**) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், படச்சுருள் தொழில் நுட்பவியல்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ்நாடு கழிவு நீர்—குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (பின் தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பின் தங்கிய வகுப்பினர் நலன், செய்தி—விளம்பரம், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சேரணி, இளைஞர் அணி, பூதான—கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : அரிசன நலம், மகளிர்—சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதி சீட்டுகள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசன சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன்: (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கனிப் பொருள்கள், சுரங்கங்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத் துறை வருவாய், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை, மறு நிதி உதவி.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம்: (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி–இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள்–அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், குடிசை மாற்று வாரியம்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

13. **மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மின்சாரம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா, திரைப்படச் சட்டம்.

14. **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்--அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. **மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்குத் துறை, பால்வள முனைப்புத் திட்டங்கள் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU.

THIRU KODARDAS KALIDAS SHAH.

Members of the Council of Ministers.

1. THE HON. DR. M. KARUNANIDHI (Chief Minister), in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Tourism), in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Minister for Health), in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town-Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes) in-charge of Backward Classes, Information and Publicity, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRUMATHI SATHYAVANIMUTHU (Minister for Harijan Welfare), in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indian Overseas and Refugees and Evacuees, Newsprint Control and Passports.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (Minister for Public Works), in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries), in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Revenue), in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenue and Waqfs.

9. THE HON. THIRU Si. Pa. ADITANAR (Minister for Agriculture), in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering, Wing and Animal Husbandry.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM (Minister for Local Administration), in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

11. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY (Minister for Food and Co-operation), in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

12. THE HON. THIRU K. RAJARAM (Minister for Labour) in-charge of Labour, Housing and Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

13. THE HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity), in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests, Cinchona and Cinematograph Act.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village, Industries and Rural Industries Project, Milk Operation Flood, Project and Tamil Nadu Dairy Development Corporation.

தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர் :

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.எ

பேரவைத் துணைத் தலைவர் :

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ., பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. க. சுப்பு
2. திரு. என். கணபதி
3. திரு. மு. பழனிவேல்
4. திரு. ஜே. ஜேம்ஸ்
5. திரு. பெ. சௌந்தரபாண்டியன்
6. திரு. கே. கந்தசாமி

சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).

திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

திரு. டி. ஜே. சைமன், பி.ஏ.

விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தராராசன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1973 நவம்பர் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Revision of budgetary estimates

* 329 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any communication for the Union Finance Ministry has been received about the need to revise the budgetary estimates of the Government recently; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(இ) இந்திய அரசினால் நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழு, தற்போதுள்ள கணக்கு வகைப்பாட்டு அமைப்பு முறை, கணக்குத் தலைப்புகள் ஆகியவை பற்றி விரிவான ஆய்வு ஒன்றை நடத்தியதோடு (fire-tired) ஐந்து நிலைகள் கொண்ட வகைப் பாட்டை மேற்கொள்ளலாமெனக் கருத்துத் தெரிவித்துள்ளது. இந்த முறையினால் தேசிய அளவில் நிதி வாயில்களில் ஒதுக்கீடு குறித்து மதிப்பீடு செய்வது வசதியாயிருக்கும். ஒரு புறம் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கங்களுக்கும் மற்றொரு புறம் ஐந்தாண்டுத் திட்ட அலுவல்கள், வேலைத் திட்டங்கள், பணித் திட்டங்களுக்கும் இடையே தற்பொழுதுள்ளதைவிட நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தவும், இது வகை செய்யும். மேலும், செலவு குறித்து இனம் வாரியான கட்டுப்பாட்டையும் இது உறுதி செய்யும். இவ்வாறு கட்டுப்படுத்துவது மிகப் பொருத்தமாகும். திருத்தி யமைக்கப்பட்ட இந்த வகைப்பாட்டினைத் தணிக்கைத் துறைப்

பெருந்தலைவர் "Comptroller and Auditor General of India" ஏற்றுக் கொண்டுள்ளார். இந்த வகைப்பாடு, 1974-75 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் முதற்கொண்டு செயலுக்கு வரும். ஆய்வுக் குழு அனுப்பியுள்ள அறிக்கைகளின் படிகள் @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளன.

திரு. கே. டி. கே. தங்கமணி : *தலைவர் அவர்களே, இம்மாதிரி சிபார்சுகள் வந்த பிறகு 1974-75 வரையில் காத்திருக்க வேண்டுமா? 1973-74 பட்ஜெட் தயாரிக்கப்பட்டதே இந்தச் சிபார்சின் அடிப்படையில் பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருந்தால் 1974-75-க்கு உதவியாக இருக்குமே. 1973-74-இலேயே இது ஏன் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவிக்க இயலுமா?*

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : *தலைவர் அவர்களே, இவை பெரிய அளவில் செய்ய வேண்டிய மாற்றங்களாக இருப்பதால் உடனடியாகச் செய்ய இயலவில்லை. ஆகவே, 1974-75 வரையில் காத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.*

திரு. என். கிட்டப்பா : *தலைவர் அவர்களே, தமிழகத்தில் மதுவிலக்கை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வருவதன் காரணமாக தமிழக வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழாமல் தடுக்க உதவி ஏதேனும் அளிக்கக் கோரி நமது அரசு மத்திய அரசைக் கோரியுள்ளதா? அவ்வாறு கோரியிருப்பின் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையே.*

திரு. என். கிட்டப்பா : *அதற்காக உதவி ஏதேனும் அளிக்க மத்திய அரசு சம்மதித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : *இந்தக் கணக்கில் அந்தக் கணக்கு வராது.*

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : *தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து இந்தத் தகவல் எப்பொழுது வந்தது என்பதை அறியலாமா?*

@ *23—11—1973 அன்று பேரவைமுன் வைக்கப்பட்டன. அவை இத்துடன் இணைக்கப்படவில்லை.*

1973 நவம்பர் 23]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தகவல் வந்த தேதியைக் குறிப்பாகச் சொல்ல இயலாது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இம்மாதிரி சிறப்பான மாற்றத்தை மற்ற மாநிலங்கள் கைக் கொண்டிருக்கின்றனவா என்பது பற்றிய தகவல் முதலமைச்சரவர்களிடம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த மாற்றமே அகில இந்திய ரீதியில் எல்லா மாநிலங்களிலும் கணக்கு ஒரே நிலையில் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் செய்யப்படுகிற மாற்றமாகும். இதைக் கொஞ்சம் விளக்கிச் சொல்ல விரும்புகிறேன். உதாரணமாக, இப்பொழுதுள்ள கணக்குத் தலைப்பின்படி 'ஃபாமிலி ப்ளானிங்' என்று வந்தால் '30-ஏ' என்ற தலைப்பின்கீழ் கணக்கிடப்படுகிறது. அப்படி இனிமேல் கணக்கிடப்படாமல் எல்லா மாநிலங்களிலும் ஒரே எண்ணின்கீழ்தான் கணக்கிடப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த முறை கொண்டுவரப் படுகிறது. இப்பொழுது '30-ஏ' என்ற எண் தமிழ்நாட்டில் 'குடும்பக் கட்டுப்பாடு' என்ற தலைப்புக்கு இருக்கும்போது, ஆந்திரத்திலோ பிகாரிலோ மேற்கு வங்கத்திலோ வேறு எண்ணிலே அந்தத் தலைப்பு இருக்கும். அப்படி இப்பொழுதிருக்கும் நிலையில் அகில இந்திய ரீதியில் கணக்கைச் சரி பார்க்க இயலாத காரணத்தால், எல்லா இடங்களிலும் ஒரே எண்தான் போடப்பட வேண்டும் என்ற வகையிலே இந்த மாற்றங்கள் கொண்டுவரப் படுகின்றன.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, டெவலப்மென்ட் எக்ஸ்பெண்டிசரை அதிகமாகப் போட்டு, நான்-டெவலப்மென்ட் எக்ஸ்பெண்டிசரைக் குறைக்க வேண்டுமென்று ஏதாவது சொல்லி யிருக்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இவை டெக்னிக்கல் மாற்றமே தவிர, இப்படிப்பட்ட மாற்ற மெல்லாம் எதுவும் சொல்லப்படவில்லை.

Radio Station for Tuticorin

* 330 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state whether the State Government has been consulted by the A.I.R. authorities and the Union Government in regard to the setting up of an All India Radio Station at Tuticorin?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வேறு எங்காவது வானொலி நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? அதற்கான சிபார்சு ஏதாவது செய்யப் பட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள கோவை, திருநெல்வேலி ஆகிய இரு இடங்களிலுமுள்ள இந்த நிலையங்களை முழுமையாகத் தனி நிலையங்களாக ஆக்க வேண்டுமென்று கோரிக்கையை நாம் மத்திய அரசுக்கு அனுப்பி, அதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அதன்னியில், மதுரையில் புதிதாக முழுமையாகத் தனியொரு வானொலி நிலையம் அமைக்க வேண்டும் என்பதையும், அதை ஐந்தாவது திட்டத்தில் இணைக்க வேண்டும் என்பதையும் மத்திய அரசுக்கு நாம் வலியுறுத்தி வருகிறோம். நெல்லையில் இருக்கும் நிலையம் முழுமையான நிலையமாக ஆக்கப்படுமானல் பக்கத்திலே முப்பது, நாற்பது மைலில் உள்ள தூத்துக்குடிக்கு ஒரு வானொலி நிலையம் தேவை இல்லை என்பதும் அரசின் கருத்தாகும்.

திரு. என். கிட்டப்பா : தற்போது சென்னை, திருச்சி ஆகிய இடங்களில் உள்ள வானொலி நிலையங்களின் சக்தியை மேலும் அதிகரிக்கக் கோரி நமது அரசு மத்திய அரசுக்கு வேண்டுகோள் ஏதேனும் விடுத்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே இந்த மன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு நான் விளக்கமாகப் பதிலளித்தேன். அந்தச் சக்தியை அதிகப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு கேட்டிருக்கிறது.

1973 நவம்பர் 23]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தென் பிராந்தியங்களில் உள்ள வானொலிகளில் இந்த ட்ரான்ஸ்மிஷன் சக்தி குறைவாக இருப்பதால், ஒலி சரியாகக் கேட்கவில்லை. ஆகையால், திருநெல்வேலியில் இருப்பதை விஸ்தரிப்பதற்கு உடனடியாக ஏதாவது சிறப்புத் திட்டம் தயாரிக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைத்தான் ஏற்கனவே சொன்னேன். நெல்லை, கோவை ஆகிய இரண்டு இடங்களிலும் உள்ள வானொலி நிலையங்களை முழுமையான வானொலி நிலையங்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாநில அரசு மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இங்கே இருக்கின்ற வானொலி நிலையங்களில் தமிழ் கேட்பதே அரிதாகி விட்டது. ஆகவே, தமிழிசை நிகழ்ச்சிகளும், மற்ற தமிழ் நிகழ்ச்சிகளும் அதிகமாக ஏற்பாடு செய்ய மத்திய அரசை நம்முடைய அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலே இருக்கின்ற விஷயம் உண்மையாக இருக்குமானல் இந்தக் கேள்வியைக் கொண்டே வானொலி நிலையத்தார் திருத்திக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன்.

College for Siddha System of Medicine at Chingleput

* 331 *Q*.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) Whether the Palani Andavar Devasthanam has offered Rs. 5 lakhs to run a Siddha College of Medicine at Chingleput; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இதுவரையில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, திறமை மிகுந்த, அனுபவம் வாய்ந்த சித்த மருத்துவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நல்ல முறையில் சித்த வைத்தியசாலைகள் வைத்து நடத்தி

[1973 நவம்பர் 23

வருகிறார்கள். அது மாத்திரமல்லாமல், பழனி மலைத் தொடரில் சித்த மருத்துவத்திற்குத் தகுந்த மூலிகைகள் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே, சித்த மருத்துவக் கல்லூரியைப் பழனி நகரத்தில் அமைத்துக் கொள்ள இந்த அரசு அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, புதிய கல்லூரி அனுமதிக்கக் கொள்கை அடிப்படையில் தடை இல்லை. ஆனால், நிலைமை அடிப்படையில் தடை இருக்கிறது. 'பாடம் நடத்துவதற்குத் தகுதியுள்ள பேராசிரியர்கள்' என்று ஏற்றுக் கொள்ளப் படக்கூடியவர்கள் இன்னும் போதுமான அளவு கிடைக்கவில்லை. பாளையங்கோட்டைக் கல்லூரியில் பட்டப் படிப்புக்கு மேற்படிப்பு ஏற்படுத்திய நிலையில், அதற்கே தகுந்த ஆசிரியர்கள் ஓரிருவர் வெளியேயிருந்து வர வேண்டியிருந்தது. ஆகவே, ஆசிரியர்கள் போதுமான அளவு கிடைக்கக்கூடிய நேரத்தில் கல்லூரி ஏற்படுத்தலாம். இல்லையானால், சித்த மருத்துவர்களுக்குப் பயிற்சி வகுப்பைப் பழனியில் நடத்தினால் அரசு வரவேற்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த சித்த மருத்துவக் கல்லூரி நடத்துவதற்கு என்ன என்ன தகுதிகள் இருக்க வேண்டும்? தனியார் துறையில் ஒருசிலர் விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக, நாகர்கோயிலில் ஒருவர் விண்ணப்பம் கொடுத்திருக்கிறார். என்ன முறையில் அதற்கு அனுமதி வழங்கப் போகிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டது முன்சிறையிலுள்ளதைப் பற்றியதாக இருக்க வேண்டும். அங்கே ஒரு கொட்டகை இருந்தது. நான் போய்ப் பார்த்தேன். அங்கே யாரோ ஒரு சித்த மருத்துவர் இருக்கிறார். பி.ஐ.எம். பட்டப் படிப்புத் தகுதி இருக்க வேண்டும் என்று அகில இந்திய மருத்துவ ஆலோசனைக் குழு கூறியுள்ளது. அந்தப் பட்டப் படிப்பு படித்தவர்கள் இல்லையென்றால், எல்.ஐ.எம். படித்தவர்களாவது இருக்க வேண்டும். அல்லது. ஏதாவது ஒரு வகையில் அவர்கள் மிகப் பெரிய தேர்ச்சி பெற்ற சித்த மருத்துவப் பாடம் நடத்தும் ஆற்றல் பெற்றவர்களாக

இருக்கவேண்டும். சில மருந்துகளைத் தயாரிக்கத் திறமை வாய்ந்தவர்களாக இருப்பதனாலேயே அவர்கள் சித்த மருத்துவ கல்லூரி நடத்துவதற்குத் தகுதி பெற்றவர்கள் ஆகமாட்டார்கள்.

திரு. எஸ். வடிவேல் : தஞ்சை மாவட்டத்தில் சீர்காழியை அடுத்து வைத்தீஸ்வரன்கோயிலில் ஒரு சிறந்த மூலிகைத் தோட்டம் இருக்கிறது. அந்த இடத்திலுள்ளவர்கள் மிகச் சிறந்த முறையில் வைத்தியம் செய்து, அதனால் பல மக்களுக்கு நன்மை ஏற்படுகிறது. அந்த வைத்தியசாலை இருப்பதையும், அருகில் மூலிகைத் தோட்டம் இருப்பதையும் கருதி, அங்கே ஒரு சித்த மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நல்லவேளை ஒரு தோட்டத்திற்குப் பக்கத்தில் கல்லூரி அமைக்கலாம் என்று சொன்னார்கள். ஒவ்வொரு செடிக்கும் பக்கத்தில் கல்லூரி அமைக்கக்கூட அடுத்த ஆலோசனை வரக்கூடும். நானும் வைத்தீஸ்வரன்கோவிலைச் சேர்ந்தவன் என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அங்கே கண் சிகிச்சையில் திறமையுள்ள சித்த மருத்துவர் இருந்தார். அவர் அதற்காக சில மூலிகைகள் வைத்திருந்தார் என்ற அளவில் செய்தி உண்டு. தருமபுரம் ஆதீனத்தின் சார்பாக அதைச் செய்தவர்கள் தொடர்ந்து செய்ய இயலாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரம் தந்தால் அந்த டாக்டர் அந்தத் தொழிலைச் செய்வதற்கு ஊக்கப்படுத்துவதற்கு ஏதாவது முயற்சிக்கலாம்.

திரு. எம். சுரேந்திரன் : சார், ஒரு சித்த வைத்தியக் கல்லூரி ஆரம்பிக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா ? அப்படி யென்றால் கல்லூரியில் சேர்வதற்கு ஏராளமானவர்கள் தேங்கி நிற்கிறார்களா ? இப்பொழுது பாளையங்கோட்டைக் கல்லூரியில் எவ்வளவு மாணவர்கள் இருக்கிறார்கள் ? அங்கு இடம் கிடைக்க வில்லை என்ற புகார் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பாளையங் கோட்டையிலுள்ள கல்லூரிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களில் மூன்றிலே ஒருவர் அல்லது இரண்டிலே ஒருவர்தான் எடுக்கப்

படுகிறார்கள். இடம் கிடைக்கவில்லை என்ற புகார் அங்கு மட்டுமல்ல, பஸ்களிலேயும், இரயில்களிலேயும்கூட இடம் கிடைக்கவில்லை என்ற புகார்கள் இருக்கின்றன. ஆகவே, கல்லூரிக்கு விண்ணப்பிக்கின்றவர்கள் எல்லோருக்கும் இடம் கொடுத்தாக வேண்டுமென்பது வளர்ச்சி பெறுகின்ற சமுதாயத்திற்குத் தேவையான கொள்கை அல்ல. சென்னையில் இன்னொரு கல்லூரி ஆரம்பிக்கலாம் என்று ஆலோசிக்கப்பட்டது. அதற்குக் காரணம் சென்னையில் ஆரம்பித்தால் சித்த வைத்தியத்தின் தனிச் சிறப்பு உலகத்திற்குப் புலனாகும் வாய்ப்பிருக்கிறது என்ற கருத்து இருக்கிறது. அதற்கான சூழ்நிலை சென்னையில் இருப்பதால் மறுபடியும் இங்கே ஒரு கல்லூரி தொடங்கலாம் என்றால், அதற்குக் குறைந்தது சுமார் 25 இலட்சம் ரூபாய் தேவைப்படும். பழனி அறநிலையத்திலிருந்து 5 இலட்சம் ரூபாய் நன்கொடை கிடைத்தால் மேலும் நன்கொடைகளைத் திரட்டி இந்த முயற்சியைத் தொடங்கலாம் என்று ஆலோசிக்கப்பட்டது. ஆனால் 5 இலட்சம் ரூபாயை அவர்கள் சேர்த்துத் தர இயலாததால் நாம் இந்த ஆலோசனையை ஒத்திவைத்திருக்கிறோம்.

திருச்சிராப்பள்ளி மருத்துவ மனைக்கு நீர் வழங்கல்

* 332 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளியிலுள்ள அரசினர் பெரிய மருத்துவ மனையில் தேவைப்படும் தண்ணீர் விநியோக வசதி தற்போது இல்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, திருச்சியிலுள்ள அரசினர் பெரிய மருத்துவமனையில் மழைக்காலத்திலும் கூட போதுமான தண்ணீர் விநியோகம் இல்லை என்பதை நானே தங்கிச் சிகிச்சை பெறும்போது நேரில் கண்டேன். இதைத் தீர்ப்பதற்குத் தனியே ஒரு 'ஓவர்ஹெட் டேங்க்' கட்டி அதன்மூலம்

1973 நவம்பர் 23]

நிரந்தரமாகத் தண்ணீர் கிடைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டதே, அது பரிசீலனையில் இருக்கிறதா என்கிற விவரத்தை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, நகரசபை மூலமாகத் தண்ணீர் வழங்கும் ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஏற்கனவே சில நேரத்தில் குறைபாடு ஏற்பட்ட நேரத்தில் நகரசபைக்குத் தெரிவிக்கப்பட்டு போதுமான தண்ணீர் அண்மையில் கிடைத்திருக்கிறது என்ற பதில் தந்திருக்கிறார்கள். ஒருவேளை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் போய்ப் பார்த்த பொழுது தண்ணீர் கிடைக்காமல் இருந்து, மறுபடியும் கிடைக்கும் நல்ல நிலை ஏற்பட்டிருக்கலாம்.

தீவிர குடும்பக்கட்டுப்பாடு திட்டங்கள்

*** 333 வினா—திரு. கே. என். குமாரசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Intensive Family Planning ஜில்லா கலெக்டர் தலைமையில் இதுவரை எந்தெந்த மாவட்டங்களில் நடத்தப்பட்டிருக்கிறது?

(இ) அதுவன்றி, கிராமாந்திரங்களில் ஹெல்த் டிபார்ட்மெண்ட் மூலமாக ஒரு Family Planning திட்டம் நடத்தப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) சட்டமன்றப் பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, குடும்பநல தீவிரத் திட்டத்திற்காக மத்திய அரசு 50 சதவிகிதம் மானியத்தைக் குறைத்துவிட்டதாகச் செய்தி வந்தது. அதற்குப் பிறகு ஒருசில நாட்களுக்கு முன்னால் மத்திய அரசின் அமைச்சர் ஒருவர் எல்லா மாநிலங்களும் தீவிரமாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். அதுகுறித்து ஏதாவது தகவல் மாநில அரசுக்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மத்திய அரசுக்கு ஏற்பட்ட எதிர்பாராத நிதிநிலை நெருக்கடி காரணமாக குடும்பநலத் திட்டத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த

@ 138-139-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

முழுச்செலவில் ஒரு பகுதியை இந்த ஆண்டு வழங்க இயலாது என்று முதலில் தெரிவித்தார்கள். பிறகு அந்த வெட்டு இல்லை என்று அறிவித்தார்கள். வெட்டு இல்லை என்று அறிவித்தார்களே தவிர அந்தத் துறையிலே எந்தெந்தப் பதவிகள் நிரப்பப்படாமல் இருக்கின்றனவோ, அந்தப் பதவிகளை நிரப்பக் கூடாது என்று விதித்திருக்கிறார்கள். ஆகவே, வெட்டு இல்லை என்று சொன்னாலும் கூட செயல்முறையில் வெட்டு உண்டு. அதைப்போலவே, தீவிரத் திட்டத்திற்கு, முனைப்பு இயக்கத்திற்குத் தனிச் சலுகையாக வழங்கிய தொகை ரூ. 100 வீதம் இப்பொழுது வழங்கப்படவில்லை. ஆகவே, தமிழக அரசு 50 இலட்சம் ரூபாயை முனைப்பு இயக்கத்திற்காக ஒதுக்கி இயன்ற அளவிற்கு அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்கிறது.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் தமிழகத்திலேதான் மிகத் தீவிரமாக நடைபெறுகிறது. இப்படி அந்தக் திட்டத்தை நிறைவேற்றுவதால் பாராளுமன்றத்தில் நமக்குக் கிடைக்கும் இடங்களில் ஒருசில இடங்கள் குறைந்துவிடும் என்று பலரும் கருத்து தெரிவிக்கிறார்கள். அதுபற்றி அரசு என்ன கருத்தை அறிவிக்க இருக்கிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தமிழகத்திற்குக் கிடைக்கும் இடம் குறைந்துவிடுகிறது என்று நாம் சொல்லும்பொழுது அது மட்டுமே காரணம் அல்ல என்று மத்திய அரசு கூறுகிறது. மராட்டியத்திலும் இந்தத் திட்டம் நம்மைவிட இன்னும் அதிகமான அளவில் நடைபெறுவதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. பாராளுமன்றத்தில் இடம் குறைந்து விடுகிறது என்பது தமிழ்நாட்டினுடைய பொதுவான பிரச்சினை. ஆனால் குழந்தைகள் அதிகமானால் வீட்டுக்கு வீடு இடம் குறைந்து விடுகிறது என்பது சமுதாயத்திற்கே நெருக்கடி தரும் பிரச்சினை.

திரு. எம். சுரேந்திரன் : சார், குழந்தைகளைப் பெறுவது என்பது முன்பெல்லாம் தங்களுடைய இஷ்டத்திற்கும், இன்பத்திற்கும் தங்களுடைய உரிமைகளை நிலை நாட்டவும் என்று கருதப்பட்டு வந்தது. இப்பொழுது சமுதாயத்தின் நலன்களை எதிர்பார்த்து குழந்தைகளைப் பெற வேண்டுமென்ற கட்டளை பிறப்பிக்கப்படுமா ?

1973 நவம்பர் 23]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஜனநாயகத்தில் அரசாங்கம் பலவற்றை வேண்டுகோளாகத்தான் சொல்ல முடியும். அவர்களுக்கு இருக்கும் அறிவுத் திறனைக் கொண்டு தங்களுடைய வாழ்க்கையிலே இதனைக் கட்டளையாக மேற்கொள்ளலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தக் குடும்பநலத் திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சை செய்துகொள்ள முன் வருபவர்கள் பலர் எல்லா மாவட்டங்களிலும் பெரும்பாலும் ஆண்கள்தான். தென் ஆர்க்காடு, தஞ்சை மாவட்டங்களிலே மட்டும் வெகுசில பெண்கள் குடும்பநலத் திட்டத்தின்கீழ் அறுவை சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, பெண்களுக்கும் அந்தத் திட்டத்தை அரசு விஸ்தரிக்குமா ? அவர்களும் இதில் பங்கு பெற்று இந்தத் திட்டத்தை வெற்றி பெறச் செய்வதற்கு அரசு புதிய திட்டத்தை ஏதாவது வகுப்பதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த நிரந்தரமான கருத்தடை சிகிச்சையில் ஆண்களுக்கு நடைபெறும் சிகிச்சை மிக எளிதானது. ஏறத்தாழ 5 நிமிடங்கள் அல்லது 10 நிமிடங்களில் அந்தச் சிகிச்சை முடிந்து விடுகிறது. பெண்களுக்கான சிகிச்சை சற்று நேரமாகக் கூடியது. அந்த அறுவை சிகிச்சை அதிகத் திறமையுடையவர்களால்தான் நடத்தப்பட முடியும். ஆகவே, நிரந்தர கருத்தடை சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தும் பொழுது ஆண்களுக்குச் செய்வது எளிதாக நிறைவேறுகிறது. பொதுவாக, ஆண்களால் ஏற்றுக்கொள்ளப்படும் நிலை அதிகமாக இருக்கிறது. இரண்டாவது, ஆண்களுக்குச் செய்யும்பொழுது கிடைக்கும் பயன் சற்று அதிகம் என்ற சமுதாயக் காரணமும் அதற்குக் காரணமாகும்.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, இந்தக் குடும்ப நலத் திட்டத்தின் மூலம் அறுவை சிகிச்சை நடைபெறுவதில் தரகர்கள், ஏஜெண்டுகள் ஆகிய பலபேர்களுக்கும் பணம் செலவாகிறது. அப்படியில்லாமல் செய்து கொள்பவர்களுக்கே பணம் அதிகமாகக் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அவரவர்கள் தாங்களாகவே முன்வந்து செய்துகொள்ளும் சமுதாயத்தை அங்கத்தினர் போன்றவர்கள் உருவாக்கினால் இடையிலே தரகர்கள் தேவைப்படமாட்டார்கள். இந்த நாட்டிலே நல்லதைச் செய்யக் கூட தரகர்கள் தேவைப்படுகிறார்கள்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, இந்தக் குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றுவதில் 1971-72 ஆம் ஆண்டில் தென்னார்க்காடு மாவட்டமும், 1972-73 ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டமும் முதன்மையிடம் பெற்றிருக்கின்றன. ஆகவே, அவை களுக்கு ஊக்குவிக்கும் முறையில் சிறப்புப் பரிசுத் திட்டம் ஏதாவது வழங்க உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் குடும்பநலத் திட்டத்தை அந்த மாவட்ட மக்கள் அதிகமாகச் செய்துகொள்ளுகிற காரணத்தால், அந்த மாவட்டங்கள் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கான வாய்ப்புகளைப் பெறுகின்றன. அதுவேதான் அதற்குப் பரிசு.

Palar water for Tambaram

* 334 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to bring Palar Water to Tambaram by the Tambaram Municipality; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) தாம்பரம் நகராட்சிக்குப் பாலாற்றிலிருந்து நீரைக் கொண்டு வருவதற்கான முதல் திட்டம் நிறைவேற்றப்பட்டு, 1968-லிருந்து செயல்பட்டு வருகிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, அதற்கு அடுத்த படியான திட்டம் எப்பொழுது செயற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பாலாற்றி லிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம்பற்றி கேட்டதால் அவ்வாறு தெரிவிக்கப்பட்டது. நகரத்திற்கு எல்லாப் பகுதி

1973 நவம்பர் 23]

களுக்கும் நீர் வழங்கும் விரிவுத் திட்டம் 47 இலட்சம் ரூபாய் செலவில் 70-வது ஆண்டு ஆலோசனை வழங்கப்பட்டு, 71-ஆம் ஆண்டிலே ஏற்றுக்கொள்ளப்பட்டு அதுவும் இப்பொழுது நிறை வேற்றப்பட்டு இருக்கிறது.

இராமநாதபுரம் மாவட்ட பேரூராட்சிகளுக்கு நீர் வழங்கல்

*335 **வினா—திரு. த. சோனையா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் பேரூராட்சிக்குக் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(இ) அத் திட்டத்தின் மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) திருப்புவனம் பேரூராட்சிக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் ஆய்வு நிலையில் உள்ளது.

(இ) ஆய்வு வேலைகள் முடிக்கப் பெற்றவுடன் திட்டத்தின் மதிப்பீட்டை கணிக்க இயலும். இருப்பினும் திட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூபாய் பதினைந்து இலட்சம் ஆகும்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, திருப்புவனம் பேரூராட்சிக்குக் குடிநீர் தர அந்தப் பேரூராட்சி கட்ட வேண்டிய பணம் கட்டி முடிந்துவிட்டது. அப்படிக் கட்டி முடிந்த பிறகும் இந்தத் திட்டம் நீண்டு கொண்டே போய்க் கொண்டிருக் கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, திருப்புவனம் பேரூராட்சிக்கு மட்டும் தனி குடிநீர் வழங்கும் திட்டம் விரைவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டு ஆய்வு வேலைகள் முடிவுற்று உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. அதற்காகும் செலவுபற்றி மதிப்பீடு தயாரிக்கப்பட்டவுடன் குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆலோசனைக்குப் பிறகு அரசின் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு. நிதி கிடைப்பதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து அதன்பிறகு நிறைவேற்றப்படும்.

[1973 நவம்பர் 23

*336 வினு—திரு. த. சோனேயா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானுமதுரை பேரூராட்சிக்குக் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத் திட்டத்தின் மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் மாவட்டம் மானுமதுரை பேரூராட்சிக்குக் குடிதண்ணீர் வழங்கும் திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் முடிந்து உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் மதிப்பீட்டை உத்தேச மதிப்பீடு முடிந்த பிறகு தான் கணிக்க இயலும். இருப்பினும் இத் திட்டத்திற்கு உத்தேசமாக முப்பத்தைந்து லட்சம் ரூபாய் ஆகும்.

திரு. த. சோனேயா: திருப்புவனம் திட்டத்திற்குப் பரிசார்த்தமாகக் கட்டக் கூடிய பணம் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பாகவே மானுமதுரைக்குப் பணம் கட்டியாகிவிட்டது. ஆனல், இன்னும் அத் திட்டம் நீண்டு கொண்டே இருக்கிறது. ஆகவே இதையாவது உடனடியாகச் செயல்படுத்த அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: உறுப்பினர்கள் திட்டத்திற்கான பணம் கட்டிவிட்டோம் என்று சொல்லும்போது அந்தத் திட்டத்தையே நிறைவேற்றுவதற்குப் பணம், முழுப் பணமும் கட்டிவிட்டதாக ஒரு தவருன எண்ணம் ஏற்படக்கூடும். இது ஆய்வு வேலே நடைபெறுவதற்கே கட்டப்படுவதாகும். வெற்றிலே பாக்கு வைத்து திருமணத்திற்கு அழைப்பு கொடுத்து விட்ட காரணத்தினல் சாப்பாடு போட்டு முடிக்கிற செலவும் அதில் அடங்கி விட்டது என்பது பொருள் அல்ல. ஆக ஆய்வு வேலேக்காகக் கொடுக்கப்பட்ட தொகையை அவர்கள் குறிப்பிடுகிருர்கள். அதற்கான முதலீடு பல இலட்சக்கணக்கான ரூபாய். அதைக் குடிநீர் வாரியம் மூலம் மக்களுக்குப் பல்வேறு பகுதிகளில் குடிநீர் கிடைக்கச் செய்வதற்கு ஆண்டுதோறும் கோடிக்கணக்கில் செலவிட வேண்டிய நிலே ஏற்படுகிற காரணத்தால் நிதிவசதிகள் இடம் தருவதற்கேற்ப இப்படிப்பட்ட திட்டம் விரைவுபடுத்தப்படும்.

1973 நவம்பர் 23]

சிறு பாலங்களை அகலமாக்குதல்

*337 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேசிய நெடுஞ்சாலைகளில் அமைக்கப்படும் கல்வெர்ட்டுக்களைப் போல் இதர சிறு பாலங்களும் (Minor bridges) 12 மீட்டர் அகலத்திற்கு அமைக்கப்படுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: நாடெல்லாம் தேசிய நெடுஞ்சாலைகள் அகலப்படுத்துகிற செயல் பல்வேறு இடங்களில் நடைபெறும் போது கல்வெர்ட்களை 12 மீட்டர் அகலத்திற்கு அமைப்பதுபோல் சிறு பாலங்களையும் 12 மீட்டர் அகலத்திற்கு அமைப்பதுபற்றி மறுபரிசீலனை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தேசிய நெடுஞ்சாலைகளுக்கு வைக்கப்படுகிற அந்த முறையை மாநில பாதைகளுக்கும் வைக்க வேண்டிய அவசியமில்லை. இப்போதுள்ள 24 அடி அகலமே போதும் என்று அரசு கருதுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்தத் தேசிய நெடுஞ்சாலைகளில் பல பாலங்களைப் புதுப்பிப்பதற்காக மாதக்கணக்கில் டைவர்ஷனில் இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த ஏற்பாடு செய்யப்படுமா? திருமங்கலத்திற்கு அருகாமையில் ஒரு இடத்தில் இப்படிப்பட்ட டைவர்ஷன் நான்கு மாத காலமாக இருக்கிறது. நெடுங்காலமாகக் கேட்கப்பட்டும் கூட ஒரு சிறு பாலம் அகலப்படுத்தப்படாமல் இருக்கிறது. ஆகவே, மெயின்டெனன்ஸ் நம் கையில் இருப்பதால் இவற்றில் கவனம் செலுத்தி ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஒரு பாலத்தைத் திறக்கும் போது எப்போது வேலை தொடங்கப்படுகிறது, எப்போது முடிக்கப் போகிறார்கள் என்ற விவரங்கள் எல்லாம் அடங்கிய பலகை போடப் படுகிறது. அதையும் மீறி வேலைகள் நடைப்பட்டிருந்தால் அரசு கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கைகள் எடுக்கப்படும். புதிதாக ஒரு பாலம் கட்டவேண்டுமென்றால் பாலத்திற்கு ஒரு செய

செயலாளர் இடத்தில் இருந்து, மத்திய அரசிடம் அனுமதி பெற வேண்டியிருக்கிறது. அப்ரோச் ரோடுக்கு இன்னொரு செயலாளரிடம் அனுமதி பெற வேண்டியிருக்கிறது. பாலத்திற்கு அனுமதி வருகிறது, ஆனால் அணுகுசாலைக்கு அனுமதி வடமாட்டேன் என்கிறது. இப்படிப்பட்ட இடைஞ்சல்கள் இருக்கின்றன. வர இருக்கிற தேசிய நெடுஞ்சாலை மாநாட்டில் இதுபற்றி நல்ல முடிவு எடுக்கப்படும் என்று தெரிகிறது.

திரு. துரை கோவிந்தராசன் : அமைச்சர் அவர்கள் சிறு பாலங்களை நெடுஞ்சாலைகளில் அமைப்பதுபோல் அமைக்க உத்தேசமில்லை என்று சொன்னார்கள். இருந்த போதிலும் தஞ்சை மாவட்டத்தில் கல்லணை போன்று ஆற்றுப் பாலங்கள் நெடுஞ்சாலையோடு இணைப்பில்லாமல் இடை இடையே அந்த ஆற்றுப் பாலங்கள் கட்டப்பட்டு அவை விரிவாக்கப்படாமல் இருப்பதால் வடிகால், வாய்க்கால் பகுதிகளிலுள்ள பாலங்களையாவது 12 மீட்டர் அகலத்திற்கு உள்ள பாலங்களாக அமைத்துத் தரும் செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நெடுஞ்சாலைகளில் என்றால் 12 மீட்டர் அகலத்தில் வைக்க வேண்டுமென்று இருக்கிறது. மாநில அரசுக்குச் சொந்தமான பாலங்களுக்கு அது தேவை இல்லை என்று கருதி 24 அடி அகலமுள்ள கல்வெர்ட்ஸ் போதும் என்று கருதப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தேசிய நெடுஞ்சாலைகளில் பல பாலங்களை உடைத்தெடுத்துவிட்டு ஒப்பந்தக்காரர்கள் அவர்களுடைய காலக்கெடு நீங்கியபோதும் அவர்கள் அவற்றைப் பூர்த்தியாக்காமல் போட்டிருக்கிறார்கள். ஆகவே காலக்கெடு நீங்கிய பாலங்களையாவது கட்டி முடிக்க உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப .உ சண்முகம் : அந்த விவரம் என்னிடம் இல்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள் எழுதியனுப்பினால் பழைய காண்ட்ராக்டை ரத்து செய்துவிட்டு புது ஒப்பந்தக்காரரிடம் வேலை செய்யுமாறு ஆணை பிறப்பிக்கப்படும்.

1973 நவம்பர் 23]

திருப்பூர் அருகே உள்ள ஜம்மனை பாலம்.

*** 338 வினு—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர்-சோமனூர் பாதையில் நகராட்சி மன்றத்திற்கு அருகில் உள்ள ஜம்மனை பாலம் கட்டும் வேலை எப்போது முடிவு பெறும்?

(இ) பால வேலை முடிவு பெறுவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) இவ்வேலை முடிவடைந்து 17—11—1973-ம் நாளன்று போக்குவரத்துக்காகத் திறக்கப்பட்டது. உறுப்பினர் தலைமை வகித்தது ஞாபகம் இருக்குமென்று கருதுகிறேன்.

வாணியம்பாடியருகே பாலாற்றின் குறுக்கே பாலம்

*** 339 வினு—திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி நகரத்திற்கும், ஜாப்ராபாத் பஞ்சாயத்திற்குமிடையே பாலாற்றின் மீது பாலம் ஒன்று கட்டுவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், அதற்கான தொடக்க வேலைகள் எப்போது தொடங்கும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) இவ் வேலையை மத்திய சாலை நிதித்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ள மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவ் வேலையை செயற்படுத்துவதற்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : பூர்வாங்க வேலைகளைத் தொடங்குவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ சண்முகம் : மத்திய அரசு ஒப்புதல் கிடைத்தவுடன் வேலையைத் தொடங்கிவிடலாம். பூர்வாங்க வேலை என்று மட்டுமல்ல, அவர்கள் ஒப்புதல் கிடைத்தவுடன் வேலையைத் தொடங்கிவிடலாம். ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறோம்.

[1973 நவம்பர் 23

Improvements for Polivakkam Chitheri

* 340 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to improve "Polivakkam Chitheri" in Tiruvallore taluk; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) ரூ. 78,000 மதிப்பீட்டில் குளத்தின் கரையை சீர்படுத்தி மதகு கலிங்கல் ஆகியவைகள் கட்டுவதற்கும் ஆழப் பகுதியில் அலேகல் கட்டுவதற்கு மான ஓர் திட்டம் பாசனத் தலைமைப் பொறியாளரால் செங்கற் பட்டு மாவட்ட ஆட்சியருடன் கலந்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : போளிவாக்கம் சித்தேரியை மேம் படுத்தும் திட்டத்திற்கு செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்ட ஒப்புதல் தந்துவிட்டார்கள். பொறியாளருடன் கூட ஒப்புதல் தந்துவிட்டார்கள். ரெவின்யூ போர்ட் அதற்கான நிதி உதவியைத் தருவார்களா?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : நிதி ஒதுக்குவது ரெவின்யூ போர்ட் அல்ல. அவர்கள் சிபார்சு செய்த பிறகுதான் அரசு நிதி ஒதுக்க வேண்டும். அரசாங்கத்திற்கு வந்த பிறகு அரசாங்கம் பரிசீலிக்கும்.

காரையார்-திருவனந்தபுரம் இணைப்புப் பாதை.

*** 341 வினு—திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி பாபநாசம் மலைப் பகுதி காரையார் செல்லும் ரோட்டின் மார்க்கமாகத் திருவனந்தபுரம் பகுதிக்குப் புதிதாக ரோடு அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1973 நவம்பர் 23]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) காரையாறிலிருந்து திருநெல்வேலி மாவட்டத்தின் மாநில எல்லைவரை ரூ. 52.50 லட்சம் அளவில் ஒரு புதிய சாலை அமைக்கும் திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பொருளாதார பல மாநில முக்கிய சாலை திட்டத்தின்கீழ் எடுத்து கொள்ளவேண்டுமென மத்திய அரசிற்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : நீண்ட நெடுங்காலமாக இந்தப் பாதையை அமைக்க வேண்டுமென்று கேட்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் ஊட்டி, கொடைக்கானல் போன்ற வாசஸ்தலங்கள் அமைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. இதையும் பரிசீலனை செய்யுமா? மீண்டும் மத்திய அரசை வலியுறுத்தி அந்தப் பாதையை அமைப்பதற்கு நம் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது பாதையைப் பற்றிய கேள்வி. முக்கிய சாலை திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ள வேண்டுமென மத்திய அரசுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. அதற்கு அனுமதி கிடைத்தவுடன் வேலை தொடங்கிவிடலாம்.

Loans to Taxi Drivers' Co-operdtive Societies

* 342 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Industries be pleased to state the amount of loan sanctioned to each of the Taxi Drivers' Co-operative Societies till 30th June 1973?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. எம். இராஜா : இப்போது நபர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் அரசாங்க பங்கு மூலதனமாகக் கொடுத்து வருகிறது. ஒவ்வொரு சொஸைட்டிக்கும். அது மிகக் குறைவாக இருக்கிறது. அதனால் டாக்சி ட்ரைவர்கள் ரூ 2,500 அவர்கள் பங்குக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்போதுள்ள நிலையில் அவர்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே,

@140-142-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அரசாங்க பங்கு மூலதனத்தை தலைக்கு ரூபாய் இரண்டாயிரம் என்று உயர்த்துவதற்கு உத்தேசம் உண்டா? அதோடு இப்போது பெட்ரோல் விலை கூடிவிட்டதால் அவர்களுக்கு அன்றாடத் தவணை அதிகமாகத் தெரிகிறது. இந்த ஐந்தாண்டுகளுக்குள் முழுத் தவணையையும் கட்டியாக வேண்டும். ஆகவே அதை ஏழு ஆண்டுகளாக மாற்றிக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த இரண்டு புதிய கோரிக்கைகளையும் பரிசீலிக்கலாம்.

திரு. த. சோனையா: கார் ஓட்டுபவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கார் வழங்குவதற்கு நகராட்சிகள், பெரிய கார்ப்பரேஷன்கள், முனிசிபாலிட்டிகள் இவைகளில்தான் வழங்குவதாகத் தெரிய வருகிறது. மேஜர் பஞ்சாயத்துக்களிலும் கூட்டுறவு முறையில் சங்கங்கள் அமைத்துக் கார் வழங்க அனுமதி கோரினால் அரசு அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்படி பல கோரிக்கைகள் வந்திருக்கிற காரணத்தால் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைத்து அதில் எல்லா ஊர்களையும், எங்கெங்கு தொடங்க விரும்புகிறார்களோ அவற்றையெல்லாம் இணைக்கலாம் என்ற ஒரு பிரச்சினையும் இருக்கிறது.

Production of Castor oil

* 343 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state the places in this State where castor oil is processed on a large scale?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆமணக்கெண்ணெய் சேலம், விருதுநகர், திருப்பத்தூர் (வட ஆற்காடு மாவட்டம்) ஆகிய இடங்களில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

THIRU N. DENNIS: Sir, may I know the prospect of export market and also whether there are State Farms?

THE HON. THIRU S. MADHAVAN: I have no details.

1973 நவம்பர் 23]

Production of Jasmine oil.

* 344 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to start a factory to produce Jasmine oil in the Public and the Private Sectors; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : அதற்கு எக்ஸ்போர்ட் மார்க்கெட் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அதற்கு ஒரு ஆலை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிற்சாலை ஒன்று அமைக்கலாமா என்ற யோசனை பரிசீலிக்கப்பட்டது. ஆனால் அது நல்ல முறையில் நடக்குமா என்று சந்தேகம் ஏற்பட்டதன் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது.

Commutation of sentences.

* 345 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Industries be please to state—

(*a*) whether remission was granted to any of the prisoners undergoing life imprisonment during this year (1972–73); and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) 1972-73-ஆம் ஆண்டு, 20 நபர்களுடைய ஆயுள் தண்டனையை குறிப்பிட்ட வருட கடுங்காவல் தண்டனையாக அரசு மாற்றி உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இன்னும் மதுரை, திருச்சி, கோவை போன்ற சிறைகளில் 10 ஆண்டுகளுக்கு அதிகமாகச் சிறை தண்டனை அனுபவிக்கிறவர்கள் 'லைஃப் இம்ப்ரிஸன்மெண்டு பிரிஸனர்ஸ்' இருக்கிறார்களா ? அவர்களுடைய விவரங்கள் தெரியுமா ?

அப்பேர்ப்பட்டவர்கள் விஷயமாக உடனடியாக தண்டனையைக் குறைப்பதற்கு அரசுக்கு ஏதாவது நோக்கம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது தண்டனையைக் குறைப்பது பற்றிய கேள்விதான். 10 ஆண்டுகளுக்கு மேலாக தண்டனை அனுபவிப்பவர்களை நாம் விடுதலை செய்யலாம் என்ற திட்டம் இருக்கிறது. அந்த ஸ்கீமின் அடிப்படையில் அவர்கள் வருவார்களேயானால் அதைக் கவனிக்கிறோம். 15 ஆண்டுகளுக்கு மேல் யாரும் இருக்கக்கூடாது, அப்படியிருந்தால் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறோம். 9 ஆண்டுகளுக்கு மேல், அதாவது 2/3 தண்டனை அனுபவித்துவிட்டால் அவர்களுடைய கோரிக்கை அரசின் அளவிலே பரிசிலனை செய்யப்பட்டு, விடுதலை செய்ய வாய்ப்பு இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பாளையங்கோட்டை ஜெயிலிலே பல ஆயுள் தண்டனைக் கைதிகள் இருக்கிறார்கள். அந்த போர்டு அவர்களைப்பற்றி பரிந்துரைகள் செய்திருந்தாலும், அவர்களில் பலருக்கு இந்தச் சலுகைகள் கிடைக்கவில்லை என்று புகார்கள் கூறப்படுகின்றன. அம்மாதிரி இருக்கிற பல புகார்களின் அடிப்படையில் வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கீழ் அளவில், போர்டு அளவில் சிபார்சு செய்யப்படுவதை பெரும்பாலும் அரசு நிராகரிப்பதில்லை. 'மர்டர் ஃபார் கயின்ஸ்' என்ற அப்படிப்பட்ட கேஸ்களில்தான் நாங்கள் தலையிடுகிறோம், கொடுக்கக் கூடாது என்று சொல்கிறோம். அப்படி அல்லாத வழக்குகள் இருக்குமானல் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அது பரிசீலிக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : ஆயுள் தண்டனையை அறவே அகற்றி, ஜன்ம தண்டனையாக மாற்றி அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் தூக்கு தண்டனையைக் குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றுகின்ற உரிமை அரசுக்கு உண்டு. அவர்களுடைய கோரிக்கையை அரசாங்கம் பரிசீலித்து முடிவு எடுக்கிறது.

1973 நவம்பர் 23]

கடலூர் சிறையிலிருந்து தப்பிய கைதிகள்

*346 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 ஆகஸ்ட் மாதத்தில் கடலூர் சிறையிலிருந்து கைதிகள் எவரேனும் தப்பி ஓடி விட்டனரா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) 31—7—1973 அன்று அதிகாலை 3-10-லிருந்து 3-45 மணிக்குள் கலியன், வடிவேல் அம்பலம், சக்கரபாணி, முத்துசாமி ஆசாரி ஆகிய நான்கு விசாரணைக் கைதிகள் கடலூர் கிளைச் சிறையிலிருந்து தப்பி ஓடி விட்டனர். இந்நால்வரில் வடிவேல் அம்பலம், முத்துசாமி ஆசாரி என்பவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். மற்ற இரு கைதிகளை பிடிப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: கிளைச் சிறையிலிருந்து கைதிகள் தப்பி செல்வது அடிக்கடி காணப்படுகிறது. ஆகவே, அவர்களுடைய கண்காணிப்பை அதிகப்படுத்த, அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது சப்-ஜெயில், கிளை சிறைச்சாலை. இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறும்பொழுது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காவல் துறையினர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

Fishermen of Kanyakumari.

*347 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether a large number of fishermen families have suffered famine conditions due to lack of fish catch at Kanyakumari in April 1973;

(b) if so, the total number of families affected thereby; and

(c) the assistance given by the Government to them?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) 18,713 குடும்பங்கள்.

(உ) 17—4—1973 முதல் 12—5—1973 வரையிலான நான்கு வார காலத்துக்கு அரிசியும் மரவள்ளிக்கிழங்கும் இலவசமாக வழங்கியதன் மூலம் அரசு ரூ. 3,33,852 உதவி வழங்கியது.

திரு. என். டென்னிஸ் : அவர்களுக்கு பஞ்ச காலம் தீரும் வரையில் நிவாரணம் கொடுக்கவில்லை. இம்மாதிரி பஞ்சம் இருக்கும் காலத்தில், பஞ்சம் தீருகின்ற வரையில் நிவாரணம் அளிப்பதற்கான திட்டங்களை அரசு வகுத்து செயல்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய சிபார்சின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்ன பிரகாரம் உதவி வழங்கப்படுகிறது. அவ்வப்பொழுது நிலைமையைப் பொறுத்துத்தான் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. உரோ. எட்மண்ட் : இப்பேர்ப்பட்ட பஞ்ச நிவாரணங்கள் அளிக்கும்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர் ஆலோசனை கேட்டு செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் ஆலோசனையைக் கேட்டு செய்வதைவிட, மாவட்டத்தில் இருக்கிற மாநில மீனவர்கள் ஆலோசனைக் குழுவில் உள்ள உறுப்பினர்களைக் கலந்து செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாவட்ட ஆட்சித் தலைவர் மீன்வள இயக்குநரைக் கலந்துதான் முடிவு எடுப்பார். அப்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை அனுப்பும்பொழுது சம்பந்தப்பட்ட அனைவரையும் விசாரித்து, கலந்துகொண்டுதான் அறிக்கை அனுப்புகிறார். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் கருத்து மனதில் கொள்ளப்படும்.

Persons affected by fire accident near Nehru Park.

* 348 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether a large number of huts were gutted near Nehru Park at Kilpauk, Madras, about 10th February 1973; and

(*b*) if so, the details thereof?

1973 நவம்பர் 23]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) 1973 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ம் தேதி அன்று காலை 4 மணி அளவில் கீழ்ப்பாக்கத்தில் அண்ணாநகர் சாஸ்திரி நகர் குடிசைப் பகுதிகளில் ஒரு தீ விபத்து நடந்தது. ஒரு மண்ணெண்ணெய் விளக்கு, இரவில் குடிசைவாசிகள் உறங்கும் பொழுது கீழே விழ்ந்ததன் காரணமாக இவ்விபத்து ஏற்பட்டது. 81 குடிசைகள் தீக்கிரையாயின. இந்த விபத்தில் உயிர்ச்சேதம் ஏதுமில்லை. இதனால் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 16,200 என்று கணக்கிடப் பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 80 விதம், 57 குடிசை சொந்தக்காரர்களுக்கு வீடுகளைத் திரும்பிக் கட்டுவதற்கும், துணிகள் வாங்குவதற்குமாக ரூ. 4,560 வழங்கப் பட்டது. இதைத் தவிர 10 குடிசைகளில் குடியிருந்தவர்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 20 விதம், துணிகள் வாங்குவதற்காக ரூ. 200 வழங்கப்பட்டது. எஞ்சியுள்ள 14 குடிசைகள் தீ விபத்தின்பொழுது காலியாக இருந்தன. பாதிக்கப்பட்டவர்களுக்கு, அருகில் இருக்கும் மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் தங்குவதற்கு இடவசதி அளிக்கப் பட்டது. மாநகராட்சி அதிகாரிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு வழங்கினர்.

திரு. என். டென்னிஸ் : பாதிக்கப்பட்டவர்களுக்கு 'மணி காம் பென்சேஷன்' கொடுப்பதைவிட, மெடீரியல்லாகக் கொடுப்பதற் கான திட்டங்களை அரசு வகுத்து செயல்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரு திட்டம் இல்லை. இந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் குடிசை மாற்று வாரியம் சீரமைப்பதாக அறிவித்துள்ளது. குடிசை மாற்று வாரியத்தின் அதிகாரிகளும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் செய்திருக்கிறார்கள்.

ஊராட்சி ஒன்றிய ஏரிகள், கண்மாய்கள் பராமரிப்பு

* 349 வினா—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தற்போது ஊராட்சி ஒன்றியங்களின் மேற்பார்வையி லுள்ள ஏரிகள், கண்மாய்கள் முதலியவை அனைத்தையும் பொதுப் பணித்துறையிடம் ஒப்படைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

*350 வினா—**திரு. த. சோனையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சிறிய நீர்ப்பாசன (Minor Irrigation Tanks) வரத்துக் கால்வாய்களை மராமத்து செய்யும் உத்தேசம் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், எந்த மானிய நிதியிலிருந்து செய்யப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சிறிய நீர்ப்பாசன வரத்துக் கால்வாய்கள் ஊராட்சி ஒன்றியங்களினால், அரசிடமிருந்து பெறப்படும் சிறு பாசன மானிய நிதியிலிருந்து மராமத்து செய்யப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சிறுபாசன நீர்நிலைகளைத் தன் வசம் எடுத்து பழுது பார்க்கும் வேலை சம்பந்தமாக குறிப்பேதும் அரசிடம் இல்லை.

திரு. த. சோனையா : சில கண்மாய்கள் பொதுப்பணித் துறையிலிருந்து மராமத்து செய்யப்படுகின்றன. சில ஊராட்சி ஒன்றியங்களினால் செய்யப்படுகின்றன. சில கண்மாய்கள் ஆர்.டி.ஓ. கண்டிரோலில் செய்யப்படுகின்றன. இப்படி சிறிய கண்மாய்கள் பல துறைகளினால் மராமத்து செய்யப்படுவதினால், கால்வாய் வெட்டும் வேலை மிகவும் தாமதப்படுகிறது. யார் செய்கின்றது என்ற பிரச்னையும் வந்து விடுகிறது. ஆகவே, எல்லா கண்மாய்களையும் ஒரே இலாகாவின் கீழ் வைத்து ஒரே மாதிரியாகச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்த யோசனையைப் பரிசீலனை செய்யலாம்.

THIRU B. VENKATASAMI : Sir, for the time being the Minor Irrigation Projects in Panchayat Unions are maintained according to the cycle system adopted by the Government. May I know, Sir, whether there is any proposal to strengthen the

1973 நவம்பர் 23]

bunds of the tanks and also to desilt the tanks, because there are many tanks which have to be strengthened? If the tanks are not desilted, the water storage capacity of the tanks will be reduced. May I know whether there is any concrete proposal with the Government in this regard?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி கண்மாய்களின் கரைகளைப் பலப்படுத்துவதற்கும், தூர் வாருவதற்கும் வேண்டிய நடவடிக்கை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து கொண்டு வருகிறது. சம்பந்தப்பட்ட இலாக்காக்களுக்கு அதற்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்று தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : ஊராட்சி நிர்வாகத்தினிடம் ஒப்படைக்கப்பட்ட கண்மாய்களை மராமத்து செய்வதற்குப் போதுமான நிதி வசதி இல்லை. அதனால் அவைகள் ஊராட்சி மன்றங்களினால் செப்பனிடப்படாமலே இருக்கின்றன. இத்துணை ஏக்கர் ஆயக்கட்டு உள்ள கண்மாய்களைத்தான் பொதுப்பணித் துறையின்கீழ் கொண்டு வரவேண்டும் என்ற ஏற்பாடு இருக்கிறது. இன்னும் சில இடங்களில் பல்வேறு கால்வாய்களை சீரமைப்பது குடிமராமத்தின்கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்தப் பழக்கம் பழைய காலத்திலிருந்து தொடர்ந்து வருகிறது. குடிமக்களினால் அவைகளைப் பழுது பார்க்க முடியவில்லை. ஆகவே, அவைகளும் சீர்கெட்டுப்போன நிலைமையில் இருக்கின்றன. எல்லாவற்றையும் பொதுப் பணித் துறையிலேயே மராமத்து செய்யவேண்டும் என்று உத்தரவிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்சமயம் நிர்வாகச் சீர்திருத்தக் குழு சிபார்சின்படி 100 ஏக்கர்களுக்கு மேற்பட்டு ஆயக்கட்டுள்ள ஏரிகள் பொதுப்பணித் துறையின் கீழ் மாற்றப்படலாமா என்ற யோசனையை பரிசீலனை செய்து கொண்டு வருகிறோம். அதைப்போலவே வரத்து வாய்க்கால், கால்வாய்களை ஆழப்படுத்தி, தூர் வாருவதற்கு அதிகத் தொகை ஒதுக்கவேண்டும் என்று அரசு தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : There is a great overlap of works. Some works are done by the Panchayat Unions and also Public Works Department. It is a waste of time and waste of money also. The overlap should be avoided. It would be better if

the work is entrusted to the Public Works Department. Will the Hon. Minister for Local Administration be pleased to see that all these works are entrusted to the Public Works Department rather than to the Panchayat Unions in the interest of efficient work?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, சில பெரிய ஏரிகளை பொதுப்பணித் துறையினர் மராமத்து செய்கிறார்கள். பாசன வசதி உள்ள ஆயக்கட்டு ஏரிகளை வருவாய்த் துறையினரும் மற்றும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை ஊராட்சி ஒன்றியத்தினரும் மராமத்து செய்து வருகிறார்கள். இப்படி இருந்தாலும், பொது முக்கியத்துவத்தைக் கருதி, சில பாசனத் திட்டங்களை பொதுப்பணித் துறைக்கு மாற்ற வேண்டியிருந்தாலும் அவ்வாறு மாற்றுவதற்கு அரசாங்கம் யோசனை செய்துகொண்டிருக்கிறது.

வராக நதியின் குறுக்கே பாலம்

*351 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், குள்ளப்புரத்தில் வராக நதியின் குறுக்கே ஓர் பாலம் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இவ்வேலை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பரிசீலிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

திரு நா. வெ. குருசாமி: தலைவரவர்களே, இந்தப் பாலமானது கட்டப்பட்டால் ஆண்டிப்பட்டிப் பகுதியிலிருந்தும், வரிசநாடு மலைப்பகுதியிலிருந்தும் திண்டுக்கல் செல்லக்கூடிய மக்களுக்கு சுமார் 20 மைல் குறையும். ஆகவே, இந்தப் பாலத்தை விரைவில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இந்தப் பாலம் கட்டவேண்டிய இடம் வராக நதியில் மருதப்பட்டிக்கும் ஆண்டிப்பட்டிக்கும் இடையே கட்டப்பட வேண்டியது என்று கருதுகிறேன். அதற்குத் தோராயமாக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டதில் 5 லட்சம் ரூபாய் செலவாகும் என்று பொறியாளர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை இந்த வேலைத் திட்டத்தில்

1973 நவம்பர் 23]

சேர்த்துக்கொள்வதா வேறு வேலைத் திட்டத்தில் சேர்த்துக்கொள் கொள்வதா என்பதை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தில் நிதி வசதி இல்லாததே அதற்குக் காரணம்.

திரு. நா. வெ. குருசாமி: மதுரை கோட்டப் பொறியாளர் அவர்கள் 28—8—1971 அன்று சுமார் 7,50,000 ரூபாய் இந்த வேலைத் திட்டத்திற்கு செலவாகும் என்று மதிப்பிட்டுள்ளார்கள். அந்த மதிப்பீட்டை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும் சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஏற்கெனவே மருதப் பட்டி-வாடிப்பட்டித் திட்டத்திற்கு 5 லட்சம் ரூபாயும், அதைப் போலவே குள்ளபுரம்-மருதப்பட்டித் திட்டத்திற்கு 3 லட்சம் ரூபாயும் ஆகுமென்று தனித்தனியாக பட்டியல் வெளியிடப்பட் டிருக்கிறது. அதையும் இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறை வேற்ற நிதி வசதி இல்லாததால் வேறு வேலைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாமா என்று தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

வேதாரண்யம் கால்வாயின் குறுக்கே பாலம்

*** 352 வினா—திரு. அ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் வட்டம், கருவேலன்கடை கிராமத்திற்கருகில் வேதாரண்யம் கால்வாயின் குறுக்கே பாலமொன்று கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம்: கருவேலங்கடை, வடக்கு பொய்கைநல்லூர் கிராம மக்களிடமிருந்து வந்த கோரிக் கையின் பேரில், நாகப்பட்டினம் தாலுகாவில் கருவேலங்கடை கிராமத்திற்கு அருகில் வேதாரண்யம் கால்வாயின்மேல் பாலம் கட்டுவது பற்றி தலைமைப் பொறியரின் ஆலோசனையை அறிந்து அரசாங்கத்தால் ஆராயப்பட்டது. இந்தப் பால வேலைக்கு சுமார் 1.25 இலட்சம் செலவாகும் என்று கூறப்பட்டது. அரசின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்தப் பால வேலையை வளமான காலம் வரும்வரை தள்ளிப் போடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடசேரிக்கருகே பாலம் அமைப்பு

*353 வினா—திரு. நா. கிருட்டிணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், வாணியம்பாடி வட்டம், வடச்சேரி கிராமத்தில் (அரிசன காலனி) சிறு பாலம் (கல்வெர்ட்) கட்ட அரசு அனுமதித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அவ்வேலை தற்போது என்ன நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) இவ்வேலைக்கு அரசு அனுமதி அளிக்கவில்லை. ஆனால் இவ்வேலை பேரூராட்சி ஊராட்சி ஒன்றியத்தால் நடப்பாண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

Hostel for Co-operative trainees at Kancheepuram

* 237 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether the Kancheepuram Co-operative Training Institute has made any request to the Government to provide funds during 1973 for the construction of a Hostel for the trainees; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) & (இ) தலைவரவர்களே, 3.50 லட்சம் ரூபாய் அரசிடம் உதவி கேட்டு, கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருக்கு விண்ணப்பிக்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் பரிசீலனை செய்து இரண்டு லட்சம் ரூபாயைக் கடனாக வழங்கியுள்ளார்.

திரு. என். டென்னிஸ் : அந்தக் கட்டடத்தில் எத்தனை பேருக்கு அக்காமடேஷன் இருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இந்த ஆண்டு 516 பேர்களுக்கு இடவசதி இருக்கும்.

1973 நவம்பர் 23]

Co-operative Super Markets

*238 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased state—

(*a*) the number of Co-operative Super Markets in this State at present; and

(*b*) the number proposed to be started during 1973–74?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) பதின்மூன்று.

(இ) ஏழு.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, கூட்டுறவு சிறப்பங்காடிகள் 13 இருப்பதாகச் சொன்னார்கள். அவைகளில் லாபகரமாக எத்தனை சிறப்பங்காடிகள் நடைபெறுகின்றன, நட்டத்தில் எத்தனை சிறப்பங்காடிகள் நடைபெறுகின்றன என்ற விபரத்தை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா? நட்டமாக செயல்படுவதற்குக் காரணம் இந்த அங்காடிகள் விற்பனை வரியில் தனியார் போல் ஏய்ப்பு செய்ய முடியாது. அதனால் தனியாரோடு போட்டி போட முடியாது. இந்த விற்பனை வரியை ரத்து செய்தால் லாபத்தில் செயல்படலாம். ஆகவே விற்பனை வரி விலக்களிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, 13 சிறப்பங்காடிகளில், காமதேனு, காவேரி, கற்பகம், திருச்சி, சேலம், மதுரை, நெல்லை இவைகளில் 1972-73-ம் ஆண்டில் நட்டம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். தஞ்சை-காவேரி, சரவணா-கடலூர், சிந்தாமணி-கோவை, கருணாநிதி-ஊட்டி, பகவதி-நாகர்கோவில் இவைகள் லாபத்தில் இயங்கிக்கொண்டிருப்பதாக கணக்கிட்டிருக்கிறார்கள். நட்டமாக இயங்கிக்கொண்டிருந்தவைகள் கூட 1973-74-ம் ஆண்டில் லாபகரமாக இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு கே. எ. வகாப்: தலைவரவர்களே, கோவையிலே இருக்கிற சிந்தாமணி சிறப்பங்காடி இந்த ஆண்டு ஆசியாவிலேயே மிக அதிகமாக விற்பனை செய்த கூட்டுறவு அங்காடி என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்த அங்காடியில் எப்படி விற்பனையைப் பெருக்கி, லாப

மடைகிறார்கள் என்பதை அறிந்து அந்த நடைமுறைகளை மற்ற சிறப்பங்காடிகளிலும் பின்பற்றச் செய்வதற்கு, அவர்களுக்கு இந்த அங்காடியில் பயிற்சியளிக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சென்ற திங்களில் இதற்காகவே எல்லா சிறப்பங்காடிகளிலும் பணியாற்றுகின்ற அதிகாரிகளையும் அழைத்து, தனிப்பட்ட வியாபாரிகளையும் அழைத்துப் பேசியிருக்கிறோம். பொதுவாக கொள்முதல் செய்வதில் கோவை சிறப்பங்காடி சிறப்பாகச் செயல்பட்டதினால் நல்ல முறையில் இயங்கி, லாபமடைய முடிந்ததாகத் தெரிகிறது. கொள்முதல் செய்வதற்கு ஒரு குழு அமைப்பதற்கு முயற்சி செய்யப்படுகிறது. விரைவில் அது முடிவுபெறும் என்று கருதுகிறேன். கோவை கூட்டுறவு சிறப்பங்காடியைப் பின்பற்றி, இப்போது திருச்சி சிறப்பங்காடி நடைபெற்று லாபகரமாகச் செயல்படுகிறது என்று சொல்லப்படுகிறது.

Gudiyatham Town Co-operative Society

* 239 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether a petition, dated 17th January 197 and signed by the members of the Gudiyatham Town Co-operative Society, Gudiyatham regarding the unreasonable closure of the society has been received by him; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 1961, பிரிவு 65-ன் கீழ் பண்டகசாலையின் நடவடிக்கைகளிற்கான ஓர் விசாரணை நடந்து வருகிறது.

திரு. எ. க. துரைசாமி : தலைவரவர்களே, இயக்குநர்களில் சிலர் அந்தச் சங்கத்தில் 2,400 ரூபாய் கையாடல் செய்ததை ஒப்புக் கொண்டு, அந்தப் பணத்தைத் திருப்பிக் கட்டிவிடுவதாகச் சொல்லி அரசுக்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்களா? அப்படியானால் அவர்கள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெற அரசு முன்வந்திருக்கிறதா? அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

1973 நவம்பர் 23]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அதே பண்டகசாலையில் முதலில் கையாடல் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுவது 2,405 ரூபாய். மீண்டும் பரிசிலனை செய்ததில் 74,211 ரூபாய் என்ற அளவுக்கு மேலும் மோசடி செய்யப்பட்டிருப் பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, 2,400 ரூபாயைக் கட்டிவிட்டால் மோசடி செய்தவர்களை விட்டுவிட முடியாது.

New buses on express bus routes

* 354 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state the number of express buses that have been replaced by new ones during the years 1971–72 and 1972–73?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பழைய விரைவுப் பேருந்துகளுக்குப் பதிலாக விடப்பட்ட புதிய விரைவுப் பேருந்து களின் எண்ணிக்கை 1971-72-ம் ஆண்டில் 84-ம், 1972-73-ம் ஆண்டில் 54-ம் ஆகும்.

திரு. என். கே. பழனிசாமி: வாங்கக்கூடிய புதிய பஸ்கள் எல்லாம் அதிக தூரம் செல்லக்கூடிய ரூட்டுகளில் விடப்படுகின்றன. அதனால் பெரிய அளவில் நகரங்களில் ஓடக்கூடிய பஸ்கள் அடிக்கடி அங்கங்கே நின்றுவிடுகின்றன பழுதுபட்டு. எக்ஸ்பிரஸ் பஸ்களும் நின்று விடுகின்றன. அப்படி இருக்கும்போது போன வருஷத்தை விட இந்த வருஷம் புதிய பஸ்கள் வாங்கும் எண்ணிக்கையை குறைத்துவிட்டதற்கு என்ன காரணம் என்பதை அறிவிப்பார் களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நெடுந் தூரம் செல்லுகின்ற விரைவுப் பேருந்து வழித் தடங்களில் புதிய பேருந்துகளை விடவேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது. காரணம் பழைய பேருந்துகளை விட்டால் ஒருவேளை பழுது ஏற் பட்டு விடலாம் என்ற எண்ணம். ஆகவே, அரசின் முடிவுப்படி இரண்டு ஆண்டுகள் புதிய பஸ்கள் நெடுந்தூர விரைவு பேருந்து களாக விடப்பட்டு, அதற்குப் பின்னால் அவை மாவட்ட அளவிலும், மற்ற குறைந்த தூர வழித் தடங்களிலும் விடப்படுகின்றன.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, பொதுவாக நம்முடைய போக்குவரத்துத் துறையில் இப்போது நல்ல முன் னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் சில குறைபாடுகள்

இருக்கின்றன. சில பஸ்களில் ஸ்டெப்னி இருக்கிறது; ஜாக்கி இருக்கிறது; ஆனல் 'வில் ஸ்பானர்'—டயரைக் கழற்றக்கூடிய சாதனம் இல்லை. கடந்த வாரம் தூத்துக்குடியிலிருந்து மதுரைக்கு வந்துகொண்டிருந்த ஒரு பேருந்தில் 'வில் ஸ்பானர்' மட்டும் இல்லாததால் இரண்டு மணி நேரம் வழியிலே நிற்கவேண்டி வந்தது. ஒரு டயர் பஞ்சர் ஆகிவிட்டது. வில் ஸ்பானர் இல்லாததால் அதைக் கழற்றி மாற்ற முடியவில்லை. அதனல் பிரயாணிகள் பெரிதும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. எனவே, பழுது பார்ப்பதற்குரிய எல்லா சாதனங்களையும் பஸ்சில் வைத்திருக்கச் செய்து, இந்த மாதிரியான சிறிய சிறிய குறைபாடுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இங்கொன்றும் அங்கொன்றுமாக இத்தகைய சிறு குறைபாடுகள் அரசின் கவனத்திற்கு வந்துகொண்டிருக்கின்றன. அதனல் நீண்டதூர விரைவுப் பேருந்துகளை சரியாகப் பராமரிப்பதற்காக—முழுக் கவனம் செலுத்தக்கூடிய வகையில் அதற்கென்று தனியாக ஒரு வாரியத்தை அமைக்கலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

புன்னப்பாக்கத்திற்குப் பேருந்துப் பணி

*** 355 வினு—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

வழித்தடம் எண் 101-ஏ பேருந்தினை திருவள்ளூர் வட்டம், புன்னப்பாக்கம் கிராமம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பினை நிறைவேற்றுவதில் மேலும் காலதாமதம் ஏன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: புன்னப்பாக்கத்திற்குச் செல்லும் சாலையின் மேற்பரப்பு சமமற்றதாய் இருப்பதோடு, அச்சாலையில் திடீரெனத் திரும்புகிற இரண்டு குறுகிய வளைவுகளும் உள்ளன. மேலும் இரு வழிகளிலும் பேருந்துகள் போய் வருவதற்கேற்றவாறு இச்சாலை போதுமான அளவு அகலமானதாக இல்லை.

*** 356 வினு—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழித்தடம் எண். 98-ஐ, திருவள்ளூர் வட்டம், புன்னப்பாக்கம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

1973 நவம்பர் 23]

(இ) ஆம் எனில், எப்போது நீட்டிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) புன்னப்பாக்கம் கிராமத்திற்குச் செல்லும் சாலை, பேருந்துப் போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லை. எனவே 98-ம் எண் வழித்தடத்தை திருப்பி விடுவதோ நீட்டிப்பதோ சாத்தியமில்லை.

எண்ணெய் ஆலைகள் தொடக்கம்.

*** 357 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்-கிராம தொழில் வாரிய பிரிவின் மூலம் எண்ணெய் எடுக்கும் ஆலைகளைத் தொடங்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : எண்ணெய் எடுக்கும் ஆலைகளைத் துவங்கும் திட்டம் ஏற்கனவே பரிசிலனையில் இருந்து, அதற்கு அறிக்கையும் சமர்ப்பித்தார்கள். ஒருவேளை அது கைவிடப்பட்டது என்றால் அவ்வாறு கைவிட்டதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் அரிசித் தவிட்டிலிருந்தும், செக்குப் புண்ணாக்கிலிருந்தும் எண்ணெய் எடுக்கும் திட்டம் மேற்கொள்வதாக இருக்கிறது. அப்படிப்பட்ட திட்டம் நாமக்கல் பகுதியில் முதலாவதாக ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

*** 358 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்-கிராம வாரியத்தின் மூலமாக எண்ணெய் தயாரிப்புக்கென மின் விசையில் இயங்கும் செக்குகளை அறிமுகப்படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1973 நவம்பர் 23

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) எண்ணெய் தயாரிப்புக்கென மின்விசையில் இயங்கும் செக்குகளை நிறுவும் திட்டம் 1971-72 முதல் தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

(இ) கிராமிய எண்ணெய் தொழிலில் ஈடுபட்டுள்ள எண்ணெய் உற்பத்தியாளர்களின் வருவாயைப் பெருக்கவும் அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் பம்பாய் கதர்-கிராமத் தொழில் ஆயம் இத்திட்டத்தை புகுத்தியுள்ளது. கதர் ஆயம் மின் விசையால் இயங்கும் செக்குகளை நிறுவ ரூ. 3,000 கடனாக நிதி உதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தற்போதுள்ள மர செக்குகளுக்கு மின் விசையால் இயங்கும் உலக்கைகள் பொறுத்தப் படுகின்றன. இந்த உலக்கைகள் மும்முனை மின் இணைப்பால் இரண்டு குதிரை சக்தி மோட்டாரைக் கொண்டு இயக்கப்படுகின்றன. ஒரு மின் உலக்கையின் விலை இதர வரிகள் நீங்கலாக ரூ. 2,100 ஆகின்றது. கதர் ஆயம் வழங்கும் கடன் ரூ. 3,000-த்தில் மிகுதி தொகை மின்விசை செக்கை நிறுவும் செலவிற்கு பயன்படுகின்றது.

திரு பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த மின்விசையால் இயங்கும் செக்குகளைத் தற்போது எந்த எந்தப் பகுதியில் அமைத்திருக்கிறார்கள் என்கிற விவரம் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, எந்த எந்தப் பகுதியில் என்கிற விவரம் தற்போது என் கைவசம் இல்லை. ஆயினும் 1971-72-ம் ஆண்டுக்கு 54 மின்விசையில் இயங்கும் செக்குகளும், 1972-73-ம் ஆண்டுக்கு 61 மின்விசையினால் இயங்கும் செக்குகளும், இந்த நடப்பு ஆண்டு 1973-74-க்கு 250 மின்விசையினால் இயங்கும் செக்குகளும் நிறுவ கதர்-கிராமத் தொழில் வாரியம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: மின்விசைச் செக்குகள்—மின் வெட்டு வந்த பிறகு எத்தனை நடைமுறையில் இருந்திருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு கண்ணப்பன்: அதுபற்றிய தகவல் தற்போது இல்லை.

1973 நவம்பர் 23]

திரு. கே. டி. கே. தங்கமணி: கதர்-கிராம தொழில் வாரியத்தின் மூலம் முன்பு கைக்குத்தல் அரிசிக்கு பண உதவி செய்யப்பட்டது அது சரியாக நடைபெறவில்லை என்றும் இந்த மன்றத்தில் சொல்லப் பட்டது. இப்போது செக்குத் தொழிலுக்குப் பணம் கொடுக்கப்படு கிறது. உண்மையில் செக்கு இருக்கிறதா என்று பார்த்துப் பண உதவி செய்யப்படுகிறதா? அம்மாதிரி இருந்தால் அந்த விவரம் தர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இந்தச் செக்குகளுக்குப் பணம் தனியார்களுக்கு நாம் வழங்குவதில்லை. கூட்டுறவுச் சங் கங்களுக்கு மட்டும்தான் கொடுக்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன்: கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் நோக்கமே கிராமங்களில் வேலையில்லாதிருக்கிறவர்களுக்கு வேலை அளிக்க வேண்டும் என்பதுதான். கதரைப் பொறுத்தவரையில் ராட்டையில்தான் நூற்கவேண்டும் என்பதுபோய் மின்சாரத்தி னாலும் நூற்கலாம் என்று வந்துவிட்டது. இப்போது மின்விசைச் செக்குகளுக்குப் பணம் கொடுப்பதாகச் சொன்னால் கைச் செக்கு கள் என்ன ஆவது? இதனால் கிராமத்திலுள்ளவர்களுக்கு வேலை அளிக்கவேண்டும் என்கிற நோக்கமே அடிபட்டுப் போகிற தில்லையா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: செக்குகளை மின்விசை மூலம் இயக்குவதன் மூலம் யாரும் வேலை இழக்கமாட்டார்கள். மாடுகளுக்குப் பதிலாக மின்விசை செக்கை இயக்குகிறது. அதோடு அவர்களுக்கு இதுவரை கிடைத்துவந்த ஊதியமும் கூட அதிகப் பட வாய்ப்பிருக்கிறது. இது கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் அகில இந்திய அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டுத்தான் தமிழ்நாட் டிலும் நாம் இதைச் செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அவையுரிமைப் பிரச்சினைகள்.

(அ) 'தென்னகம்' நாளேட்டில் பேரவைத் தலைவர் மீது களங்கம் ஏற்படுத்தும் செய்தியை வெளியிட்டது குறித்து—தொடர்ச்சி.

MR. SPEAKER : The hon. Member Thiru N. Veerasami has raised a matter of privilege yesterday against the daily 'THENNAGAM', dated 20th November 1973 wherein the proceedings of this House had been published under the heading :

"அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் உரிமையை தட்டிப் பறிக்கும் புலவர் கோவிந்தனின் போக்கை எதிர்த்து அண்ணா தி.மு.க. வெளிநடப்பு"

It is a well-recognised principle of parliamentary privileges that to print or publish any libel reflecting on the proceedings of the House is a high violation of the rights and privileges of the House. This is based on the doctrine that such acts tend to obstruct the House in the performance of its functions by diminishing the respect due to it. It has been held by the House of Commons that it was contempt of the House to publish anything which has a tendancy to impede the House in the performance of its functions and will bring such House into odium, contempt or ridicule. The Speaker represents the House and anything which reflects upon his conduct in the House is definitely a contempt of the House. This principle has been laid down in several decision in the House of Commons as well as in the Lok Sabha. In the instant case, the heading

"அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் உரிமையைத் தட்டிப் பறிக்கும் புலவர் கோவிந்தனின் போக்கை எதிர்த்து . . ."

is definitely an aspersion on the imparatiality of the Speaker and hence the publication referred to in the notice will clearly amount to a breach of privilege and contempt of the House.

However, I am of opinion that it would be better if we preserve the dignity of the House by not taking any serious notice or action in the case of publication of every defamatory statement which may constitute a breach of privilege or contempt of the House,

1973 நவம்பர் 23] (Mr. Speaker)

and the House can best consult its own dignity by not taking serious notice of them. So, the publication in 'Thennagam' need not be taken serious notice of.

(ஆ) திரு. எம். ஏ. லத்திப் பேரவையைப்பற்றிக் குறிப்பிட்ட சில சொற்கள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு அவையுரிமைப் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார்கள். அதைக் கொண்டுவருவதற்கு நான் அவரை அனுமதிக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பேரவைத் தலைவர் அவர்களே, 184-வது பிரிவுப்படி நான் கொண்டுவந்திருக்கக்கூடிய ப்ரிவிலேஜ் மோஷன் 21-ம் தேதி இந்தச் சட்டமன்றத்தில் திருமதி அனந்தநாயகி அவர்கள் எழுப்பிய உரிமைப் பிரச்சினையின் பேரில் விவாதம் நடந்து கொண்டிருந்தபோது, நமது மாண்புமிகு மெம்பர் லத்திப் அவர்கள் 'The House is going to dogs' என்று குறிப்பிட்டார்கள். இது ஒரு சாதாரணமான சொல் என்று விடுவதற்கில்லை. நமது சபை நடவடிக்கைகளைப்பற்றி வெளியில்பத்திரிகையில் தவருக எழுதினாலும் கூட அதை நாம் ஒதுக்கி விடலாம் என்பது போன்றது அல்ல. சபையிலுள்ள ஓர் உறுப்பினரே இந்த சபையைப் பற்றி 'The House is going to dogs' என்பதாகக் குறிப்பிடுவது வேதனைக்குரியதாக இருக்கிறது. இந்த அவையிலுள்ள ஓர் உறுப்பினர் மீதே உரிமைப் பிரச்சினையை எழுப்புவது எனக்குச் சங்கடமான விஷயம் தான். ஆயினும் அவையின் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதனுல், தவருன நிலைக்குப் போனாலும் அதைச் சரிசெய்யவேண்டும் என்பதனுல் நான் இதை எழுப்பியிருக்கிறேன். இந்தச் சபை ஒழுங்காக நடக்கவில்லை, 'The House is going to dogs' என்று சொல்வது, நாம் என்ன வேறு பிராணிகளாக ஆகிவிட்டோமா என்று வருந்தத் தக்க அளவுக்கு கவலைப்படுகிற போக்காக இது இருக்கிறது.

'There is a clear imputation that the House is not performing its duties in the way it should do' என்ற ஒரு அம்சத்தை வைத்து நான் இதை எழுப்புகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[1973 நவம்பர் 23

திரு. எம். ஏ. லத்திப் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் நான் இரண்டு தினங்களுக்கு முன்பு இந்த அவையில் உபயோகித்த வாக்கியம் குறித்து இங்கே உரிமைப் பிரச்னை கொண்டு வந்து இருக்கிறார்கள்.

இந்த அவையின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும், அவையின் நடவடிக்கைகள் செம்மையாக நடைபெற வேண்டும் என்ற எண்ணத்தைக் குலைக்கும் வகையில் எந்த விதமான ஆங்கிலச் சொற்றொடர்களும் இந்த அவையில் பயன்படுத்தக் கூடாது என்ற கவலையில் மாண்புமிகு தங்கமணி அவர்கள் இந்தப் பிரச்னையை எழுப்பி இருப்பதைப் பற்றி நான் மெத்த மகிழ்ச்சி யடைகிறேன். அந்த எண்ணத்தின் அடிப்படையில் தான். சபாநாயகர் அவர்கள்—ஒரு மரபு பல ஆண்டுகாலமாக பின்பற்றப் பட்டு வருகிறது—எழுந்து நின்றால் மற்ற உறுப்பினர்கள் எழுந்து நின்று பேசக் கூடாது. அது ஒரு ஜனநாயக மரபு. அந்த மரபைக் குலைக்கும் வகையில் சபையிலே ஏதாவது நிகழ்ச்கள் நடந்தால், அது எந்த உறுப்பினராக இருந்தாலும் சரி, ஒரு உறுப்பினர் தலைவரின் ஆணைக்குக் கட்டுப்படாமல் நடந்து இருந்தால் கடைசி ஆயுதமாக சபாநாயகர் அவர்கள் எழுந்து நின்று அப்படி எழுந்து நிற்பதன் வாயிலாக சபாநாயகரின் ஆணைக்குக் கட்டுப்படாமல் பேசிக்கொண்டிருக்கும் உறுப்பினரை உட்காரச் செய்வது ஒரு சிறந்த மரபாக நாம் கடைபிடித்து வருகிறோம். ஆனால் அன்றைய தினம் சபாநாயகர் அவர்கள் எழுந்து நின்றுகொண்டிருந்தும் 4-5 உறுப்பினர்கள் தொடர்ந்தாற்போல் எழுந்து நின்று பேசிக் கொண்டிருந்த நிலையில் தான், அந்த மரபு மீறப்படுகிறது என்ற எண்ணத்தில் நான் அந்தச் சொற்றொடரை
going to dogs' என்று சொன்னேன். அந்த சொற்றொடர் ஆங்கிலத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு இடியம். 'இடியம்' என்று சொன்னால் 'மரபு மொழி, மரபு சொற்றொடர்' என்று பொருள். அந்தச் சொற்றொடர் மசபாக, வழக்கமாக, பாரம்பரிய மாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

1973 நவம்பர் 23]

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். உரிமை மீறல் இருக்கிறதா இல்லையா என்று சொல்வதை விட்டுவிட்டு ஏதோ வியாக்கியானம் சொல்லிக் கொண்டிருக்கிறார். அன்றைக்கு மிகவும் முக்கியமான பிரச்னைமீது பேசுவதற்கு அனுமதி தர நேரம் இல்லை என்று சொன்னீர்கள். இவர் வியாக்கியானம் கொடுத்துக் கொண்டிருப்பதை எப்படிக் கேட்பது?

திரு. எம். ஏ. லத்தீப்: அந்த மரபு மொழிக்குட்பட்டுத்தான் சொன்னேன். 'இடியம்' என்ற சொற்றொடர் ஆங்கிலத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். நம்முடைய அம்மையாரைப் போன்றவர்கள், மதிப்பிற்குரிய தங்கமணி போன்றவர்கள் அதை நல்ல முறையில் அறிந்து இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். நான் ஒரு வழக்கறிஞன் என்ற முறையிலும், அதே நேரத்தில் ஆங்கிலத்தில் தங்கமணி அவர்கள் போல் இல்லாவிட்டாலும் ஓரளவிற்கு தெரிந்தவன் என்ற முறையிலும், எவ்வளவுதான் உணர்ச்சிகளுக்கு உட்பட்டாலும், ஆத்திரத்திற்கு ஆட்பட்டாலும், அந்த ஆத்திரத்தில் உணர்ச்சியில் பேசினாலும், எந்த ஒரு தவறான வார்த்தையும் என்னுடைய வாயிலிருந்து சொல்லக்கூடாது என்று நான் பழக்கப்பட்டவன். நான் அப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லும் பழக்கத்தை உடையவனும் அல்ல. அப்படிச் சொல்லவும் மாட்டேன். இந்த மன்றத்தின் மரபுகள் காப்பாற்றப்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் சொன்னேன். எந்த ஒரு உறுப்பினரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்பதை மட்டும் நான் உறுதியாகச் சொல்கிறேன். ஒரு களங்கமும் வரக் கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் சொல்லப் பட்டது, யாரையும் புண்படுத்தவேண்டுமென்ற எண்ணத்தில் சொல்லப்பட்டது அல்ல என்பதை மட்டும் உறுதியாகத் தெரிவித்து முடிவை, தலைவரவர்களே, உங்களுக்கு விடுகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): மிஸ்டர் ஸ்பீக்கர் சார், நான் ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, அந்த வார்த்தைகள் The House is going to dogs ஒரு இடியம் என்று திரு. லத்தீப் அவர்கள் கூறினார்கள். அதன் பொருள் என்ன

என்பதற்கு 'சேம்பர்ஸ் டிக்ஷனரியில்' என்ன பொருள் கூறப்பட்டிருக்கிறது என்ருல் 'to be ruined' அப்படியாஞல் 'The House is to be ruined' என்று சொல்வது மாதிரி பொருள் ஆகிறது. ஆதலால் தயவுசெய்து நம்முடைய மாமன்றத்தின் மரபைக் காப்பாற்றும் வகையில் இந்த மாதிரியான ஆங்கில சொற்களை நாம் உபயோகிக்கும் நேரத்தில் அது கடுமையாக இருக்காமல் இருப்பதற்கு அதைத் திரும்பப் பெற்றுக்கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். நான் மிகவும் வேதனைப்பட்டு, அதிலும் குறிப்பாக 'அப்போசிஷன் பிளாக்கில்' இருக்கிற ஒரு அங்கத்தினருக்கு இந்த மாதிரியான நிலைமை யேற்பட்டதே என்பதற்கும் வருத்தம் தெரிவிக்க வேண்டியவனாக இருக்கிறேன். ஆதலால் இந்தப் பிரச்னையை வெகு நேரம் நீட்டிக் கொண்டிருக்காமல் அதைத் திரும்பப்பெற்றுக் கொண்டு இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு ஏற்படுத்துவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்ற கருத்தை தலைவரவர்களே, உங்கள் மூலமாக அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, நான் என்னுடைய கருத்தைச் சொல்லிவிட்டேன். அந்த மரபு மொழியை, இடியத்தை நலல எண்ணத்தில்தான் பயன்படுத்தினேன். யாரையும் புண் படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் பயன்படுத்தவில்லை. நான் அந்த மாதிரி எண்ணத்தில் சொல்லவில்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நேற்றையதினம் அலுவல் ஆய்வுக்குழுவில் தங்களுடைய தலைமையில் அனைத்துக்கட்சித் தலைவர்களும், ஆளும் கட்சியின் சார்பில் நானும் அமர்ந்து இது பற்றிப் பேசி ஒரு முடிவு எடுத்து இருக்கிறோம். அந்த முடிவின்படி, நேற்றைக்கு திரு. லத்தீப் அவர்கள் யாருடைய மனதையாவது புண்படுத்தியிருந்தால் வருத்தம் தெரிவிப்பதாகச் சொல்லியிருந்தார்கள். அது இப்போது நடைபெறவில்லை. அது நடைபெற்றுவிட்டால் எல்லாம் முடிந்து விடும் என்று கருதுகிறேன்.

1973 நவம்பர் 23]

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, அலுவல் ஆய்வுக்குழுவில் பேசப்பட்டதைப் பற்றிச் சொன்னார்கள். நான் அலுவல் ஆய்வுக் குழுவில் சாதாரணமாகச் சொல்லிக் கொண்டிருந்தேன். அந்த ஆங்கில சொற்றொடரைப் புரிந்து கொள்ளாமல், தன்னைத்தான் சொன்னார் என்று யாராவது எடுத்துக் கொண்டால், அதற்காக நான் அந்த வார்த்தைகளை அங்கே சொன்னேன். முனு ஆதி அவர்கள் அப்படிச் சொல்லட்டும். முனு ஆதி வந்து சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிப்பட்ட உறுப்பினரைப் பற்றியது அல்ல இது. ஒரு உறுப்பினர் வருத்தம் இருப்பதாகத் தெரிவித்தாலும் வருத்தம் தெரிவிப்பதாகச் சொன்னீர்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : திரும்பவும் சொல்கிறேன், நான் இந்த அவையின் கௌரவத்தைக் குலைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அந்த வார்த்தைகளைப் பயன்படுத்தவில்லை. நிச்சயமாக அப்படிச் சொல்லமாட்டேன் என்ற உறுதியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அவர் 'இடிய'-த்தைப் புரிந்து கொள்ளவில்லையென்றால், என்று சொல்கிறார்கள். There is an insinuation. We cannot tolerate it. What is that idiom ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேரவைத் தலைவர் அனுமதியில்லாமலே பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

இந்த உரிமை மீறல் பிரச்னை மீது, என்னுடைய தீர்ப்பை நான் நாளை தெரிவிக்கிறேன்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) சென்னை, இராயபுரம் கல்மண்டபத்துக்கருகில், உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் மீது போலீசார் தடியடி நடத்தினார்கள் எனச் சொல்லப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. டி. கே. தங்கமணி, அவர்கள் 'The Police lathi charge on 20th November 1973 on 5,000 strong high school students' procession near Kalmandapam, Royapuram, Madras injuring several students and consequent unrest. The procession is at the call of the Tamil Nadu Students Federation to cancel the S.S.L.C. Examination fees'.

என்ற பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். இது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு எவ்வாறு உகந்தது என்பதைப் பற்றி சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், தமிழ்நாடு மாணவர் மன்றம் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்கு 30 ரூபாய் கட்டுவதை நிறுத்தவேண்டு மென்று 20-ம் தேதி தமிழ்நாடு பூராவும் உள்ள ஹைஸ்கூல் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்யவேண்டுமென்று திட்டமெடுத் திருந்தார்கள். அந்த முறையில் தமிழ்நாட்டிலே 20-ம் தேதி ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. அந்த முறையில் சென்னையிலும் 20-ம் தேதி காலை தியாகராய செட்டியார் உயர்நிலைப்பள்ளி, எத்தியப்பா நாய்க்கர் பள்ளி, பி.ஏ.கே. பழனிசாமி நாடார் உயர் நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் 5,000 பேர் ஊர்வலமாக வந்தபோது போலீசார் தலையிட்டு, ஊர்வலத்தை உடைத்து, அவர்களைக் கலைக்க தடியடிப் பிரயோகம் நடத்தியிருக் கிறார்கள். மாணவர் தலைவர்கள் ஜான், செல்வராஜ், போன்ற உயர்நிலைப்பள்ளி மாணவர்களைத் தாக்கியிருக்கின்றனர். அது மட்டு மல்லாமல், கமிஷனரே மாணவர்களைத் தாக்கியது தவறு என்று கூறியிருக்கிறபோது, அரசே அதிலே எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறது. அது சம்பந்தப்பட்ட அமைச்சர், போலீஸ் அமைச்சர் அதற்கு வருத்தம் தெரிவிக்கவில்லை, அல்லது ராசினாமா போன்ற நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றும் கோரிக்கைகள் கிளப்பியிருக்கிறார்கள். இன்றைக்கு நாடு பூராவிலும் உள்ள மாணவர்கள் தொடர்ந்து ஊர்வலங்கள் நடத்தி வருகிறார்கள். அவர்களைத் தாக்குகிறபோது ஹைஸ்கூல் மாணவர்களுக்கு என்னடா கோரிக்கை என்று கூறி தாக்கியதாகச் சொல்கிறார்கள். இந்த சென்னை நகரத்தில் அது நடைபெற்று இருக்கிறது. இதை யெல்லாம் பார்க்கிறபோது இந்த அரசாங்கம் இந்த மாதிரியான நிகழ்ச்சிகளை நடக்கவொட்டாமல் தடுக்கத் தவறி விட்டது என்ற காரணத்திற்காக, இந்தப் பொருள் குறித்து விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டு மென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 15—11—1973 பிற்பகல் தனியார் பள்ளியான "எத்தியப்பா நாயக்கர் பள்ளி" வட சென்னையில் இருப்பது. அந்தப்

பள்ளி உள்விவகாரம் காரணமாக மூடப்பட்டது. மேற்படி பள்ளியிலே வேலை பார்த்து வந்த பட்டதாரி ஆசிரியர் ஒருவர் பள்ளி நிர்வாகத்தால் வேலையிலிருந்து நீகப்பட்டார். வேலை யிலிருந்து நீக்கப்பட்ட ஆசிரியர் கல்வித் துறைக்கு முறையீடு செய்து கொண்டதன் பேரில் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டு, அவர் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். இதன் காரணமாக, தற்காலிகமாக அவரது இடத்திலே வேலை பார்த்து வந்த மற்றொரு ஆசிரியர் வேலை இழக்க நேரிட்டது. இதைத் தொடர்ந்து சில மாணவர்கள் பள்ளிக்குச் செல்லாமலும் பள்ளியின் மரச் சாமான்களுக்கு சேதம் விளைவித்தும் நிர்வாகத்தினருக்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வந்தனர். அதனால் நிர்வாகத்தினர் 15—11—1973 முதல் பள்ளிக் கூடத்தை மூடிவிட்டனர்.

19—11—1973 அன்று மறுபடியும் பள்ளி திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இருந்தாலும் பள்ளிக்கு குறிப்பிட்ட அளவுக்கு மாணவர்கள் வரவில்லை. குறிப்பிட்ட சில மாணவர்களே வந்தார்கள்.

20—11—1973-ம் தேதி அன்று அப்பள்ளியைச் சேர்ந்த 50 மாணவர்கள், இராயபுரம் எஸ். என். செட்டித் தெருவிலிருந்து நடராஜன் என்பவர் தலைமையில் ஊர்வலமாகப் புறப்பட்டார்கள். அனைத்திந்திய மாணவர் சம்மேளனத்தைச் சார்ந்தவர்கள் இதிலே இருந்தார்கள். ஊர்வலத்தினர் சென்னை ஆட்சியாளர் அலுவலகத் திற்குச் சென்று எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணமான ரூ. 15-ஐ ரத்து செய்ய வேண்டுமென்றும், மேலும் சுகாதார வசதியும், விளையாட்டு மைதான வசதியும் செய்து தரவேண்டுமென்றும் கோஷம் போட்டார்கள். ஊர்வலத்தில் தலைமையேற்று வந்து திரு. நடராஜனும் சில மாணவர்களும் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை சென்னை மாவட்ட ஆட்சியாளரிடம் கொடுத்து விட்டுத் திரும்பினர்கள்.

காலை 10 மணிக்கு ஆரம்பித்த ஊர்வலம் பிற்பகல் 12 மணிக்கு சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் முடிவடைந்தது. ஊர்வலம் மிகவும் அமைதியாகவும், ஒழுங்காகவும் நடைபெற்றது.

இதில் போலீசார் பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டிய சூழ்நிலையோ, அவசியமோ ஏற்படவில்லை.

சென்னை இராயபுரம் கல்மண்டபத்துக்கருகில் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் மீது போலீசார் தடியடி நடத்தினர்கள் எனச் சொல்லப்படுவது குறித்து

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 நவம்பர் 23

இது தவிர, வட சென்னை சி. ஏ. சாலையிலுள்ள கே. சி. சங்கரலிங்க நாடார் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த சுமார் 100 மாணவர்கள் 20-ம் தேதி அன்று காலை எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கோஷம் எழுப்பி, அமைதியாக அவர்களும் சென்றூர்கள். பள்ளிக்கூடம் அன்றைக்கு விடுமுறை என்று தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து, அருகாமையிலுள்ள பி.ஏ.கே. பழனிசாமி நாடார் உயர்நிலைப்பள்ளிக்கும் விடுமுறை என்று அதன் தலைமை ஆசிரியர் அறிவித்தார். மாணவர்கள் அமைதியாக திரும்பி வீடு சென்றனர்.

மேலே குறிப்பிட்ட சங்கரலிங்க நாடார் பள்ளி மாணவர்களோ, பி.ஏ.கே. பழனிசாமி நாடார் உயர்நிலைப் பள்ளி மாணவர்களோ ஊர்வலங்களில் கலந்து கொள்ளாமல் வீட்டிற்கு சென்றூர்களே தவிர, வேறு எங்கும் செல்லவில்லை. ஆகவே, அவர்கள்மீது தடியடிப் பிரயோகம் நடைபெறவில்லை. மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் குறிப்பிட்டது போல் 5,000 மாணவர்கள்மீது தடியடிப் பிரயோகம் நடைபெறவில்லை. அவர் தந்தது உண்மைக்குப் புறம்பான தகவல், தவறான தகவல். இப்பொழுது உண்மையான தகவல் தரப்பட்டிருக்கிறது. தடியடிப் பிரயோகம் எதுவும் நடைபெறவில்லை. ஆகவே, இப்படி நடைபெறாத ஒன்றிற்காக இந்த சபையை ஒத்திவைக்க வேண்டியதில்லை என்று தலைவர் அவர்களே, உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகும், இது அன்றாட நிகழ்ச்சிக்குரிய காரணத்தினாலும் இதற்கு அனுமதி ம- மறுக்கிறேன்.

(ஆ) கிளைவ் விடுதி மற்றும் பாளையங்கோட்டை சம்பவ அறிக்கைகளின்மீது நடவடிக்கை எடுக்கக் கோரி முதலமைச்சரைக் காணவந்த கல்லூரி மாணவர்கள் கைது செய்யப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. பொன்னப்ப நாடார், டாக்டர் ஹாண்டே, திரு. மாரிமுத்து, திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. சுரேந்திரன் ஆகிய சட்டமன்ற உறுப்பினர்கள்

1973 நவம்பர் 23] *[பேரவைத் தலைவர்]*

"That the students of different colleges in the City who went in a procession to meet the Chief Minister to press their demand in the light of the report published regarding the Clive Hostel, Tiruchirappalli and Palayamkottai incidents were not only refused to meet the Chief Minister but also taken into custody by the Police."

என்பதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். இது எப்படி அவையை தள்ளிவைத்து விவாதிக்கக் கூடிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி மட்டும் சுருக்கமாகக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இன்று மாணவர்கள் மத்தியிலே ஒரு பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. கிளைவ் ஹாஸ்டல் ரிப்போர்ட்டின் அடிப்படையிலும் அதேமாதிரி பாளையங்கோட்டையிலே நடந்த நிகழ்ச்சிகளின் அடிப்படையிலேயும் தயாரிக்கப்பட்ட ரிப்போர்ட்டின்படியும் இந்த அரசாங்கம் ராஜினமா செய்ய வேண்டும், முதலமைச்சர் அவர்கள் இதற்கு முழு பொறுப்பாக இருக்கிறார்கள் என்ற கருத்தினை வலியுறுத்த மாணவர்கள் இந்த கிளர்ச்சியினை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மாணவர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, அண்ணமலை பல்கலைக் கழகத்திலே முன்பு உதயகுமார் என்ற மாணவன் இறந்ததை ஒட்டியும் அதற்குப் பிற்பாடு பாளையங்கோட்டையிலே ஜார்துநாதன் என்ற மாணவன் இறந்ததை ஒட்டியும் மாணவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு இல்லையென்ற உணர்வு இன்று மாணவர்கள் மத்தியிலே இருந்து கொண்டிருக்கிறது. இந்த மாதிரி உணர்வு ஏற்பட்டது சரிதானு என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

குறிப்பாக, இன்று ஆளும் கட்சியின்மீது மாணவர்களுக்கு வெகுவாக வெறுப்பு உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னல் அது மிகையாகாது. மாணவர் அரசு என்று தன்னை சொல்லிக்கொண்டாலும், இந்த அரசின்மீது மாணவர்களின் நம்பிக்கை குறைந்திருக்கிறது என்பதற்கு அண்மையிலே நடந்த இந்த ஊர்வலங்கள் சான்ருக இருக்கின்றன. சட்டக் கல்லூரி மாணவர்களும் பச்சையப்பன் கல்லூரி மாணவர்களும், ஏன்,

அனைத்துக் கல்லூரி மாணவர்களுமே அந்த ஊர்வலங்களிலே கலந்துகொண்டு, அதனால் ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இந்த ரிப்போர்ட்டுகளைப் பற்றி நான் விரிவாகத் தெரிவிக்க வேண்டியதில்லை. ரிப்போர்ட்டுகளின் அடிப்படையிலே பல உத்தரவுகளை அரசாங்கம் பிறப்பித்திருக்கிறது. ஒரு டி.எஸ்.பி. சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார். ஏனைய அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுப்பதாக பத்திரிகைகள் வாயிலாக நாங்கள் அறிந்து கொண்டிருக்கிறோம். ஆனால், ரிப்போர்ட்டிலுள்ள ஒரு முக்கியமான விஷயத்தை அரசாங்க கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். அது கிளைவ் ஹாஸ்டல் சம்பந்தமான ரிப்போர்ட்டின் ஒரு பகுதியிலே டி.ஐ.ஜி. அவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் இதற்குப் பொறுப்பாக இருக்கிறார்கள் என்று சொல்லக்கூடிய அளவில், அவர்களுக்கும் ஒரு பங்கு இருக்கிறது. அவர்களுடைய நிர்வாகத்தை சரியான முறையிலே நடத்தவில்லையென்று சொல்லக் கூடிய அளவுக்கு 146-வது பக்கத்திலே கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரிப்போர்ட் விவரங்களைப் பற்றிச் சொன்னால் நேரமாகும்.

THIRU R. PONNAPPA NADAR : I am just referring to a portion in the Report. In the report it has been stated :

"I am constrained to remark that the failure on the part of the Collector and the Deputy Inspector-General of Police to visit the Clive's hostel after having gained knowledge of the police entry is inexcusable and their explanations not satisfactory."

என்று சொல்லியிருக்கிறது. இந்த மாதிரி பல காரியங்களைப் பற்றியும் தெளிவாகத் தங்களுடைய தீர்ப்புகளைக் கூறியிருக்கிறார்கள். இதைப் பார்த்தால், அங்கு சரியான முறையிலே நடக்கவில்லை, மாணவர்கள் வேண்டுமென்றே தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பல தீர்ப்புகளைக் கூறியிருக்கிறார்கள். அந்த தீர்ப்புகளின் விரிவான அம்சங்களில் நான் நுழைவதற்கு விரும்பவில்லை.

பொதுவாக, இந்தப் பிரச்சினையின்மீது அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். எப்படி அரசாங்கத்திற்கு பொறுப்பு இருக்கிறது என்றால், அதிகாரிகள் செய்த தவறுக்கு அரசாங்கப்

நிச்சயமாகப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற காரணத்தினுல்தான்; அதனுல் தான் இந்த விவகாரத்தைப் பற்றி மாணவர்கள் இவ்வளவு தீவரமாக அவர்களுடைய கருத்துக்களை அரசாங்கத்திடத்திலே தெரிவித்திருக்கிறுர்கள.

அது மட்டுமின்றி, அவர்கள் முதலமைச்சர் அவர்களைப் பார்க்க வேண்டும், தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டபொழுது, அவர்களுக்கு அனுமதி மறுக்கப் பட்டதாகவும் எனக்குத் தகவல் தந்திருக்கிறுர்கள். இந்த மாதிரியான காரியங்கள் எல்லாம் விரும்பத்தக்க காரியங்கள் அல்ல. ஆதலால் முதலமைச்சர் அவர்கள் இந்த இரண்டு அறிக்கைகளின் அடிப்படையிலே தன்னுடைய பதவியை ராஜிஞமா செய்ய வேண்டுமென்பதை வலியுறுத்துவதற்கு இந்த சபையின் காலத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, I rise to request the Hon. Speaker to adjourn the business of the House to discuss a matter of urgent public importance, namely, the unrest caused as a result of large-scale arrest of students belonging to Pachayappas College and Law College, Madras on 21st November 1973.

I shall try to prove how this matter is of urgent public importance. The fact of the matter is this. A large number of students belonging to various Colleges are extremely hurt and feel sorry with regard to the statement made by the Hon. Chief Minister in this House on the 6th December 1972 in regard to the incidents in the Clive 's Hostel. They feel that the statement of the Hon. Chief Minister is in total variance with the facts of the case. They have been effectively brought out by the One-man Commission appointed in this regard. The Commission has given disagreeing views with regard to incidents that took place in the Clive 's Hostel on the 2nd, 3rd and 4th December 1972. It is for this reason that the students came in a procession to meet the Hon. Chief Minister to present their case and to state that what has been stated by the Hon. Chief Minister in this House on the 6th December 1972 are devoid of facts. I also charge that what all have been stated by the Hon. Chief Minister in this House are devoid of truth and devoid of facts. Absolutely they have no

relation to the facts. In fact, I have got a copy of the Proceedings of the Legislative Assembly dated 6th December 1972. If the hon. Members go through the proceedings, they will come to know that almost three-fourth of what has been stated by the Hon. Chief Minister are far from facts and they have no connection with truth at all.

This is what has hurt the students. That is why I have stated that this is an urgent matter. Unless an opportunity is given to the House to discuss the reports relating to the Clive 's Hostel and Palayamkottai incidents, this unrest cannot be completely stopped. That is why we are requesting the Hon. Speaker to adjourn the House and unless we adjourn the House how can we discuss these things and where is the opportunity to discuss them? We may not have an opportunity as per the announcement of the Hon. Speaker regarding the decisions of the Business Advisory Committee. No date has has been fixed to discuss it. Are we to let off the Police Department and also the Hon. Chief Minister scot-free for giving a wrong statement to the House?

This is a very, very serious matter. Whenever, we make an incorrect statement we are immediately pulled up by the Treasury Benches that we are not saying the truth and that we must prove it and even privilege issues are raised against us. I say this is a serious case of breach of privilege against the Hon. Chief Minister for hiding facts. If the Members remember aright, on that day itself I said that that was not a fact and some other Members also felt the same way. But the Hon. Chief Minister categorically asserted that whatever he said was a fact. He did not even say that what he said might not be correct. Even for courtesy sake he did not say so. Therefore, this House must adjourn to discuss the entire thing threadbare. Are we going to have a day for discussing it? Probably the Hon. Chief Minister in his reply might say that the House need not be adjourned to discuss it. In that case I will charge him that he has failed to discuss it in the House. But I am quite sure that the Hon. Speaker will allot a day to discuss it. Sir, the students have a feeling that they are being completely victimised and that this Government have been anti-student and they have been allergic to the students. This is so far as the urgency of the matter is concerned.

Now I come to public importance. The public importance is that the House must be taken into confidence. Now the point is that the Hon. Chief Minister has given a statement outside the House hat he has appointed somebody to go into the irregularities of the Police Department. In other words, he is accepting the findings of the One-man Commission, am I to take it like that. When the House is in session, what is the duty of the Hon. Chief Minister? He should make a statement in the House and take the House into his confidence by giving the Members an opportunity to discuss it and come to a consensus. He could give a statement under Rule 82 but he has not bothered to do so. That is why I say it is of public importance. The entire public are expected to know when the Government are going to take action. It is not only the concern of the students but the concern of the 4½ crores of people of the State that action should be taken in the matter. There are now two alternatives. One is to adjourn the House and discuss the matter now. The second alternative is for the Hon. Speaker to allot a day for discussing it after consultation with the Opposition leaders, the Leader of the House and the Hon. Chief Minister. Once again, I submit with all the emphasis at my command on behalf of the A.D.M.K. that we must be allowed to discuss it threadbare. Therefore, I request the Hon. Speaker to adjourn the House and discuss this matter.

Thank you, Sir.

* **திரு. எம். சுரேந்திரன்:** சபாநாயகர் அவர்களே, நான் இங்கே அளித்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்தில் சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து நான் அந்தத் தீர்மானத்திலே தந்திருக்கின்ற விஷயத்தைப்பற்றி இந்தச் சபையிலே விவாதிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறேன். இப்பொழுது மாணவர்கள் மத்தியிலே பெரும் கிளர்ச்சி தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. மாணவர்கள் ஒரு விஷயத்தைத்தான் முன் வைத்து இருக்கிறார்கள். முதலமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும் என்பதுதான் அந்த விஷயம். முதலமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டுமா வேண்டாமா என்பதை விவாதிப்பதற்காக இந்தச் சபையை ஒத்தி வைக்கவேண்டுமென்ற முறையிலேதான் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் ராஜினாமா செய்யவேண்டுமா வேண்டாமா

என்பது ஜனநாயகத்திற்கு, ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு, சட்டத்திற்கு உட்பட்டு நடக்கிற அத்தனை பேர்களும் இந்தக் காரியத்திலே அக்கறை காட்டக்கூடிய ஒரு விஷயமாகியிருக்கிறது. ஜனநாயகத்திற்கு உட்பட்டு, ஜனநாயகத்தின் கோட்பாடுகளுக்கு உட்பட்டு, சட்டத்திற்கு உட்பட்டு தான் திருச்சியிலேயும், பாளையங்கோட்டையிலேயும் நடந்த சம்பவங்களுக்காக விசாரணைக் கமிஷன்களை ஏற்படுத்தினோம். மக்கள் கோரிக்கையின் விளைவாகத் தான் அவை ஏற்படுத்தப்பட்டன, ஜனநாயகம் இங்கே ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இங்கே விசாரணைகள் நடந்து தீர்ப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அந்தத் தீர்ப்புகளை அமல்நடத்துவதிலும் ஜனநாயகக் கோட்பாடுகளும் சட்டமும் கடைப்பிடிக்கப் படவேண்டுமென்பது தொக்கி நிற்கிறது. அந்த முறையிலே பார்த்தால் அந்தத் தீர்ப்புகளுக்குப் பொறுப்பாளி யாரோ அவர் அந்தப் பொறுப்பிலிருந்து விலகுவதுதான் சரியானதா, அது எப்படிச் சரியானது என்று ஆராய்ந்து முடிவெடுப்பதற்காகத் தான் இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டுமென்று கோரியிருக்கிறேன்.

இன்றைக்கு மாணவர்கள் கிளர்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள், மாணவர்கள் கிளர்ச்சி பொதுமக்கள் கிளர்ச்சியாக ஆரம்பமாவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அந்த அறிகுறிகளையெல்லாம் மனதிலேகொண்டு இந்த மாநிலத்திலே நீதி, ஒழுங்கான அரசியல், ஜனநாயகக் கோட்பாடுகள் நிலவுகின்ற முறையில் மாணவர்களின் கோரிக்கையை ஆழமாகச் சிந்தித்து இந்த மன்றத்திலே விவாதித்து முடிவுகளைக் காணவேண்டியது அவசியம் என்ற கருத்திலேதான் இந்த அவசரத் தீர்மானத்தை நான் தந்திருக்கிறேன், ஆகவே, அதற்காக இந்த அவையை ஒத்தி வைத்து இந்த விஷயத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், 21-ம் தேதியிலிருந்து சென்னை நகரத்தின் பல கல்லூரி மாணவர்கள் ஊர்வலமாக வந்து முதலமைச்சர் அவர்களிடத்திலே ஓர் கொடுப்பதற்குத் தினசரி ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் வருகின்றபோது அவர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். அம்மாதிரி அவர்கள் கைதுசெய்யப்படுவது தவறு என்பதை அம்சமாகக்கொண்டுதான் என்னுடைய ஒத்தி

வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். தங்களுக்கு ஞாபகத்திற்காகச் சொல்லவிரும்புகிறேன். இதேமாதிரித்தான் 1965-ஆம் ஆண்டு நிலைமை ஏற்பட்டது. அப்பொழுது முதலமைச்சரைப் பார்க்கவேண்டுமென்று பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் இங்கே வந்தபொழுது லத்தி சார்ஜ் செய்யப் பட்டார்கள். அதைத் தொடர்ந்து தமிழ்நாடு பூராவும் ஒரு இயக்கமாக எழுந்தது. உண்மையாக எழுந்த பிரச்னை இந்திப் பிரச்னை, ஆனால் அப்பொழுது மாணவர்கள் தாக்கப்பட்டு ஒரு பெரிய பிரச்னையாக எழுந்து அரசினுடைய பொறுப்பு என்ன என்று கேட்கக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டது. அதே மாதிரியான ஆபத்தான நிலைமை இன்றைக்கும் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் முதலிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த மன்றத்திலே இரண்டு ரிப்போர்ட்டுகள் சமர்ப்பிக்கப்பட்டன. நாட்டிலே உள்ள மக்களுக்கு அந்த ரிப்போர்ட்டுகளுடைய முழு அம்சமும் தெரிந்து விட்டது. பத்திரிகைகளிலே வந்துவிட்டது. குறைந்த அளவுக்கு அந்த ரிப்போர்ட்டுகளைப்பற்றி இங்கே விவாதிக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அந்த ரிப்போர்ட்டுகளின் பேரில், அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே அல்லவா சொல்லவேண்டும். அப்படியில்லாது அங்கத்தினர்கள்கூட பத்திரிகையிலே வந்தபிறகு பத்திரிகையைப் பார்த்துத்தான் தெரிந்துகொள்ளக் கூடிய நிலைமை இருக்கிறது. சட்ட மன்றத்திலோ அல்லது நாடாளுமன்றத்திலோ தான் முதலில் தெரிவிக்கவேண்டும். முக்கியமாக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப்பற்றி அறிவிக்கவேண்டு மென்றால் அதை முதலிலே சட்ட மன்றத்திலோ அல்லது நாடாளு மன்றத்திலோதான் அறிவிக்கவேண்டுமென்பதுதான் மரபே யொழிய பத்திரிகைகளைப்பார்த்து நாங்கள் எல்லாம் தெரிந்து கொள்ளக்கூடிய துர்ப்பாக்கியமான நிலைமை வந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதேநேரத்தில்

[முற்பகல் 10-30]

அவர்களின் கோரிக்கையின் விளைவு எப்படியிருக்கிறது? கிளேவ் ஹாஸ்டல் சம்பவங்களை வைத்து செயின்ட் ஜோசப் கல்லூரி டிசம்பர் 5-ஆம் தேதி வரையில் மூடப்பட்டிருக்கிறது. இந்த நிலை

மாநிலம் முழுதும் பரவி வரவேண்டுமா? இல்லை, நாங்கள் இந்த நடவடிக்கையை எடுக்கப்போகிறோம் என்று அறிவிப்பீர்களா? அரசின் தவறு என்ன? அங்கிருந்த போலீசார் மட்டும் செய்தார்கள் என்று சொல்வது போலீசாரைச் செயலற்றமுறையில் ஆக்குவதாக ஆகும். போலீசார் இவர்கள் சொல்லாமல் செய்தார்களா? டி.ஐ.ஜி. என்ன ஆனார்? பேச்சே காணோம். பாளையங்கோட்டை பொறுத்தவரையில் போலீஸ் அதிகாரிகள் முதலிலே நடந்த முறைக்கு, விசாரணை நடந்தகாலத்தில் எஸ்.பி. அவர்கள் தவறான அறிக்கை கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்படி யார் கொடுக்கச் சொன்னது? இம்மாதிரி போலீஸ் அதிகாரிகள் அரசாங்கத்தால் நிர்ப்பந்தப்படுத்தப் பட்டிருக்கிறார்களா? இல்லாதுபோனால் போலீஸ் அதிகாரிகள் மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கிறோம் என்றால், It will demoralise the administration. It will demoralise the officers. பெரிய சம்பவத்திற்கு அரசே ஏற்பாடு செய்து அரசே அம்பலப் படுத்தப்பட்டிருக்கும்பொழுது சில அதிகாரிகள் மீது மட்டுமே நடவடிக்கை எடுப்பதால் அது தவறான போக்காக வந்துவிடும். ஒன்று அவர்களே அன்றைக்கு விவாதத்தைத் தொடங்கியிருக்க வேண்டும். தொடங்கி அந்த விவாதத்தின் ஒரு பகுதியாக நாங்கள் இன்னின்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்று சொல்வதற்குத் தவறிவிட்டார்கள். இன்றைக்கு மாணவர்களின் கோரிக்கை இதற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர் இராஜீனாமா செய்ய வேண்டும் என்பது. இங்கே அது முதலமைச்சராகவே இருக்கிறார்கள். இப்பொழுது அமெரிக்காவிலே ஒரு உதவி ஜனாதிபதி இராஜீனாமாவைத் தந்திருக்கிறார்கள். இங்கே இராஜீனாமா என்று சொன்னாலே அலர்ஜியாக இருக்கிறது. ஏனென்றால் இலாக்கா பொறுப்பு, தவறு என்றால் அதை முன்னே வைத்து இராஜீனாமா செய்ய வேண்டுமென்று முன்பு ஒருமுறை சொல்லிப்பார்த்தாகிவிட்டது. அன்றைக்கு நான் மட்டும் சொல்லவில்லை. டாக்டர் ஹாண்டே அவர்களும் சொன்னார்கள். இன்றைக்கு நான்குக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சொல்லுகிறோம். இதற்குப்பிரசாவது, அந்த அமைச்சர், அது முதலமைச்சராக இருந்தாலும் இருக்கட்டும், போலீஸ் அமைச்சர், நான் செய்தது தவறு என்று சொல்லி போலீஸ் இலாக்காவிற்கு வேறு ஒருவரைப் போட்டுமே. அம்மாதிரி செய்யாமல், அரசுக்குப் பொறுப்பிருக்

1973 நவம்பர் 23] [திரு. கே. டி. கே. தங்கமணி]

கிறது என்று நடவடிக்கை எடுக்காமல் இருக்கும் அளவில் மாணவர்களுக்கும் திருப்தி ஏற்படாது, மக்களுககும் திருப்தி ஏற்படாது.

Adjournment motion is in the nature of a censure motion. We censure this Government for the acts they have committed. This has been projected by the students. The ultimate thing is for the concerned Hon. Minister to resign. என்று அந்த அம்சம் இருக்கிற அளவிற்கு இது முக்கியமாக இருப்பதால் சபையை ஒததிவைத்து இன்றைக்கு 12 மணியிலிருந்து 2 மணி வரையிலும் விவாதம் நடத்தலாம். விதி தெளிவாகச் சொல்லுகிறது. சபையை ஒத்திவைத்து விவாதத்தை இரண்டு மணி, மூன்று மணி நேரத்தில் முடிக்கலாம். மிக முக்கியமான விஷயம் என்ருல் 5 மணி நேரம்கூட நாடாளுமன்றத்தில் விவாதித்திருக்கிறுர்கள். இந்த 'அட்ஜர்ன் மெண்ட் மோஷன்' அனுமதிக்கக்கூடிய ஒரு முக்கியமான மோஷன் என்பதால் எந்த அளவிற்கு விவாதத்திலே வலியுறுத்திச் சொல்ல வேண்டுமோ அந்த அளவில் சொல்லியிருக்கிறேன், அதை மனதில் கொண்டு நல்லமுடிவை தாங்கள் எடுக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்மீது பேசிய எதிர்க்கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் இராஜினமா என்ற விஷயத்தை அடிக்கடி சொன்னுர்கள். நான் அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன், மிக முக்கியமான நேரத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய ஒரு வார்த்தையை அடிக்கடி சொல்லி அதை மலிவாக ஆக்கிவிட வேண்டாமென்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

முதல்வரைப் பார்க்க வேண்டுமென்று மாணவர்கள் விரும்பினுர்கள் என்றும், அதற்கு நான் சம்மதிக்கவில்லை என்றும் கூறுவது உண்மைக்குப் புறம்பான ஒன்ருகும். நான் இப்பொழுது கூட நம்முடைய திரு. பொன்னப்ப நாடார் அவர்களையோ அல்லது திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களையோ கேட்டுக்கொள்கிறேன், இன்றைக்குக்கூட அவர்கள் என்னைப் பார்க்க வேண்டும், மனு கொடுக்க வேண்டுமென்று விரும்பினுல், 10, 15 மாணவர்களோ சந்திக்க வேண்டுமென்ருல் நான் அவர்களைச் சந்திப்பதில் எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. அப்படி எந்த மாணவர்களும்

கோரிக்கை வைக்கவும் இல்லை, என்னைப் பார்க்க வேண்டுமென்றோ கல்வியமைச்சரையோ மற்ற அமைச்சர்களையோ பார்க்க வேண்டுமென்று கடந்த இரண்டு மூன்று நாட்களாக மாணவர்களோ, மாணவர் குழுக்களோ அல்லது ஊர்வலமாக வந்த மாணவ நண்டர்களோ யாரும் அந்தக் கோரிக்கையை வைக்கவில்லை என்பதை நான் இங்கே எடுத்துக் கூறுவதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, ஆயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டார்கள், 3,000 பேர், 4,000 பேர் கைது செய்யப்பட்டார்கள் என்று பத்திரிகையில் செய்தி வருகிறது. நான் இப்பொழுது அனைத்துக் கட்சித் தலைவர்களையும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன், நான் அவர்களுக்குத் தலைமை வகித்து அழைத்துச் செல்வதற்குத் தயாராக இருக்கிறேன், சென்னையிலேயுள்ள சிறைக்கூடங்களுக்கு அல்லது அவர்களுக்குச் சந்தேகமிருந்தால் வேறு சிறைக் கூடங்களைப் பார்க்க வேண்டுமென்றாலும் அழைத்துச் செல்லத் தயாராக இருக்கிறேன். எந்த மாணவராவது கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்களா என்பதை நேரிலே தெரிந்துகொள்ளலாம். அந்த அளவிற்கு நான் தயாராக இருக்கிறேன். சில கல்லூரி மாணவர்கள் ஊர்வலமாக வந்தார்கள். சென்னை நகர காவல் சட்டம் 41-வது விதியை மீறும் அளவில் யத்தனித்தபொழுது அவர்களில் சிலர் கைது செய்யப்பட்டு உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்கள். ஆயிரக்கணக்கில் இல்லை. ஒரு கல்லூரியில் 100 பேர், ஒரு கல்லூரியில் 150 பேர், ஒரு கல்லூரியில் 60 பேர், 70 பேர் என்ற அளவில் அவர்கள் கைது செய்யப்பட்டு உடனடியாக கமிஷனர் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு உடனடியாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படவில்லை. 3,000 பேர், 4,000 பேர் என்று பத்திரிகையில் வருவது, மாணவர்களைத் தூண்டிவிட்டு சிலபேர் அரசியல் லாபம் கருதிச் செய்யும் முயற்சி குறித்து உள்ளபடியே நான் வேதனைப் படுகிறேன்.

அடுத்து, நீதி விசாரணை பற்றிக் குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் கட்சித் தலைவரவர்களும், ஆளுங்காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், கம்யூனிஸ்ட் கட்சி தலைவரவர்களும், ஏற்கனவே சுதந்திராக்

கட்சியில் அதனுடைய தலைவராக இருந்த டாக்டர் ஹாண்டே அவர்களும் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். என்றைக்காவது இப்படிப்பட்ட போலீஸ் அத்துமீறிய நடவடிக்கைகள் பற்றிச் செய்திகள் வந்து, நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டபொழுது இந்த அமைச்சரவையிலே வீற்றிருந்த பழைய ஆட்சியாளர்கள் உடனடியாக நீதிவிசாரணை வைக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்களா, நீதி விசாரணை வைக்கப்பட்டதா? அந்த நீதி விசாரணைக் குறிப்புகள் உடனடியாக உறுப்பினர்களுக்குத் தரப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டதா? அதற்கு ஏதாவது சரித்திரம் உண்டா என்பதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் யார்மீது தவறு இருந்தாலும், எங்களுக்கு வந்திருக்கின்ற தகவல்கள் சரியானவைதானா, போலீசார் தந்த தகவல்கள் உண்மையா, எதிர்க் கட்சிகளிடமிருந்து பெறப்படும் தகவல்கள் சரியா என்று ஆராயும் வகையிலேதான் நீதிவிசாரணைக்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. அதை யாரும் மறந்துவிடக்கூடாது. எதிர்க் கட்சிகளும் நீதிவிசாரணை வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்திருக்கலாம். ஆக, நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஏற்கனவே முதுகளத்தூரில் நடைபெற்ற பயங்கரமான சம்பவத்தின்பொழுது 40 பேர் கொலையுண்டார்கள், 40 நாட்கள், 50 நாட்கள் முதுகளத்தூர் வட்டாரமே இரத்தக்களறியிலே இருந்தது என்ற அந்த நேரத்திலேகூட அப்பொழுது முதலமைச்சராகயிருந்த காமராஜர் அவர்கள் நீதிவிசாரணைக்கு சம்மதிக்க முடியாது என்றே சொல்லிவிட்டார்கள். அப்பொழுது நிதி அமைச்சராயிருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள், எதற்கெடுத்தாலும் நீதிவிசாரணை வைத்தால் பிறகு போலீஸ்காரர்கள் தங்கள் கடமைகளைச் செய்யவே போக மாட்டார்கள். ஆகவே, நீதி விசாரணைக்கு ஒத்துக்கொள்ள முடியாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்கள்.

1965 ஆம் ஆண்டு தமிழ்நாடு முழுவதும் இந்தி எதிர்ப்பு சம்பந்தமாக நடந்த மாணவ மணிகளின் கிளர்ச்சியிலே நூற்றுக் கணக்கான மாணவர்கள் அடிபட்டும், பலர் கொலை செய்யப்பட்டும் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டபொழுதும், பல பிணங்கள்

விழுந்தபொழுதும் நீதிவிசாரணை வேண்டுமென்று தமிழ்நாட்டில் பரவலாகக் கேட்டபொழுது நீதிவிசாரணை வைக்கப்படவில்லை என்பதையும், சிதம்பரம் சம்பவம் ஒன்றுக்கு மட்டும் நீதிவிசாரணை வைக்கப்பட்டது என்பதையும் மற்ற எந்த நிகழ்ச்சிக்கும் நீதி விசாரணை வைக்கப்படவில்லை. பலயிடங்களில் நடந்த துப்பாக்கிச் சூடுகளைப்பற்றி நீதி விசாரணை வைக்கப்படவில்லை என்பதை இங்கே ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே நீதி விசாரணை வைத்து, அந்த நீதி விசாரணையின் அறிக்கையைப்பற்றி தயவு தாட்சண்யம் இல்லாமல், பாரபட்சம் இல்லாமல் நீதி வழங்க வேண்டுமென்ற நிலைமையில், அந்த நீதிபதிகளின் தீர்ப்பும் அறிக்கையாக அச்சிடப்பட்டு அவையிலே வைக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், முதலமைச்சர் சட்டசபையில் கூறியதற்கு மாறாக இன்றைக்கு நீதிபதிகள் தீர்ப்பு சொன்னார்கள் என்று தெரிவித்தார்கள். நான் அப்பொழுது சொன்னேன். நான் சொன்னது சரியானது அல்ல என்று எதிர்க் கட்சியிலே உள்ள நீங்கள் சொன்னதற்குப் பிறகு நான் கூறிய தகவல்களும் ஆராயப்பட வேண்டியவைகள் என்ற வகையிலே தான் நீதி விசாரணை வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு அரசு எதிர்க் கட்சிகள் கூறுவதைப் பெருந்தன்மையோடு ஏற்று நீதி விசாரணை வைத்திருப்பதே ஒரு குற்றம் என்றால் அதற்காக நான் உள்ளபடியே மெத்த வருத்தப்படுகிறேன்.

இந்த அறிக்கை ஆகஸ்ட் மாதம் தரப்பட்டது. அந்த அறிக்கையை அரசாங்கம் பரிசீலித்தது. 14—11—1973 அமைச்சரவை கூட்டம் கூடிற்று. அந்தக் கூட்டத்தில் அந்த அறிக்கைகளை அப்படியே ஏற்றுக்கொண்டு, பாளையங்கோட்டை சம்பவம் பற்றிய அறிக்கையானாலும் சரி, க்ளைவ்ஸ் ஹாஸ்டல் சம்பவம் பற்றிய அறிக்கையானாலும் சரி இந்த இரண்டு அறிக்கைகளையும் அப்படியே அரசாங்கம் ஏற்றுக்கொள்வது என்பதோடு அல்லாமல் உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக் கின்றன என்ற அறிவிப்பையும் அன்றே தந்திருக்கிறோம். ஆகவே, அவை கூடிய பிறகு அறிவித்ததாக கூறியது தவறாகும். அவையை அவமதித்து விட்டு அறிவித்ததாகக் கூறியது தவறாகும்.

1973 நவம்பர் 23] [டாக்டர் மு. கருணாநிதி]

ஹாண்டே அவர்கள் முதல் அமைச்சர் அவர்கள் அவை கூடி இருக்கும்போது அறிவிக்கலாமா என்று கேட்டார்கள். அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று அமைச்சரவைக் கூட்டத்தில் 14—11—1973 எடுத்த தீர்மானம்தான் இப்போது அமலாக்கப்பட்டு வருகிறதேயல்லாமல் வேறு அல்ல. அறிக்கைகளை அரசாங்கம் பரிசீலித்ததற்குப் பிறகு 14—11—1973 அமைச்சரவைக் கூட்டத்தில் அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப் பட்டன. 19—11—1973-ல் அறிக்கைகள் அவையின் முன் சமர்ப் பிக்கப்பட்டன. 21—11—1973 அன்று தனி அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ரெவன்யூ அதிகாரிகள் மீது அந்த அறிக்கைகளின்படி வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ள, போலீஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ள திரு. கார்த்திகேயன் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், ஐ.ஜி. அவர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் 21-ம் தேதி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 22-ம் தேதி டெபுடி சூப்பரின்டென்டென்ட் ஸஸ்பென்ட் செய்யப்பட்டு அவர் மீது விசாரணை தொடங்குகிறது. மேலும் நடவடிக்கைகள் தொடரும் என்று ஐ.ஜி. அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இப்படி ஒரு அரசு நீதி விசாரணை அடிப்படையில் நடவடிக்கைகள் எடுத்தது தவறு என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீதி விசாரணை என்றாலே வேப்பங்காய் என்று கருதப் பட்ட ஒரு காலத்தை மாற்றி இன்று அரசு சார்பில் சொல்லப்பட்ட தகவல் சரியானவை அல்ல என்று எடுத்துச்சொல்லப்பட்ட நேரத்தில் அதையும் சேர்த்து ஆராயலாம் என்ற வகையில்தான் இன்று நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு ஒரு நடுநிலையான தீர்ப்பு இரண்டு நீதிபதிகளால், இரண்டு விசாரணைக் குழுக்களால் அளிக்கப்பட்டு அவற்றின் மீது இன்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

சென்னையில் மாணவர்களை சில பேர்கள் இன்று தூண்டிவிடுகிற வகையில் வெளியில் இருக்கிற பத்திரிகைகளும், அரசியல் வாதிகளும் நடந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை யெல்லாம் அரசு இன்று கவனித்துக்கொண்டுதானிருக்கிறது என்பதை நான் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன். நான் இந்த அவை மூலம் மாணவக் கண்மணிகளையெல்லாம் கேட்டுக்கொள்வேன், மாணவ

நண்பர்களுக்கு க்ளேவ்ஸ் ஹாஸ்டலில் அதேபோல் பாளையங் கோட்டையில் ஏற்பட்ட சம்பவத்திற்காக இந்த அரசு தன் வருத்தத்தை ஏற்கனவே தெரிவித்திருப்பதுபோல் அதற்கு அடிப்படையாக நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்து அந்த நீதி விசாரணைகளின், அடிப்படையில் எழுந்துள்ள காரியங்களுக்கு தொடர்பாக இப்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, நான் மாணவமணிகளை மிகுந்த பணிவோடு அவர்களிடம் எனக்குள்ள உரிமையின்பால் கேட்டுக்கொள்வேன், ஏதாவது கிளர்ச்சிகளில் ஈடுபடாமல் அவர்களுக்கு என்னிடம் ஏதாவது சொல்லவேண்டுமென்றால் யார் தலைமையிலும் வந்து என்னைச் சந்திக்க நான் தயாராயிருக்கிறேன் என்று எடுத்துக் கூறி இவ்வளவிற்குப் பிறகும் அவையை ஒத்திவைத்து பேச வேண்டிய தேவை இல்லை என்ற கருத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

Dr. H. V. HANDE : On a point of Order, Sir. . .

Thiru V. KRISHNAMOORTHI (Nellikuppam) : How can there be any point of Order, now?

Dr. H. V. HANDE : I would like to submit to the Hon. Chief Minister one thing. What I mentioned had been slightly misunderstood by the the Hon. Chief Minister. Probably, I did not explain properly or the Hon. Chief Minister did not follow what I said. நான் சொன்னதைத் தப்பாக எடுத்துக்கொண்டிருக்கலாம் அல்லவா. What I said was that I did not object to the Hon. Chief Minister's report earlier. I accept that the Cabinet met three months later after the report of the Commission of Enquiry was submitted. 21-ம் தேதி நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருப்பதாக முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 21-ம் தேதி ஒரு அதிகாரியை அப்பாயின்ட் செய்திருப்பதாகச் சொன்னார்கள். நான் சொன்னது, சபை கூடியிருக்கும்போது என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றி விவாதித்து நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கலாமே என்று சொன்னேனே தவிர முன்பு அறிக்கை விட்டது சரிதான், அப்போது சபை கிடையாது. அவை கூடியிருக்கும்போது விவாதித்து நடவடிக்கைகள் எடுத் திருக்கலாமே என்றுதான் சொன்னேன். சரியான வகையில் ரிக்கார்டில் போகவேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

1973 நவம்பர் 23]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 14-ம் தேதி அமைச்சரவைக் கூட்டத்தில் நடவடிக்கைகள் எடுப்பதுபற்றி முடிவெடுத்து அதன் தொடர்பான நடவடிக்கைகள் தான் இவைகள் என்றுதான் சொன்னேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இங்கு சொல்லி செய்திருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்திவைக்கத் தேவை இல்லை. திரு. தங்கமணி அவர்கள் இரண்டு மணிநேர விவாதம்தான் கேட்டார்கள். அடுத்து வருகிற துணை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போதும், நிதி ஒதுக்கீடு மசோதாவின் பேரிலும் பேசுவதற்கு இரண்டு நாட்கள் விவாதம் இருக்கிறது. ஆகவே, இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(இ) புதிய கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமையிடம் குறித்து அரசு தகுந்த வாக்குறுதி கொடுக்கத் தவறியதன் விளைவாக அங்குள்ள பதட்ட நிலை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள், " Serious situation and tension prevailing in Ramanathapuram and neighbouring areas following Bandh for locating Headquarters for East Ramanathapuram and the clashes which took place yesterday and failure of Government to give suitable assurance ". என்ற பொருள்பற்றி விவாதிக்கவேண்டுமென்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகர் பிரச்னை மூன்றாண்டுக் காலமாக பல கட்சிகளின் மத்தியில் விவாதத்தில் இருந்து கொண்டிருக்கிறது. சமீபத்தில் அரசு, இராமநாதபுரம் மாவட்டத்தை கிழக்கு இராமநாதபுரம், மேற்கு இராமநாதபுரம் என்று பிரிக்கப் போகிறோம் என்று தெரிவித்திருக்கிறது. அம்மாதிரி பிரிக்க வேண்டும் என்பதை பொதுவாக எல்லா அரசியல் கட்சிகளும் வரவேற்றிருக்கிறார்கள். நான் சார்ந்துள்ள கட்சியும் அதை வரவேற்கிறது. ஏற்கனவே, வாக்குறுதி கொடுக்கப்பட்டு, கிழக்கு இராமநாதபுரத்திற்கு எந்த ஊர் தலைநகராக இருப்பது என்ற ஒரு பிரச்னை எழும்பியது. ஏற்கனேவ, அரசு வாக்குறுதி

கொடுத்தபடி எல்லாக் கட்சிகளையும் கூட்டிவைத்து பேசி இந்த இடத்தில்தான் தலைநகரை வைக்கப் போகிறோம் என்று சொன்னால் விகாரத்திற்கே இடமில்லை. எந்த ஊர் என்பது தெளிவாகத் தெரியாமல் பலர் பல ஊர்களைப் பற்றி பேச ஆரம்பித்தவுடன்தான் இந்த நிலைமை ஏற்பட்டது பந்த்க்கு தலைமை தாங்கியிருப்பவர் சட்டமன்ற உறுப்பினர்தான். அவர் தி.மு.கழகத்தைச் சேர்ந்தவர் தான். ஆகவே, இதில் கட்சிப் பிரச்னை இல்லை. பந்த் மூன்று நாட்கள் நடந்தது.

ஏற்கனவே, நான் இந்த விஷயத்தை எழுப்பினேன். ஆனால், அவசரம் இல்லை என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். நேற்று நடந்துள்ள சம்பவத்தைப் பார்த்தால் இரண்டு கட்சிகளுக் கிடையில் மோதல் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனக்கு வந்துள்ள தகவல், இதுபற்றி சட்ட மன்றத்தில் எந்தவிதமான கருத்தையும் நீங்களும் கிளப்பவில்லை, அரசும் சொல்லவில்லை, மக்கள் அதிர்ச்சியில் இருக்கிறார்கள், அரசு என்ன நிலை எடுக்கிறது என்று தெரிந்தால் அமைதியாக பிரச்னை முடிந்துவிடும் என்ற தகவல் தான் வந்திருக்கிறது. இது கட்சிக்கு கட்சி ஏற்படும் மோதல் பிரச்னையல்ல. அப்படி திருப்பிவிட முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, எல்லாக் கட்சிகளும் கூடி விவாதித்து அரசு இங்கு உறுதியாகவே சொல்ல வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப் போகிறோம் என்று அரசு தெளிவாகச் சொல்லவேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பகுதிகள் சேரவில்லை என்பது அதிலிருந்து தெளிவாகும். புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொருத்து விவரமான பதில் இங்கு சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால், இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கப் போகிறோம் என்ற விஷயம் இந்த மன்றத்தில் சொல்லப்படவில்லை. பிரிக்கப் போகிறோம் என்பதை முதலில் இங்கு தெளிவுபடுத்திய பிறகுதான் தலைநகர் பொறுத்து எல்லாக் கட்சியினரையும் கொண்ட கூட்டத்தைக் கூட்ட வேண்டும். அல்லாதுபோனால் தொடர்ந்து விவகாரங்கள் நடந்து கொண்டு தானிருக்குமென்று பத்திரிகைச் செய்திகளிலிருந்து தெரிகிறது.

அப்படி விவகாரங்கள் ஏற்படுகின்றன என்றால் அதைத் தீர்த்து வைக்கும் பொறுப்பு அரசுக்கு உண்டு. எனவே, இந்தப் பிரேரணையை நான் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இல்லாத ஒரு பிரச்னைக்காக ஒரு கிளர்ச்சி இராமநாதபுரம் நகரில் உருவாக்கப்பட்டு அதன் தொடர்பாக இப்போது ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டம் நிர்வாக வசதிக்காக இரண்டாக பிரிக்கப்படவேண்டும். மேற்கு இராமநாத புரமா அல்லது கிழக்கு இராமநாதபுரமா, அதற்கு என்ன பெயர்கள் என்பதுபற்றியெல்லாம் கூட சொல்லாமல் அரசாங்கம் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டிருக்கிறது என்றுதான் அறிவித்திருக்கிறது. எங்கு தலைநகரம் இருப்பது, எந்தெந்தத் தாலுகாக்களை எந்தெந்த பகுதியோடு சேர்ப்பது என்பவைகளைப் பற்றியெல்லாம் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

அதுமாத்திரமல்ல. தமிழ்நாடு நிர்வாகச் சீர்திருத்தக் குழு விடம் பொதுவாக தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்களை நிர்வாக வசதிக்காக இன்னும் சிறிய அளவில் எப்படி எப்படி பிரிக்கலாம் என்பதற்கான வாய்ப்புக் கூறுகளை அரசுக்குத் தரவேண்டும், அப்படிக் கருத்துக்களைப் பெற்ற பிறகு அரசாங்கம் கலந்து ஆலோ சித்து முடிவு மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கேற்ப, ஏ. ஆர். ஸி. குழுவினர் எந்த மாவட்டங்களை எப்படி பிரிப்பது என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இதற்கிடையில், சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் புதுக் கோட்டை தனி மாவட்டமாக ஆகும் என்ற அறிவிப்புக்கேற்ப அந்தப் பணிகள்தான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. அதற்காக, ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டு அவர்கள் தம் அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பிரிக்கும் பிரச்னை பற்றியோ அல்லது தலைநகர் பிரச்னைக்கோ எந்தவிதமான கிளர்ச்சியும் எழு வதற்கு சாத்தியக்கூறு இல்லை. நான் கேள்விப்பட்டேன், அது சரியோ தவறோ, திரு. தங்கமணி அவர்கள்தான் சொல்லவேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிதான் சிவ கங்கைதான் தலைநகராக இருக்கவேண்டும் என்று ஏழெட்டு நாட்

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 நவம்பர் 23

களுக்குமுன் ஒரு தீர்மானம் போட்டதாகவும், அதற்குப் பிறகு இராமநாதபுரத்தில் இந்தக் கிளர்ச்சி எழுந்தது என்ற தகவல். அது சரியோ தவறோ தெரியவில்லை. ஏனெனில், தவறான தகவலை இந்த அவைக்குச் சொன்னேன் என்று ஆகிவிடக் கூடாது. ஒன்று சொல்வேன். சிவகங்கையில் உள்ள கம்யூனிஸ்ட்ஸ் ஆனாலும் சரி அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தினரானாலும் சரி அங்கேயே இருக்கவேண்டுமென்றுதான் சொல்வார்கள். இராமநாத புரத்தைச் சேர்ந்தவர்கள், அவர்கள் கம்யூனிஸ்ட்களானாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத்தினரானாலும் சரி, அல்லது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சரி, அவர்கள் இராமநாதபுரத்தி லேயே இருக்கவேண்டும் என்றுதான் சொல்வார்கள். ஆக, ஒவ் வொரு ஊர் பிரச்னை வந்ததும், அங்கே கட்சிப் பிரச்னைகள் நிச்சய மாக நுழைந்துவிடக்கூடும். ஆகவே, நாம் நிதானமாக அவற்றை அணுக வேண்டும். அரசே அதைப்பற்றி இன்னும் தெளிவாகச் சொல்லவில்லை. அது குறித்து அறிவிக்கவில்லை.

திரு. தங்கமணி அவர்கள் சொல்வது வருந்தத்தக்க ஒன்றாகும். இராமநாதபுரம் மாவட்டத்தில் பந்த் நடத்தப்போகிறார்கள் என்ற செய்தி வந்த உடனேயே நான் விரிவாக ஒரு அறிக்கையை வெளி யிட்டேன். இராமநாதபுரம் மாவட்டம் பிரிக்கப்படும் என்பதைக் கொள்கை அளவிலே தான் அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. அது எப்போது பிரிக்கப்படும், அதன் தலைநகரம் எங்கே வைப்பது என்பதைப்பற்றி இன்னும் யோசிக்கக்கூட இல்லை. ஆகவே, இராம நாதபுரம் மாவட்ட மக்களும், அரசியல் கட்சியில் உள்ளவர்களும் இந்தக் கிளர்ச்சியைக் கைவிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். எல்லோருடைய முறையீடுகளையும் அரசு கவனத்தில் கொண்டு, பொது மக்களின் எண்ணத்திற்கேற்ப அரசு நடந்து கொள்ளும். ஆகவே, கிளர்ச்சியைக் கைவிட வேண்டுமென்று அன்றைக்கே வெளியிட்டு இருக்கிறேன். திரு. தங்கமணி அவர் களும் அதைப் படித்து இருக்கக்கூடும் என்று நம்புகிறேன். எந்த ஊரை இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரமாக வைப்பது என்பதை நிச்சயமாக ஏ.ஆர்.சி. குழுவின் அறிக்கை வந்ததற்குப் பிறகு, அரசாங்கம் அவர்கள் சொன்னது போல், எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூட்டி வைத்து, அந்த மாநாட்டிலேதான் அரசு

ஒரு முடிவை எடுக்கும் என்று மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்தி, இப்படிப்பட்ட கிளர்ச்சிகளுக்கு நீங்கள் ஊக்கம் அளிக்காமல் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஒரு எண்ணம் நாட்டில் உள்ள எதிர்க்கட்சிகளிடத்திலே இருக்கிறது. எதிர்க்கட்சிகளுக்கு இடம் கொடுக்காமல் எல்லாவற்றையும் செய்து விடுகிறார்களே இந்த அரசினர் என்று சொல்லி, ஏதாவது ஒன்றைச் சாக்காக வைத்துக் கொண்டு கிளர்ச்சி நடத்தலாமா என்ற மனப்போக்கு வளர்ந்து வருகிறது. அந்த மனப்போக்கு வளராமல் பார்த்துக்கொள்வதற்கு எல்லாக் கட்சிகளும் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கூறி, இன்னும் தலைநகரம் எங்கே வைப்பது என்பதைப் பற்றி தீர்மானிப்பதற்கு முன்பே கிளர்ச்சி நடைபெற்று இருக்கிறது. ஆகவே, அதற்கான ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கூறி இந்த அளவில் முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கூறி, இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ஈ) வேலூர் அரசினர் பெண்ட்லேண்டு மருத்துவ மனையில் இறந்த முஸ்லீம் மாது, முஸ்லீம் மாபுப்படி அடக்கம் செய்யப்படாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லத்தீப் அவர்கள் "The mysterious death of Mrs. Zaniab Bi, the aunt of the Principal, Nawab Abdul Hakeem Arts College, Melvisharam, at the Government Pentland Hospital, Vellore, on 12th November 1973 where she was knocked down by a rashly driven vehicle on or about 4th November 1973 and the mysterious disappearance of the dead body of the said lady and the consequent unrest that prevails in and around Vellore resulting in all-party agitation fastly spreading in many parts of the district," என்ற பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி ஒத்திவைப்பு தீர்மானத்தின்கீழ் வரும் என்பதைப் பற்றி அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலூர் அரசினர் பெண்ட்லேண்டு மருத்துவ மனையில் இறந்த முஸ்லீம் மாது முஸ்லீம் மரபுப்படி அடக்கம் செய்யப் படாதது குறித்து

[திரு. எம். ஏ. லத்தீப்] [1973 நவம்பர் 23

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, அவசர முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்னை கடந்த ஒரு வார காலமாக வடாற்காடு மாவட்டத்தில் குறிப்பாக வேலூர் நகரத்தில் பெரிய பரபரப்பையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு வேலூர் நகரத்தில் மக்கள் தங்களுடைய கொந்தளிப்பை வெளியிடும் வகையில் ஊர்வலமும், ஹர்த்தாலும் நடத்தியிருக்கிறார்கள். அந்தக் கொந்தளிப்பு மாவட்டத்தின் மற்ற பகுதிகளுக்கும் பரவும் ஒரு சூழ்நிலை உருவாகி வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட இந்த அவையின் பிற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மேல்விஷாரம், அப்துல் ஹக்கிம் ஆர்ட்ஸ் காலேஜின் முதல்வராக இருக்கும் அஹமது பாஷாதா அவர்களின் மாமி மேல்விஷாரத்திலிருந்து மேலூருக்கு பஸ்சிலே 4-ம் தேதி சென்று இருக்கிறார்கள். பஸ்ஸை விட்டு இறங்கிய உடனே அவர்கள் மீது ஏதோ ஸ்கூட்டர் ஒன்று வேகமாக மோதியதாகவும், அதன் காரணமாக அவர்கள் படுகாயம் அடைந்து கீழே விழுந்து விட்டதாகவும் சொல்லப்படுகிறது. உடனடியாக அவர்கள் ஹாஸ்பிடலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு இருக்கிறார்கள். வேலூர் கவர்ன்மெண்ட் பெண்ட்லண்ட் ஹாஸ்பிடலுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அங்கே அவர்களுடைய பெயர், அவர்களுடைய வயது எல்லாம் குறிக்கப்பட்டு இருக்கின்றது. அவர்கள் செல்லும்போது முஸ்லீம் பெண்கள் எப்படிச் செல்வார்களோ அப்படி பர்தா அணிந்துகொண்டு சென்று இருக்கிறார்கள். அதைக்கொண்டுதான் அவர்களுடைய பெயர் என்னவென்று எழுதியிருக்கிறார்கள். அவர்களை ஹாஸ்பிடலில் அனுமதித்து இருக்கிறார்கள். பிறகு 12-ம் தேதி அவர்கள் அதே நிலையில் இருந்து இறந்து விட்டார்கள். முஸ்லீம் சமுதாயத்திலே ஒரு அனாதைப் பிணமாக இருந்தாலும், வேலூர் பக்கங்களில் என்ன வழக்கம் என்றால், மசூதி அல்லது ஜமாத்து தலைவரிடத்தில் கொடுத்து விடுவார்கள். வேலூரைப் பொறுத்தவரையில் பல நாட்களாக இது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஹாஸ்பிடலிலும் இந்த முறை பின்பற்றி வந்திருக்கிறார்கள். ஆனால் இந்தப் பிணத்தைப் பொறுத்தவரையில் அப்படி தரப்படவில்லை.

1973 நவம்பர் 23] [திரு. எம். ஏ. லத்தீப்]

ஏன் அவர்களுடைய சொந்தக்காரர்கள் வரவில்லை என்ற கேள்வி எழுகிற நேரத்தில், அவர்கள் வேலூரில் உள்ள உறவினர் வீட்டில் இருக்கிறார்கள் என்று மேல்விஷாரத்தில் உள்ளவர்களும், மேல்விஷாரத்தில் உள்ள உறவினர்கள் வீட்டில் இருப்பதாக வேலூரில் உள்ளவர்களும் நினைத்துக்கொண்டு இருந்திருக்கிறார்கள். அவர்கள் மேல்விஷாரத்திலிருந்து வேலூருக்கு வந்து பள்ளிகொண்டா போக வேண்டுமென்று வந்திருக்கிறார்கள். இந்த விஷயம் யாருக்கும் தெரியாது. போலீசாரும் சொந்தக்காரர்கள் வீட்டிற்குத் தெரிவிக்கவில்லை. வேலூர் 14-ம் தேதி மாலை முரசில் முஸ்லீம் பெண் இறந்துவிட்டாள் என்ற செய்தியைப் படித்த பிறகுதான் அதனுடைய முக்கியத்துவம் தெரியவந்தது. நான்கூட வாணியம்பாடியில் அந்தச் செய்தியைப் படித்தேன். அவர்கள் அதற்குப் பிறகு வேலூருக்குப் போய் பார்த்திருக்கிறார்கள். அங்கேயில்லையென்றதும் ஹாஸ்பிடலுக்குச் சென்று விசாரித்து இருக்கிறார்கள் அதன் பிறகு அங்கே அவர்கள் காட்டிய துணிகளை வைத்து அவர்களுடைய மாமியின் பிணம்தான் என்று அடையாளம் கண்டிருக்கிறார்கள். ஹாஸ்பிடலில் போலீசின் அனுமதி இல்லாமல், முனிசிபல் சிப்பந்தியிடம் கொடுத்து அதை அடக்கப் படுத்தச் சொல்லி இருக்கிறார்கள். அந்த முனிசிபல் சிப்பந்தியை கேட்டால் அவர் பாலாற்றில் இந்து பிணங்களை வைக்கும் சுடுகாட்டில் அடக்கம் செய்ததாகத் தகவல் தந்திருக்கிறார். முஸ்லீம் சமுதாயச் சடங்குபடி அவரை அடக்கம் செய்ய வேண்டுமென்பதற்காக அந்தப் பிணத்தைத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்குப் பதில் கிடைக்கவில்லை. உடனே தாசில்தாரிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். அவரும் ஒன்றும் பதில் சொல்லவில்லை. பிறகுதான் 16-ம் தேதி மாவட்டக் கலெக்டரைச் சந்தித்து இதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும், அந்தப் பிணத்தை எங்களிடத்தில் தாருங்கள். நாங்கள் முஸ்லீம் மரபுப்படி அவர்களை அடக்கம் செய்யவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர் 19-ம் தேதி உத்தரவு கொடுத்திருக்கிறார். மறுநாள் காலை 7 மணிக்கு அந்த முனிசிபல் சிப்பந்தியை அழைத்துக் கொண்டு போலீசாரோடு 100 மக்கள் அங்கே சென்று இருக்கிறார்கள். புதைக்கப்பட்டதாகக் கூறிய இடத்தைத் தோண்டிப் பார்த்து இருக்கிறார்கள். 8 அடி ஆழம் தோண்டியும் பிணம் கிடைக்கவில்லை. எங்கே புதைத்தாய் என்று கேட்டால் சரியானபடி பதில் இல்லை.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1973 நவம்பர் 23

சுமார் 40 வயதை மதிக்கக்கூடிய அந்த அம்மையார் வீட்டை விட்டுச் செல்லும்போது பல ரூபாய் மதிப்புள்ள நகைகளை அணிந்து கொண்டு சென்றதாகவும், பணம் கொஞ்சம் வைத்து இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. அவர்கள் ஸ்கூட்டரில் அடி பட்டு இறந்ததும், ஆஸ்பிடலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிச் சேர்க்கப்பட்டிருக்கிறபோது ஆஸ்பிடலில் டி.எ.எப். ரிப்போர்ட் எழுதுவார்கள். அந்த ரிப்போர்ட்டில் என்ன எழுதியிருக்கிறார்கள்? போஸ்ட்-மார்ட்டம் செய்யப்பட்டதா இல்லையா? அது குறித்து ஒன்றும் விவரம் தெரியவில்லை. முஸ்லீம் பெண் என்று சரியாகத் தெரிந்ததாலேதான் மாலை முரசில் போட்டு இருக்கிறார்கள். முஸ்லீம் பெண் என்று தெரிந்து இருந்தும், அவர்கள் மிகவும் வசதி படைத்த குடும்பத்திலிருந்து வந்தவர்கள் என்று தெரிந்து இருந்தும், அவர்களுக்குச் சொந்தக்காரர்கள் யாரும் வரவில்லையென்று அறிந்து இருந்தும், அந்தப் பிணத்தை பாகியாத்திடத்தில் கொடுக்காமல், அதிகாரிகள் நகராட்சிச் சிப்பந்திகளிடத்தில் கொடுத்து ஆடுமாடுகளைப் புதைப்பது போல் புதைத்து விடுங்கள் என்று குறிப்பிட்டு . . .

[முற்பகல் 11-00]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அனாதையாக ஆஸ்பத்திரியில் இறந்து போகிறார்கள் என்றால், உறவினர் யாரும் ஏற்கெனவே உரிமை கொண்டாடாவிட்டால் இப்படி வழங்குவதைத் தவிர ஆஸ்பத்திரியில் வேறு வழி கிடையாது. ஆகவே, ஆடுமாடுகளைப் போல் புதைக்கவில்லை. அப்படி ஒரு தவறான கருத்தை தாங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டாம். யாரையும் அப்படிச் செய்வதற்கு நாங்கள் அனுமதிப்பது இல்லை. அப்படி ஒரு நிலைமையும் இல்லை. இருக்கிற முறைதான் அது அப்படி ஒரு முறை இருக்கிற காரணத்தினால் கடுமையான சொற்களைத் தாங்கள் கையாள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: அமைச்சர் அவர்கள் கடுமையான சொற்களை பிரயோகிக்க வேண்டாம் என்று கூறுகிறார்கள். அந்த முறையைப் பற்றிய பிரச்னை இல்லை. அதிகாரிகள் தவறுதலாக நடந்திருக்கிறார்கள். ஏதோ பெரிய தவறு நடந்திருக்கிறது. சட்டத்

1973 நவம்பர் 23] [திரு. எம். ஏ. லத்தீப்]

திற்குப் புறம்பான காரியம் நடந்திருக்கிறது, அந்த மாது உண்மை யாகவே ஸ்கூட்டரில் அடிபட்டு இறந்தார்களா அல்லது வேறு எங்கேயாவது எடுத்துச் செல்லப்பட்டாரா என்ற சந்தேகம் மாவட்ட மக்களிடையே நிலவி வருகிறது. நேற்று முன்தினம் ஊர்வலம், ஹர்த்தால் எல்லாம் நடைபெற்றிருக்கிறது. மக்க ளுடைய உணர்ச்சி தூண்டப்பட்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சி சம்பந்தமாக மாவட்டத்தில் ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இது ஒரு அவசரமும், அவசியமும், முக்கியத்துவமும் வாய்ந்த ஒரு பிரச்னையாக இருப்பதினால், வழக்கம் போல சொல்லாமல், சபையில் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து, இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நண்பர் லத்தீப் அவர்கள் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானத் தில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்த அம்மையார் 4—11—1973-ல் ஒரு மோட்டார் சைகிள் விபத்திலே சிக்கிக் காயமுற்றார்கள். காய முற்றவுடனே மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டிருக் கிறார்கள். அவரை மருத்துவ மனைக்குக் கொண்டு சென்ற சப்- இன்ஸ்பெக்டர் பெயர் கூட அப்துல் கனி என்பதையும் நான் தெரி வித்துக் கொள்கிறேன். 4-ம் தேதி மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டவர் 12-ம் தேதி வரையில் நினைவிழந்த நிலையில் இருந்து 12-ம் தேதி உயிர் துறந்து விட்டார். அப்படி உயிர் துறந்துவிட்ட பிறகு, வேலூர் வடக்கு இன்ஸ்பெக்டர் பிரேத விசாரணை நடத்தினர். அவர் பெயரும் திரு. யூனுஸ்கான் என்ப தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது ஹிந்து முஸ்லீம் தகராறாக வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான். இந்த விளக்கம் சொல் கிறேன். இரண்டு அதிகாரிகளும் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த வர்கள்தான். அந்த அம்மையாரை முதலில் விபத்து நடந்த இடத் திலிருந்து மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றதும் ஒரு முஸ்லீம் அதிகாரிதான். 4-ம் தேதி ஆக்சிடெண் ஆகி 12-ம் தேதி உயிர் பிரிந்த பிறகு பிரேத விசாரணை நடத்தியதும் இன்னொரு முஸ்லீம் அதிகாரிதான். அதற்குப் பிறகு 13-ம் தேதி. மருத்துவமனையில் உள்ளவர்களுக்கு எந்தவிதமான விலாசமோ, பெயரோ தெரிவிக்கப்படாத நிலையில், மருத்துவத்துறை நிர்வாகி

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 நவம்பர் 23

கள் வேலூர் நகரமன்றத்தினரிடம் அந்தப் பிரேதத்தைத் தந்து விட்டார்கள், அனாதை என்ற அடிப்படையில் தந்துவிட்டார்கள். எட்டு நாட்கள் வரையில் யாரும் அந்த அம்மையாரை உரிமை கொண்டாடிக் கொண்டு வராத காரணத்தினால், அதற்குப் பிறகு அவர்கள் அந்தப் பிரேதத்தைப் புதைத்திருப்பதாக எனக்கு அங்குள்ள அதிகாரிகள் மூலம் தகவல் தரப்பட்டிருக்கிறது.

அதற்குப் பிறகு, 12-ம் தேதி இறந்து, 13-ம் தேதி அந்தச் சடங்குகள் முடிந்த பிறகு, 19-ம் தேதி அன்று மேல்விசாரத்தில் உள்ள ஹக்கீம் கல்லூரி பிரின்சிபாலுக்குச் சொந்தக்காரரும், வேலூர் நகரம் அகமது பேக் சாயபு தெருவில் வசிப்பவருமான மு.கமது அனீப் என்பவர், இறந்துபோன அம்மையார் அணிந்திருந்த துணிமணிகள் மூலம் அடையாளம் கண்டு, இறந்து போனவர் தன்னுடைய சித்தி என்றும், ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த அனந்தப்பூர் சுக்கூர் சாயபுவின் மனைவியாகிய திருமதி ஜைனாபிபி என்றும் விவரங்கள் கூறினார். அதற்குப் பிறகுதான் புதைத்த இடத்திலிருந்து சவத்தை எடுக்க வேண்டும் என்ற முயற்சி நடைபெற்றது. முனிசிபாலிடியாரிடத்தில் ஒப்படைக்கப் பட்ட பிரேதத்தை நகர சுத்தித் தொழிலாளர் முனுசாமி என்பவர் தான் அடக்கம் செய்தார். அவர் 'நான் இங்கே பல பிணங்களைப் புதைத்தேன், எதை எந்த இடத்தில் என்று தேடி எடுக்க முடியவில்லை, என்று கூறிவிட்டார். இருந்தாலும்கூட, இதைச் சாதாரணமாக விட்டுவிடாமல் சென்னையிலிருந்து, தகுதி மிக்க, பெரிய ஒரு சீனியர் அதிகாரி நேற்று இரவு அனுப்பப்பட்டிருக்கிறார். அதற்கான விவரங்களை அறிந்து உடனே எனக்குத் தகவல் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறேன். இந்த அளவிலே இதைப்பற்றி விவாதம் தேவையில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: இதில் சம்பந்தப்பட்டவர் டிராபிக் சப் இன்ஸ்பெக்டர் அப்துல் கனி, பிரேத விசாரணை நடத்தியவர் யூனுஸ் கான் என்ற தகவல்கள் எனக்கு இரண்டு நாட்களுக்கு முன்னால் வந்துவிட்டன. அந்தத் தகவல்களை வைத்துத்தான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். இங்கே உள்ள பிரச்னை ஹிந்து முஸ்லீம் என்ற பிரச்னை அல்ல. பொதுவாக இந்த மாவட்டத்திலுள்ள சம்பிரதாயங்களை மீறி குறிப்பிட்ட ஒரு குடும்

பந்தினுடைய மாதுவைப்பற்றி எந்தவிதமாக அதை அணுக வேண்டுமோ அந்த விதமாக அணுகுவதற்கு அதிகாரிகள் தவறிய காரணத்தினால் இதை நான் கொண்டு வந்திருக்கிறேன். இதிலே வேறு சில பிரச்னைகளும் இருக்கின்றன. இவைகளை விவாதத்திற்கு இந்த அவையிலே எடுத்துக் கொள்ளக் கூடாது, அதைப்பற்றி வெளிப்படையாகப் பேசக் கூடாது என்ற காரணத்தினால் பல விஷயங்களை நான் இங்கே வெளிப்படையாகப் பேசவில்லை. சில விஷயங்களை வெளிப்படையாகப் பேசினால் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு, மேற்கொண்டு புலன் விசாரணை செய்வதற்கு தடங்கலாக இருக்கும் என்ற காரணத்தினால் நான் பல விஷயங்களை இந்த அவையிலே சொல்லவில்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது இதுதான். அவர்கள் சில விளக்கங்கள் தந்திருந்தாலும், ஒரு பெரிய சர்க்கார் அதிகாரி சென்னையிலிருந்து அனுப்பப்பட்டு அவர்கள் மூலம் விசாரணை நடக்கும் என்று இந்த அவையிலே அறிவித்திருந்தும், 'ஹவுஸ் பேனல்' இந்த ஹவுசிலிருந்து சில பேர்களை அதற்காக நியமித்து விசாரணை செய்வதற்கு அரசு ஆவன செய்தால் நலமாக இருக்கும். மக்களிடையே ஏற்பட்டிருக்கிற அவநம்பிக்கையைப் போக்க ஒரு 'ஹவுஸ் பேனலை' நியமித்து விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சென்னையிலிருந்து ஒரு பெரிய போலீஸ் அதிகாரி அனுப்பப்பட்டிருக்கிறார். அவர் சென்று விவரம் சேகரித்த பிறகு உரிய நடவடிக்கை நிச்சயம் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கும், உறுதிமொழிக்கும் பிறகு சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதை விவாதிக்கத் தேவை யில்லை. ஆகவே, இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், சார். மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் சொல்லும்பொழுது இறந்தவர்களின் அடையாளம் தெரியாமல் போனால், இதுபோன்ற மருத்துவ நிலையங்களிலுள்ள அந்தப் பிரே தங்களை நகரசபை சிப்பந்திகளிடம் ஒப்படைப்பது என்பது

வழக்கமாக இருந்து வருகிறது என்று கூறினர். முஸ்லீம் என்று தெரிந்தவுடன் அங்குள்ள ஒரு முஸ்லீமுக்கு அறிவிப்புக் கொடுத்து அவர்வசம் பிணத்தை ஒப்படைப்பது என்பதுதான் இது வரையில் நடைமுறையில் இருந்து வருகிறது. சட்டம் எப்படி இருக்கிறதோ நான் அறியேன். ஆகவே, அந்த முறையில் ஏதேனும் தவறுகள் ஏற்படாத வண்ணம், எதிர்காலத்தில் இப்படி ஏதேனும் முஸ்லீம் பிணங்கள் எந்த இடத்தில் அனுதையாக இருந்தாலும், அதுபற்றி ஒரு முஸ்லீமுக்கு அறிவிப்புச் செய்வோம் என்ற விளக்கத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மருத்துவ மனைகளில் உள்ள பணிகள் பலவகையானவை. சிகிச்சை வழங்குவதுதான் முதல் கடமை. அனுதை என்று தெரிந்தவுடனே, முஸ்லீம் என்று தெரிந்தவுடனே, அப்பொழுதே ஒரு முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவர் அனுதைக்கு உறவினர் அல்லது கடமைப்பட்டிருக்கிறவர் என்று பதிவு செய்து கொண்டிருந்தால் அவர்கள் உடம்பை வழங்குவது எளிதாகிவிடும். சில நேரங்களில் எவ்வளவுதான் முஸ்லீம் சமுதாயத்திற்கு தனிப்பட்ட சில சடங்குகள், உரிமைகள் இருந்தாலும், தவறுகள் ஏற்பட்டு விடலாம். நல்லவேளையாக முஸ்லீம் என்று உடையிலிருந்து அடையாளம் தெரியவந்தது. பத்திரிகையிலும் செய்தி வந்திருக்கிறது. எந்த ஒரு முஸ்லீம் நபரும், அல்லது முஸ்லீம் ஜமாத்தைச் சேர்ந்தவரும் அனுதையாக சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த 6, 7 நாட்களிலும், அந்த அனுதை மீது கவலை கொண்டு கவனிக்க முன்வரவில்லை என்பதை உறுப்பினர் அவர்கள் மறந்துவிடக் கூடாது. அந்த அடிப்படையிலே யாராவது அம்மாதிரி தெரிவித்திருக்க வேண்டும். அப்படி யாரும் தெரிவிக்க வில்லை. ஆகவே, இம்மாதிரி எங்கேயாவது விபத்து ஏற்பட்டால், அந்த விபத்தில் சிக்கியவர் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவரானல், முஸ்லீம் அனுதை என்று தெரிந்தால் உடனே முஸ்லீம் ஜமாத்திலிருந்து உரிமையைத் தெரிவிக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(4) கவன ஈர்ப்பு.

சிறுவாணி நீர்ப் பங்கீடு சம்பந்தமாக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் குறித்து

THIRU N. DENNIS : Sir, I wish to call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance, namely, the agreement reached during August 1973, between the Governments of Tamil Nadu and Kerala over the sharing of Siruvani waters.

(Mr. Deputy Speaker in the Chair.)

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, Coimbatore district has an average rainfall of 750 mm. only. The terrain is rocky and sloping so that the rain water rushes through the rivers and streams without having adequate time to recharge the sub-soil and underground water.

Coimbatore Town is being supplied with drinking water from Siruvani. The water supply scheme is in existence from 1931 onwards and was designed for an ultimate population of 1 lakh at 20 gallons per capita daily. The population has already exceeded 3 lakhs. The supply of water in non-summer months is 4.1 mgd. Apart from Siruvani source there are in use 79 bore wells with independent distribution system giving 0.65 mgd. of water. Thus the normal supply is 4.75 mgd.

During the summer months, the availability of water at Siruvani gets reduced very much and it feeds only one of the existing two mains. The quantity of water actually realised from Siruvani comes down to 2.4 mgd. as against 4.1 mgd. normally available in non-summer months.

To augment the supply of drinking water to the Coimbatore Municipal Town, the Government of Tamil Nadu sought the permission of the Government of Kerala to construct a new dam downstream of the existing dam at Muthukulam across the Siruvani river flowing through the State of Kerala with adequate storage capacity to supply a quantity not exceeding 1,300 m. cft. of water from the Siruvani river annually to the Coimbatore Municipal Town for drinking water supply purposes. The Chief Ministers of Kerala and Tamil Nadu met in Conference on May 10, 1969

and came to a settlement regarding the construction of a dam across Siruvani and the diversion of water for the said purpose. An agreement regarding the sharing of Siruvani waters has since been reached by the Government of Tamil Nadu and Government of Kerala on 19th August 1973.

A copy of the agreement @ entered into between the Government of Tamil Nadu and the Government of Kerala on 19th August 1973 for sharing Siruvani waters is placed on the Table of the House.

According to the agreement with the Government of Kerala, Tamil Nadu can draw a quantity of 36.6 m.cum. (1,300 m. cft.) per year to meet the drinking water requirements of Coimbatore and its surroundings. This works out to a daily supply of 104.4 million litres or 22.30 million gallons. The project is now designed to draw this quantity. All the works to be carried out in Kerala territory will be done by that Government at the cost of Tamil Nadu Government.

In pursuance of the agreement, the Chief Engineer, T.W.A.D. Board has submitted an outline proposal for "Combined Water Supply Augmentation Project with Siruvani as source" estimated to cost sR. 1,021.00 lakhsf for installation (Rs. 379.00 lakhs for works in Kerala territory and Rs. 642.00 lakhs for works in Tamil Nadu territory) and 9.00 lakhs for annual maintenance. This is under consideration of Government.

Apart from Coimbatore, other areas proposed for inclusion in Greater Coimbatore are—

1. Uppilipalayam.
2. Ganapathy.
3. Singanallur.
4. Peelamedu.
5. Sowripalayam.
6. Kuniamuthur.

@143-152-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

7. Telungupalayam.
8. Kurichi.
9. Sanganur (part).
10. Kavandampalayam.
11. Krishnarayapuram.
12. Ramanathapuram.
13. Puliakulam.
14. Anupparapalayam.
15. Sundakamuthur.
16. Attupalayam.

Some of the villages lying *en route*, such as (1) Thopilipalayam. (2) Alandurai, (3) Puluvapatty, (4) Madampatty, (5) Kallampalayam, (6) Patchapalayam, (7) Chettipalayam, (8) Perur and (9) Telengupalayam have no other source of supply of drinking water nor the financial capacity to have an independent ater supply of their own. While designing the water supply scheme for Greater Coimbatore with Siruvani as source, the requirements of Coimbatore Town, other towns to be included in Greater Coimbatore and wayside villages lying *en route* have therefore been taken into account.

After the conclusion of Siruvani agreement, Government of Tamil Nadu have sanctioned a sum of Rs. 10.00 lakhs for payment to the Government of Kerala to meet the cost of preliminary works on the project and a sum of Rs. 15.00 lakhs towards contribution for the formation of the road from Tachampara to the dam site in Kerala territory.

(5) அறிக்கை அளித்தல்.

குடிமைப்பொருள் வழங்குதுறை (முதற்பகுதி) மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், 'குடிமைப் பொருள் வழங்குதுறை' பற்றிய அறிக்கையை அவைக்கு அளிப்பார்கள்.

THIRU V. KRISHNAMOORTHI (Nellikuppam) : Mr. Deputy Speaker, Sir, I rise to present the Report of the Estimates Committee on Civil Supplies (Part I).

(6) மின்வாரியத்தின் 1973-74-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்—(தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1973-74-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை குறித்தும் 1972–73-ம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கை குறித்தும் மேற்கொண்டு விவாதம் நடைபெறும். முதலில் சு. துரைசாமி அவர்கள் பேசுவார்கள்.

திரு. சு. துரைசாமி: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே இந்த மன்றத்தில் மின்சார வாரியத் துறை அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை குறித்தும், துணை நிதிநிலை குறித்தும் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய அரசாங்கம் தனியார் இலாகாவிலே இருக்கின்ற ஏழு மின்சார நிறுவனங்களையும் அரசுடைமையாக்க நடவடிக்கை எடுத்திருப்பதற்காக முதற்கண் இந்த அரசுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, இந்தியா நாடு முழுவதும் மின்சாரப் பற்றுக்குறை ஏற்பட்டு, பல்வேறு மாநிலங்களிலே மின்சார வெட்டு ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். தமிழ்நாட்டிலே மின்சாரப் பற்றுக்குறை இருந்தாலும் நம்முடைய அரசாங்கம் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு, அண்டை மாநிலங்களில் இருக்கின்ற அரசுகளோடு தொடர்பு கொண்டு, பண்டமாற்று அடிப்படையில் அதிகமாக மின்சாரத்தைப் பெற்று, தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றுக்குறையினால் பாதகம் ஏற்படாமல் பணி ஆற்றியமைக்காக மின்சார வாரியத்திற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக மின்சார வெட்டு இருக்கக்கூடிய காலங்களில் இதற்கு முன்பெல்லாம் தெரு விளக்குகளுக்கும் விசையேற்றங்களுக்கும் மின்சார இணைப்புக் கொடுப்பதில்லை. அதைப்போலவே

1973 நவம்பர் 23] [திரு. சு. துரைசாமி]

கிராமப்புற மக்களுக்கு புது இணைப்புக்கள் கொடுப்பதில்லை. ஆனால் கடந்த 1972–73-ம் ஆண்டில் மட்டும் கிராமங்கள் சிற்றூர்கள் என்ற அடிப்படையில் 7,782 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின்சார இணைப்பு கொடுத்திருப்பதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

அதைப்போன்று, 1—10—1973 வரையில் ஒட்டு மொத்தமாக தமிழ்நாடு பூராவும் 60,866 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின்சார இணைப்புக் கொடுத்திருக்கிறார்கள். 1972–73-ம் ஆண்டில் மட்டும் மின்சார வெட்டு இருந்தபோதிலும் நம்முடைய அரசாங்கம் 55,072 விசையேற்றங்களுக்கு இணைப்புக் கொடுத்திருக்கிறது. 1—10—1973 வரையில் ஒட்டு மொத்தமாகக் கொடுக்கப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கை 664,906 ஆகும். அதைப்போலவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும்—எல்லாச் சேரி மக்களுக்கும் தெரு விளக்கு போட்டுக் கொடுக்கப்படவேண்டுமென்று முடிவு செய்து, நம்முடைய அரசாங்கம் கடந்த 1969-ம் ஆண்டு அறிவிப்புச் செய்தார்கள். அதற்கேற்ப 1972–73-ம் ஆண்டில் மட்டும் 4,582 அரிசன குடியிருப்புக்களுக்கு நாம் மின்சார வசதி செய்து கொடுத்திருக்கிறோம். ஒட்டு மொத்தமாக தமிழ்நாடு பூராவிலும் 1—10—1973-ல் 23,695 அரிசன குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கியிருக்கிறோம். இன்னும் தமிழ்நாடு பூராவிலும் 806 அரிசன குடியிருப்புகளே பாக்கி இருக்கின்றன. அவைகளுக்கும் விரைவில் மின்சாரம் வழங்கி, இந்த அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, அரிசன மக்களுக்காகச் செயல்படுகின்ற அரசாங்கம் என்பதைக் காட்டுவதற்கு மின்சார வாரியம் முயற்சி எடுத்து பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு அகில இந்திய அடிப்படையில் பார்த்தால் நம்முடைய மாநிலத்தில்தான் மின்சாரக் கட்டணம் குறைவாக இருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்கு கேரளாவிலிருந்து நாம் பெறக்கூடிய முதல் 150 மில்லியன் யூனிட்டுகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 6.25 பைசா வீதமும் அதற்கு மேற்பட்டு ஒரு யூனிட்டுக்கு 6 பைசா வீதமும் கொடுத்து வந்தோம். இப்போது நாம் கொடுக்கக்கூடிய கட்டணம் கேரளாவுக்கு முதல் 100 மில்லியன் யூனிட்டுக்கு ஒரு யூனிட்டுக்கு 7.8 பைசா வீதம் கொடுக்கிறோம். 100-லிருந்து 300 வரையில் 8 பைசா கொடுக்கிறோம். கேரளாவிலிருந்து பெறக்கூடிய மின்சாரத்திற்கு இன்றையதினம் அதிக

[திரு. சு. துரைசாமி] [1973 நவம்பர் 23

மாக நாம் விலை கொடுத்து வாங்கினாலும் இங்கே இருக்கின்ற எல்லா மக்களுக்கும் நாம் ஏற்கெனவே அறிவித்துள்ள விலையிலேயே மின்சாரம் வழங்கி வருகிறோம். மின்சாரத் தட்டுப்பாட்டின் போது பெரிய தொழிற்சாலைகளுக்கு ஜெனரேட்டர்கள் வைத்துக் கொள்ள நம்முடைய அரசாங்கம் அனுமதி அளித்தது. ஜெனரேட்டர் மூலம் உற்பத்தியாகின்ற மின்சாரத்தின் உற்பத்திச் செலவு அரசாங்கம் வழங்கும் மின்சாரத்தின் உற்பத்திச் செலவை விட 2 மடங்கு, 3 மடங்கு அதிகமாக இருக்கிறது. இதையெல்லாம் பார்த்த பின்பும், நாம் வெளி மாநிலத்திலிருந்து வாங்கும் மின்சாரத்திற்கு அதிக விலை கொடுத்தும், நமது மாநிலத்து மக்களுக்கு ஏற்கெனவே அறிவித்துள்ளபடி குறைந்த கட்டணத்திற்கே விநியோகம் செய்கிறோம். இதனால் அரசாங்கத்திற்கு ஓரளவு இழப்பு ஏற்படும். ஆகவே, இந்தக் கட்டண விகிதத்தை மாற்றி அமைக்கலாமா என்பதைப்பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்திற்கும் சில குறைபாடுகள் இருக்கின்றன. இப்போது பல இடங்களில் மின்சார இணைப்புக் கொடுப்பதில் தாமதம் ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். மின்சார வாரியத்தில் கேட்டால் ஒயர் வாங்குவதற்கு, கம்பம் வாங்குவதற்கு பண வசதி இல்லை என்று சொல்கிறார்கள். இந்தக் குறைப்பாட்டைப் போக்குவதற்குக் கூட, ஒரு மாற்றுத் திட்டத்தை உருவாக்க மின்சார வாரியம் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, இந்த மின்சார வாரியத்தின்மீது கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பேசும்போது திருப்பூரில் அமைந்திருக்கின்ற மின்நிலையம் 66 கே.வி. உள்ளதாக இருக்கிறது; அந்த நகரம் ஒரு தொழில் கேந்திரமாக இருக்கிறது. அங்கே 10 பஞ்சாலைகள், ஆயிரத்திற்கு மேற்பட்ட பனியன் தொழிற்சாலைகள், இன்னும் பிற தொழிற்கூடங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே, அந்த மின் நிலையத்தை 110 கே.வி. உள்ளதாக மாற்ற வேண்டுமென்று தெரிவித்தேன். கடந்த ஆண்டில் மின்சார வாரியம் கொடுத்த பதிலில் அது கவனிக்கப்படும் என்று தெரிவித்தார்கள். அப்படி இருந்தும் இன்று வரையில் அந்தப் பணி செய்யப்படவில்லை. அதனால் மின்சார வாரியத்தைக் குறை சொல்வதைத் தவிர வேறு வழியில்லை. மின்சார வாரியத்தால்

1973 நவம்பர் 23] [திரு. சு. துரைசாமி]

பதில் கொடுக்கப்பட்டும் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது மிக மிக வருந்தத்தக்கது. கடந்த நான்கு நாட்களுக்கு முன்னதாக திருப்பூருக்கு மின்சப்ளை செய்யக்கூடிய ஈரோடு மின்னிணைப்பில் டிரான்ஸ்பார்மர் பர்ஸ்ட் ஆகிவிட்டது. கடந்த நான்கு நாட்களாக திருப்பூர் நகரத்தில் தொழில்கள் நடைபெற வில்லை, அங்கிருக்கிற தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். உற்பத்தியும் பாதிக்கப்படுகிற நிலை ஏற்பட்டிருக் கிறது. ஆகவே மின்சார வாரியம் இதற்கு உடனடியாக நட வடிக்கை எடுத்து, இப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய தொழில்கள் துவங்குவதாக விண்ணப்பித்துக் கொண்டால் அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படும் என்று மின்வாரியத் திலேயே ஒரு முடிவு எடுத்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். சிலர் புதிய பனியன் பாக்டரிகளை ஆரம்பித்திருக்கிறார்கள். சிலர் புதியதாக தங்கள் கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். இவைகளுக்கு எல்லாம் மின் இணைப்புக் கொடுக்க உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டாக வேண்டும்.

தெருவிளக்குகள் எரிவதில் நிறையக் குறைபாடுகள் இருக் கின்றன. விளக்குகள் எரிவதில்லை. அவற்றை பழுது பார்க் கவும், முறையாக எரியவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல நடைபாதையில் மின்சாரக் கம்பங்கள் இருக் கின்றன. உதாரணமாக, திருப்பூர் நகரத்திலேயே 17-ம் தேதி ஒரு பாலம் திறக்கப்பட்டது. அது கட்டி முடிக்கப்பட்டு ஓராண்டாக பாதை நடுவில் இருந்து மின் கம்பங்களை மின் வாரியம் எடுப்பதா, பொதுத்துறை எடுப்பதா என்கிற பிரச் சினையில் காலதாமதப்பட்டு வந்தது. இதுபோல் பாதை நடுவில் மின்கம்பங்கள் இடைஞ்சலாக இல்லாதவாறு மின்வாரியம் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, எண்ணூர் அனல் மின் திட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி விசாரிக்க திரு. மகாலிங்கம் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அங்கு ஏற்பட்ட தீ

விபத்திற்கு யார் பொறுப்பு என்று பார்த்து உடனடியாக அவர்கள்மீது நடவடிக்கை எடுத்தால்தான் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட தவறு நடைபெறுமல் தவிர்க்க முடியும்.

இன்னும் மின்வாரியத் தொழிலாளர் மத்தியில் தகராறு ஏற்பட்டிருக்கிறது. குழப்பங்கள் இருக்கின்றன. மேலே இருக்கிற அதிகாரிகளால் கட்டுப்படுத்த முடியவில்லை. திருப்பூர் மின் நிலையத்தில் கூட ஒரு தகராறு ஏற்பட்டது, தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தலைமைப் பொறியாளர் பயப்படுகிறார். கோயம்புத்தூர் டிவிஷனல் என்ஜினியரும் நடவடிக்கை எடுத்தால் ஏதாவது விபத்து ஏற்படும் என்று கருதி பயந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் போக்கு சரியல்ல, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், அதிகாரியாக இருந்தாலும் சரி, ஊழியராக இருந்தாலும் சரி நடவடிக்கை எடுப்பதற்குக் கொஞ்சங்கூட பின் வாங்கக் கூடாது என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேட்டூரில் செம்புக் கம்பிகள் நூறு டன்னுக்கு மேல் அதிகமாகத் தேங்கிக் கிடக்கின்றன. அந்த நூறு டன் செம்புக் கம்பிகள் விலை 2 கோடி இருக்கும். இப்படி 2 கோடி ரூபாய் அங்கே முடங்கிக் கிடக்கிறது. மின்சார வாரியத்திற்கு மிகவும் பணம் தேவைப்படுகிற நேரத்தில். அந்த நூறு டன்னில் சில டன் கம்பிகள் திருட்டுப் போனாலும் கண்டு பிடிப்பது கஷ்டம். தேவையில்லாத ஒன்றை வருடக்கணக்கில் ஏன் இப்படி முடக்கிப் போட வேண்டும்? ஏலத்தில் அவற்றை விற்றுவிடலாம், இப்படி நீண்டகாலமாக அங்கங்கே பொருள்கள் தேங்கிக் கிடக்காதிருக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சார வெட்டு 15 சதவிகிதம் என்று இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த மின்சார வெட்டை நீக்கிவிட்டு, குறிப்பாக பஞ்சாலை போன்ற தொழில்களுக்கு கட்டுப்பாடின்றி கொடுக்க வேண்டும். வேலையில்லாது தவிக்கிற நெசவாளர்களுக்கு அவர்கள் நூல் உற்பத்தி செய்து கொடுத்தாக வேண்டியிருக்கிறது.

1973 நவம்பர் 23] [திரு. சு. துரைசாமி]

கடைசியாக ஒரு கருத்து. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நமக்கு மின்சாரத் தேவை ஏராளமாக இருக்கிறது. மாநில அரசாங்கத்தின் சார்பாக இரண்டாவது அணு மின்சார நிலையம் உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டும் நம் மாநிலத்தில் என்று வற்புறுத்த வேண்டும். நெய்வேலி இரண்டாவது சுரங்க வெட்டு வருவதற்கும் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். மேலும் கோவை மாவட்டத்தில் பத்தாண்டுகளுக்கு முன்பாக ஒரு அனல் மின்சார நிலையம் உருவாக்கப்பட வேண்டும் என்பது யோசிக்கப் பட்டது. மின்சார வெட்டு ஏற்பட்ட நேரத்தில் பின்னால் பரிசிலனை இல்லாமல் முடிந்துவிட்டது. கோவை மாவட்டத்தின் தேவையைப் பூர்த்தி செய்கின்ற அளவில் மேட்டுப்பாளையம், பவானிசாகர் போன்ற பகுதியில் ஒரு அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்த மின்வாரியம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றியைத் தெரிவித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. என் கிட்டப்பா**: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1973-74-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை யொட்டி சில வார்த்தைகள் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். 1973 டிசம்பர் 1-ம் தேதி முதல் 7 தனியார் மின் நிறுவனங்களை நமது மின்வாரியத்துறை ஏற்க இருக்கிற நல்ல செய்தியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக் கிறார்கள். அதை நாம் எல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறோம்.

அடுத்தாற்போல வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிப்பதில் இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகம் தான் முக்கிய இடத்தை, முதன்மையான இடத்தைப் பெற்றிருக் கிறது என்பதால் நாம் எல்லாம் நிச்சயமாக மகிழ்ச்சி அடைய லாம். இப்படி மின்சார் வாரியத்தின் பணிகள் பலவகையிலும் சிறப்புடன் விளங்க மின்சார வாரியத்தில் பணியாற்றுகிற பணி யாளர்களுக்கு மின்வாரியமும், அரசும் சேர்ந்து பல வசதிகளை, பல சலுகைகளை உருவாக்கிச் செய்து தருவது கண்டு நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மின்சார வாரியத்தில் எல்லாவகையான பணிகளிலும், எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் 3 ஆண்டுகள் தொடர்ந்து

தற்காலிகமாக இருப்பவர்களை எல்லாம் உடனடியாக நிரந்தரமாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை பணிவன்போடு நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்சார விபத்துகளால் பாதிக்கப்படுகிற மின்சார வாரிய ஊழியர்களின் குடும்பங்களுக்கு தற்போது உதவித் தொகையாக ரூ. 200-ஐ வாரியம் அளித்து வருகிறது. அதற்குப் பதிலாக அந்த மின்சார வாரிய ஊழியர்களின் குடும்பத்துக்கு, வாரிசுக்கு ரூபாய் ஆயிரம் என்ற முறையில் உதவித் தொகை வழங்கப் படவேண்டும் என்கிற வேண்டுகோளை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று. பல பகுதிகளில் குறிப்பாக எனது மாயூரம் பகுதியில் பழைய சவுத் மெட்ராஸ் எலெக்ட்ரிக் சப்ளை கார்ப்ப ரேஷன் நாட்டுடைமையாகக்கப்பட்ட பின்னாலும்கூட மின்சார வாரிய இணைப்புப்பணிகளில் ஈடுபடுகிற பல பொறியாளர்கள்— நான் அவர்கள் குறிப்பிட்ட வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், மேட்டுக் குடியில் உள்ளவர்கள் என்பதற்காகச் சொல்லவில்லை—ஓரிடத்தில் யார் 3 ஆண்டுகள் தொடர்ந்து இருந்தாலும் உடனே அவர்களை வேறு பகுதிக்கு மாற்றிவிடுவதற்கான நடவடிக்கையை மின் வாரியம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மற்றும் மின்சார வாரியத்தில் நூற்றுக்கணக்கான பேர் களுக்கு பல உத்தியோகங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. அப்படி வேலை அளிக்கப்பட்டிருப்பவர்கள் யார் யார் என்று பார்த்தால் மிக்க மன வருத்தத்தோடு சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. எத்தகைய பதவிகளுக்கு ஆள் நியமிப்பது என்றாலும் மின்சார வாரியத்திலும் கம்யூனல் ஜி.ஓ. பின்பற்றப்பட வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன்.

அரசாங்க உத்தியோகத்தில் உள்ளவர்களுளுக்கு என்ன என்ன சலுகை அளிக்கப்படுகிறதோ அவை அனைத்தும் மின்வாரியத்தில் பணிபுரிகின்றவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

1973 நவம்பர் 23] *[திரு. என். கிட்டப்பா]*

ஓராண்டு காலத்திற்கு முன் எழுத்தர் பதவிகளுக்கு பரீட்சை எழுதியவர்களுக்கு இப்போது சிலருக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிப்பு வந்திருப்பதாக அறிகிறேன். அப்படி வந்து 3 மாதம் ஆகியும் கூட பலருக்கு இன்னும் வேலைக்கான உத்தரவு வரவில்லை என்று தெரிகிறது. அவர்களுக்கு இன்னும் வேலை வாய்ப்புக் கிடைக்கவில்லை. இந்த நேரத்தில் நான் மாற்றுக் கட்சித் தலைவர்களுக்கு, உறுப்பினர்களுக்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'ஆளும் கட்சியில் உள்ளவர்கள் சொல்வதையே அமைச்சர்கள் கேட்கிறார்கள். ஆளும் கட்சியில் உள்ளவர்கள் சொல்வதற்கு அதிகாரிகளும் பயந்தும்கூட நடக்கிறார்கள்' என்று சொல்கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த இரண்டு மூன்று பேர்களுக்காக வேண்டுகோளை விடுத்தும், ஒரு நபருக்குக் கூட மின்வாரியத்தில் வேலை கிடைக்கவில்லை. அப்படி மின் வாரியத்தில்—திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில்—தயவு தாட்சண்யம் இல்லாமல் நடந்து கொள்கிறார்கள், ஆளும் கட்சிக்காரர்கள் என்று கூடப் பார்ப்பதில்லை என்பதனை அவர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் இயக்குநர், பராமரிப்பு, பொறுப்பு என்கிற பகுதிகள் ஒன்றாகச் சேர்க்கப்பட வேண்டும் என்பது பல்லாண்டுகளாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. மின் வழங்கல் விரைவில் நடைபெற வேண்டும் என்பதில் அக்கறையுள்ளவர்கள் இதுபற்றி தீவிரமாகப் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும்.

மின்வெட்டு சம்பந்தமாக எனக்கு முன்னால் பேசியவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல மின்சார வெட்டு எவ்வளவு கடுமையாக வந்தாலும்—கடுமையாக நம் மாநிலத்தில் இல்லை—குறிப்பாக எவ்வளவு அதிகமாக வந்தாலும் அரிசி அறவை மில்களைப் பொறுத்தவரையில் அவற்றுக்கு மின்சார வெட்டே கூடாது என்கிற வேண்டுகோளை இந்த அவைமுன் நான் வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11-30]

நமது சென்னை மாநகரத்திலே பார்க்கிறோம், பூமிக்கு அடியிலே கேபிள்கள் வைத்து, மின் இணைப்புகளுக்கு வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலே மின்சாரக் கம்பிகள்

[திரு. என். கிட்டப்பா] [1973 நவம்பர் 23

செல்ல இயலாத அளவுக்குச் சூழ்நிலையை உருவாக்கி, போக்கு வரத்துக்கும் பொது மக்களுக்கும் அதிகம் ஆபத்தில்லாத நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். அத்தகைய நிலையை குறிப்பிட்ட நகராட்சிப் பகுதிகளிலாவது, பெரிய நகராட்சிப் பகுதிகளி லாவது எற்படுத்த வேண்டும். பூமிக்கு அடியிலே கேபிளைக் கொண்டு செல்கின்ற முறையைக் கொண்டு வர வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, எல்லா பஞ்சாயத்துக்களிலிருந்தும் இந்தத் தடவை மட்டுமல்ல, ஒவ்வொரு தடவையும் ஒரு வேண்டுகோள் வந்து கொண்டே இருக்கிறது. மின்சாரக் கட்டணத்தை எங்களால் செலுத்த முடியவில்லை. உரிய மற்ற காரியங்களை, சாலைகளைப் பராமரித்தல், குழாய்க் கிணறுகளைப் பராமரித்தல், துப்புறவு வேலைகளைச் செய்தல் போன்றவற்றிற்குப் பணம் கிடைக்கவில்லை. பஞ்சாயத்துக்களுக்குக் கிடைக்கிற அத்தனை பணத்தையும், சர்க்காரிடமிருந்து பெறுகிற அத்தனை சலுகைகளையும் மின்சார விளக்கு எரிவதற்கே பயன்பட்டுவிடுகிறது என்ற குறைபாடுகள் நீண்ட நெடுங்காலமாக, ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்களால் வலியுறுத்தப்பட்டு வருகிறது. அதற்கு ஒரு சிறிய மாற்றாக அந்தந்த பஞ்சாயத்துக்களிலே மீட்டர் சிஸ்டம்கள் அமுலாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக் கிறது. ஆண்டுதோறும் திருவிழாக்கள் வருவதைப் போல் ஒவ்வொரு ஆண்டும், இந்த ஆண்டும் இந்த நிதிநிலை அறிக்கை யின்மீது பேசுகின்ற உறுப்பினர்கள், எந்தக் கட்சியைச் சேர்ந்த வர்களாக இருந்தாலும், அதனை வலியுறுத்தி வருகிறோம். எனவே, இந்த நேரத்தில் மதிப்பிற்குரிய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை அதற்கான வழியில் முற்பட வேண்டுமென்று தாழ்மை யோடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே இரண்டு நாட்களுக்கு முன்னாலே பேசும்போது குறிப்பிட்டார்கள். எனது மாவட்டத்தைச் சேர்ந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எனது மதிப்பிற் குரிய உறுப்பினர் ஒருவர் இங்கே குறிப்பிட்டார், திராவிட முன்னேற்றக் கழகம் தஞ்சை மாவட்டத்திலே தொழிற்சங்கத் திலே ஈடுபட்டு, குறிப்பாக மற்ற தொழிற்சங்கங்கள். சம்மேள னத்தைக் குறித்திருப்பார் என்று நான் கருதுகிறேன் அந்த சம்மேளனத்தில் உள்ளவர்கள் தங்களுடைய தொழிற் சங்கத்தை

1973 நவம்பர் 23] [திரு. என். கிட்டப்பா]

நடத்தவிடாத அளவுக்கு அடிதடியிலே ஈடுபட்டு, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், அடிதடியிலே ஈடுபட்டு இருப்பதாக அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இந்த மன்றத்திலிருக்கும் ஏனைய பெருமக்களுக்கும் தலைவர் அவர்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, தஞ்சை மாவட்டத்தில் என்னாலே குறிப்பிட்டுக் காட்ட முடியும். பல இடங்களிலே அடிதடிகள் நடைபெற்றிருக்கின்றன. அதற்கு மூலகாரணம் திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல. அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொழிற்சங்கமும் அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கம் அங்கே பரவலாக உருப் பெறுகின்றதால் ஏனைய சங்கங்களைச் சேர்ந்தவர்கள், ஏனைய மற்ற தரப்பிலே உள்ளவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களை அடிக்கிறார்கள், நொறுக்குகிறார்கள் என்று நான் ஆதாரபூர்வமாக இங்கே விளக்கிக் காட்ட முடியும்.

அடுத்து, எனது தொகுதியைப் பொறுத்த வரையில் இரண்டு மூன்று விஷயங்களை இங்கே குறிப்பிட்டு எனது உரையை முடிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாயூரம் நகரத்தில் அரசினர் தாலூகா மருத்துவ மனையில் எக்ஸ்-ரே பிரிவு ஒன்றை பல்லாயிரக் கணக்கான ரூபாய் செலவில் அரசாங்கத்தின் துணைகொண்டு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் துவக்கி வைத்தார்கள். டெம்பரியாக சர்விஸ் கனெக்ஷன் கொடுக்கப்பட்டது. அமைச்சர்கள் வருகின்ற பொழுது அந்த எக்ஸ்-ரே பிரிவு நல்ல முறையில் வேலை செய்து காட்டியது. ஆனால், என்ன காரணமோ பல மாதங்களாகியும் அந்த எக்ஸ்-ரே பிரிவு நடைபெறாமல் மின் இணைப்புத் தரப்படாமல், எவ்வளவு கோரிக்கைகள் விட்ட பிறகும், எவ்வளவு கெஞ்ச வேண்டுமோ, அவ்வளவு கெஞ்சிய பிறகும் அப்படியே இருக்கிறது. எங்கேயிருந்து அதற்குத் தடை வருகிறது என்று தெரியாமல், மாயூரத்திலே உள்ளவர்களைக் கேட்டால், தஞ்சாவூரிலே உள்ளவர்களைக் கேள் என்று சொல்கிறார்கள். தஞ்சாவூரிலே உள்ளவர்களை கேட்டால், திருச்சியிலே உள்ளவர்களைக் கேள் என்று சொல்கிறார்கள். திருச்சியிலே உள்ளவர்களைக் கேட்டால், சென்னையிலே உள்ளவர்களைக் கேள் என்று சொல்கிறார்கள். இப்படிக் கேட்கச் சொல்கிறார்கள். கேட்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

ஆனால், செய்து முடிப்பதற்கு அவர்கள் தயாராக இருக்க வேண்டு மென்ற முறையில் அந்த துறையினுடைய அமைச்சர் அவர்கள் எங்களுக்கு உதவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாயூரம் நகரத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையில் நாங்கள் இருக்கிறோம். நானும் ஒரு பிற்படுத்தப்பட்டவன். அந்தப் பகுதியில் மாலை விளக்கு எரிய ஆரம்பிக்கிறது. எந்தக் காரணமோ, எங்களுக்குத் தெரியவில்லை, அந்தப் பகுதியில் வருகின்றவர்களைப் போகின்றவர்களைப் பார்த்து, அந்த டியூப் லைட்டுகள் கண்சிமிட்டி அழைக்கின்றன. பத்து மணிக்குக் கூட அழைக்கின்றன. ஆனால், 10 மணிக்கு மேல் சமாதானம் அடைந்து எரிய ஆரம்பிக்கிறது. அந்த நிலையை மாற்றித் தீரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இறுதியாக ஒன்று சொல்லி முடித்துக்கொள்கிறேன். மாயூரத்தில் நடப்பதைப்பற்றி, இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னாலே அமைச்சர் அவர்களிடத்திலே என்னுடைய விண்ணப் பத்தினை நான் கொடுத்தேன். ஒரு தனிப்பட்ட நபர், அதுவும் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர். சீனிவாசன் என்பது அவருடைய பெயர். நான் அவருக்காக வரிந்து கட்டிக்கொண்டு பேசவில்லை. அதே நேரத்தில் தொழிலாளர்களை எதிர்க்க வேண்டுமென்ற மனோபாவமும் எனக்குக் கிடையாது. ஏனென்றால், நான் மின்சார வாரியத் தொழிலாளர் சங்கத்தினுடைய தலைவனாக ஆக்கப்பட்டிருப்பவன். அங்கே தேர் வருகிறது என்பதற்காக ஒயரைத் துண்டித்து வைக்கிறார்கள். தேர் போனபிறகு, 4 மணி ஆகிறது, 5 மணி ஆகிறது, விளக்கு எரிய விட்டார்களா, மின் இணைப்பு—தொடர்பு ஏற்படுத்தினார்களா என்று கேட்டால், நான் ஊரைவிட்டு கிளம்பிய வரையில் எரிய வில்லை, இன்று வரையில் எரியவில்லை. ஒரு தனிப்பட்ட நபருடைய வீட்டிற்காக, குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், மாயூரம் நகரத்தில் வள்ளலார் மேலவீதியில், போலீஸ் காரருடைய வீடு இருக்கிறது. அவருடைய மகன் ராசப்பா. சாதாரண ராசப்பா அல்ல, எம்.ஏ. படித்தவர். அவருடைய வீட்டில் விளக்கே எரிய வில்லை. இதை இவ்வளவு பெரிய விஷயமாக ஆக்கி, சட்டமன்றத்திலே சொல்ல வேண்டுமா என்று கேட்டால், அவ்வளவு பெரிய விஷயமாக ஆக்கிக் கொண்டிருக்

கிறார்கள். அதை நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்த நிதிநிலை அறிக்கையை முறைப்படி வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

*திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கை மீது, என்னுடைய ஒருசில கருத்துக்களை கூற விரும்புகிறேன். இந்த மின்சார வாரிய நிர்வாகம் எவ்வளவு சீர்கேடு அடைந்து இருக்கிறது என்பதற்கு உதாரணம் இந்தச் சபையிலே பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் இந்த நிர்வாகத்தைக் காரசாரமாக விமர்சித்துத் தாக்கியதை நாம் பார்த்தோம்.

குறிப்பாக, சென்ற ஆண்டு மின்பார இலாகா மின்சாரம் வழங்குவதிலே வெட்டு உள்ள நேரங்களில், அது நடந்து கொண்ட முறையிலே மிகப்பெரிய அதிருப்தியை, அதுவும் குறிப்பாக விவசாயப் பெருமக்களிடமிருந்து அந்த நிர்வாகம் பெற்ற அதிருப்தி லேசானதல்ல. அவ்வளவு மோசமான நிலையிலே சென்ற ஆண்டு நடந்து கொண்டார்கள்.

அது மட்டுமல்ல, இன்றும் கூட, விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று சொன்னால், ஏற்படும் காலதாமதம் கொஞ்ச நஞ்சம் அல்ல, வருஷக்கணக்காகிறது. இன்று விவசாயி மின்சார மோட்டார் வைக்க விரும்பி, நிலவள வங்கியிடமிருந்தோ, வேறு சங்கத்தின் மூலமோ, கடன் வாங்க வேண்டுமென்றால், மின்சார இலாகாவினர், நாங்கள் மின் இணைப்புக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சான்றிதழ் கொடுக்க வேண்டும். அந்தச் சான்றிதழைக் கொடுத்து விடுகிறார்கள். அதற்குப் பிறகு, கடன் வாங்கி மின்சார மோட்டாரை வைத்த பிறகு, தொடர்ந்து 3 வருடங்களுக்குக் கூட, மின் இணைப்புக் கிடைக்காமல் இருக்கிறது. மின் மோட்டாரை இயக்க முடியாமலே, பல தவணைகள் கடன்களைக் கொடுத்து வருகிறார்கள். அதே மாதிரி இன்னும் பல உதாரணங்கள் சொல்ல முடியும், அவற்றைக் கடைசியாகச் சொல்கிறேன்.

தொழில்களுக்கு, தொழில் முதலாளிகளுக்கு, மின் இணைப்பு தாராளமாகக் கொடுக்கப்படுகிறது. இது ஒரு பெரிய குறை.

அது மட்டுமல்ல, இன்று மொத்தத்திலே நம்முடைய உற்பத்திக்கும் வினியோகத்திற்கும் உள்ள தொடர்பை பார்க்கும்போது உற்பத்தி 1,475 மெகாவாட் என்று சொல்லப்படுகிறது. சோலேயாறு, கோதையாறு உற்பத்தியைச் சேர்த்து. ஆனல், தேவையோ, 1,326 மெகாவாட் என்று சொல்லப்படுகிறது. இருந்தாலும் கூட, மின் வெட்டு 50 சதவிகிதம், 75 சதவிகிதம் என்று சொல்லப்படுகிறது. இப்பொழுது 15 சதவிகிதம் என்று சொல்கிருர்கள். ஆனல், விவசாயிகளைப் பொறுத்த வரையில் 6 மணி நேரம்தான் மின்சாரம் கிடைக்கிறது. அப்படி என்ருல், 75 சதவிகிதம் கட் தானே. 24 மணி நேரத்தில் 6 மணி நேரம் மட்டும் மின்சாரம் கொடுத்தால், அது 75 சதவிகிதம் மின் வெட்டாகத்தான் இருக்கிறது.

சென்ற ஆண்டு எந்த நேரத்திலே, எந்த லேனிலே மின்சாரம் கொடுக்கப்படுகிறது என்று கூட அறிவிக்கப்பட்டது கிடையாது. தோட்டங்களிலே, வயல்களிலே, விவசாயிகள் தயாராக இருப்பார்கள். அன்று பூராவும் மின்சாரம் வராது. ஆட்கள் திரும்பிப் போக வேண்டி இருக்கும். இந்த மாதிரி சீர்கேடான நிலே மட்டுமல்ல, இன்று சேதாரம் 15 சதவிகிதத்திலிருந்து உயர்ந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவ்வளவு சேதாரம் இருக்க வேண்டிய அவசியம் இல்லே யென்று பலர் சொல்கிருர்கள். பத்திரிகையிலே பார்த்தேன். சேதாரம் ஏன் வருகிறது? பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. பெரிய பெரிய முதலாளிகளும், புள்ளிகளும் மின்சாரத்தைத் திருடுகிருர்கள். அதற்குப் பல பேர் உடந்தையாக இருக்கிருர்கள். அந்தத் திருட்டைக் கண்டுபிடித்து, இனி நடைபெருமல் இருப்பதற்கும், அதைத் தடுப்பதற்கும், ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா அரசு? அது சம்பந்தமாக மின்சார வாரியம் என்ன முயற்சியை எடுக்கிறது என்பதை இதுவரையில் யாரும் சொல்லவில்லே. பல இடங்களிலே மீட்டர்களே மாற்றி வைத்துக் கொண்டே கணக்குச் சரியாகச் காட்டாமல் மின்சாரத்தை எடுத்துக் கொள்கிருர்கள். தொழிலாளர்கள் கூறுகிருர்கள், பல தொழிற்சாலேகளிலே 75 சத வீதம் மின் வெட்டு இருக்கிற காலத்திலேகூட முழுமையான உற்பத்தி நடந்து இருக்கிறது என்று சொல்கிருர்கள், அப்படியானல் அவர்களுக்கு மின்சாரம் எப்படிக் கிடைத்தது என்பதைப் பார்க்க வேண்டும். திருட்டு நடந்து இருக்கிறது. அதற்குப் பலர்

1973 நவம்பர் 23] [திரு. சோ. அழகர்சாமி]

உடந்தையாக இருந்திருக்கிறார்கள். அதை யெல்லாம் கண்டு பிடிப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும்.

கோதையாறு திட்டம் முடிந்துவிட்டது என்று சொல்கிறார்கள். அப்படியானால் அதனுடைய உற்பத்தி சக்தி என்ன? எந்த அளவிற்கு உற்பத்தி செய்கிறது என்பதை யெல்லாம் அறிவிக்க வேண்டும். அதேபோன்று தூத்துக்குடி, மேட்டூர் ஆகிய இடங்களிலும் அனல் மின் நிலையங்கள் தொடங்குவதற்கு ஒதுக்கிய பணம்—சென்ற ஆண்டு நாலு கோடி ஒதுக்கப்பட்டது, இந்த ஆண்டு ஒரு கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது—அந்தப் பணம் அப்படியே இருக்கிறது. இன்னும் வேலை தொடங்கப்படவில்லை, இந்த ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாகவாவது அந்தத் திட்டத்தைப் பூர்த்திசெய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் மிகத் துரிதமாக மேற்கொள்ள வேண்டும். இதைப்பற்றியும் அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேசின்பிரிட்ஜிலே ஒரு மின் நிலையம் இருக்கிறது. அது பழைய காலத்திலே ஏற்படுத்தப்பட்டது, அதுதான் இப்பொழுது நம்முடைய மானத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. சமய நல்லூர் மின்நிலையத்தை விற்றதுபோல் அதையும் விற்க ஏற்பாடு இருந்தது என்று கேள்விப்பட்டேன். நல்லவேளை அதை விற்க வில்லை. அந்த நிலையத்தை சீர்திருத்தி புதுப்பித்து நல்ல முறையிலே வேலை செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, மின்சாரம் வழங்குவதிலே—நாம் சோஷலிசக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறோம். என்று சொகிறோம்—வருமானம் குறைந்தவர்களுக்குத்தான் குறைந்த வரி இருக்க வேண்டும். வருமானம் உயர உயர வரியும் அதிகமாக வேண்டும். ஆனால் அப்படி நிலைமை இல்லை. பெரிய பெரிய முதலாளிகள் வருமானம் நிறையப் பெறுகிறார்கள், அவர்களுக்குக் குறைந்த கட்டணம் என் என்று தெரியவில்லை. மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகளில் வருமானம் நிறையக் கிடைக்கிறது, உற்பத்திச் செலவைவிடக் குறைந்த விலையில் அவர்களுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. அது என்? கோடி-கோடியாகக் கொள்ளையடிக்கக் கூடிய பெரிய பெரிய முதலாளி

களுக்கு ஏன் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்க வேண்டும்? அவர்களுக்கு எல்லாம் அதிகமாகக் கட்டணம் விதிக்க வேண்டும்.

அதேபோன்று பெரிய பெரிய பங்களாக்களில் இருக்கக்கூடிய வசதி படைத்தவர்களுக்கு சலுகை அளிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதாவது 50 யூனிட்டுவரையில் 35 பைசாவாம்; அதற்கு மேலே போனல் அதாவது 50 யூனிட்டுக்கு மேலே போனல் 30 பைசாவாம். இது என்ன நியாயம் என்று தெரியவில்லை. பணக்காரர்களுக்கு பங்களாக்களில் இருக்கிறவர்களுக்கு 5 பைசா சலுகை ஏன் அளிக்க வேண்டும்? குறைந்த அளவிற்கு மின்சாரம் பயன்படுத்துகின்ற, சாதாரண மக்களுக்கு ஏழை எளியவர்களுக்குத்தான் சலுகை அளிக்க வேண்டும், பங்களாக்களில் வசிப்பவர்களுக்கு மாத்திலேயும் மட்டையிலேயும் லைட்டுகளைப் போட்டுக் கொண்டு ஆடம்பரமாக இருக்கிறவர்களுக்கு ஏன் சலுகை அளிக்க வேண்டும்? வருமானம் அதிகமாக, அதிகமாக கட்டணம் அதிகமாகப்போட வேண்டும், வரி அதிகமாகப் போட வேண்டும். அதாவது முதல் 50 யூனிட்டு வரையில் 30 பைசா என்றும் 50 யூனிட்டுக்கு மேலே போனல் 35 பைசா என்றும் 100 முதல் 150 யூனிட்டு வரையில் அதற்கு மேலே கட்டணம் என்றும் மாற்ற வேண்டும். அப்படிச் செய்தால் வாரியத்திற்கும் வருமானம் வரும்.

அதேமாதிரி தொழில் செய்கிற பெரும் முதலாளிகளுக்கும் ஏன் கட்டணத்தைக் குறைக்க வேண்டும், சலுகை காட்ட வேண்டும்? லாபம் சம்பாதிக்கிறவர்களுக்கு அப்படிப்பட்ட சலுகைகள் அவசியம் கிடையாது; சாதாரண மக்களுக்கு ஏழை எளிய மக்களுக்குத்தான் குறைந்த கட்டணம் வேண்டும், சலுகைகள் வேண்டும். ஆகவே அந்த முறையிலே இதை யெல்லாம் விரைவிலே மாற்றி அமைக்க வேண்டும்.

மின்சாரப் பற்றுக்குறையால் விவசாயிகள்தான் பாதிக்கப் படுகிறார்கள். விவசாயிகள் எல்லாவிதமான செலவுகளும் செய்து விட்டு உரம்போட்டு பயிர் சரியானபடி வளர்ந்து நடவு நடுகின்ற வேளையில் மின்சாரம் வழங்கவில்லை யென்றால் அவர்கள்

அதுவரையிலும் ஒரு ஏக்கருக்கு செலவு செய்த 1,000 ரூபாய் 2,000 ரூபாய் விளைகப் போய்விடும். தொழில்களைப் பொறுத்த வரையில் அப்படியில்லை, மின்சாரம் இல்லையென்றால் அது மட்டி லும்தான் நஷ்டம் ஆகும். ஆனால் விவசாயத்திலே ஒரு நாள் மின்சாரம் கொடுக்கவில்லை யென்றால் அவர்கள் ஒரு வருஷமாகச் செலவு செய்த பணம் பூராவும் நஷ்டமாகிறது. ஆகவே விவசாயத் திற்குச் சரியானபடி காலாகாலத்திலே மின்சாரம் கிடைக்கச் செய்யவேண்டும். இப்பொழுது உள்ள குறைகளைப் போக்க வேண்டும்.

நான்கு மாதங்களாக பில்லே இல்லை, இப்பொழுது மொத்த மாக பில்போட்டு மொத்தமாகக் கட்டச் சொல்கிறார்கள். விவசாயி கள் எங்கே போவார்கள்? அங்கே பணியாற்றுகின்ற ஊழியர் களுக்கு என்ன குறைகள் இருக்கின்றன என்று பார்த்து அவர் களுடைய குறைபாடுகளை யெல்லாம் களைந்திருந்தால் இப்படிப் பட்ட இடர்ப்பாடுகள் ஏற்பட்டிருக்காது. ஊழியர்களுடைய குறைகளைப் போக்க வேண்டும். அந்த முறையிலே பார்த்தால் மின்சார போர்டிலே தொழிலாளர்களுக்காக என்ற முறையிலே ஒரு உறுப்பினர் இடம் பெறக்கூடிய முறையைக்கொண்டு வர வேண்டும். அப்படிச் செய்தால்தான் தொழிலாளர்களுடைய குறைகளைக் கேட்டறிந்து ஆவனசெய்யமுடியும். மூலதனத்திலே பங்கல்ல, நிர்வாகத்திலே தொழிலாளர்களுக்குப் பங்கு கொடுக்க வேண்டும், 60 கோடி ரூபாய் மூலதனம் போட்டிருக்கிற இடத்திலே கிட்டத்தட்ட 80 கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய பொதுத் துறையிலே தொழிலாளரை போர்டிலே மெம்பராகப் போடுவது அவசியம்.

அடுத்ததாக, என்னுடைய தொகுதியிலே, 2, 3 இடங்களிலே குறிப்பாக கடம்பூர் பகுதியிலே சிவலிங்கபுரத்திலே ஒருவருக்கு 1½ வருஷத்திற்கு முன்னதாகவே தருவதாகச் சொல்லிவிட்டார் கள், அதனால் அவர் உடனே மாட்டை விற்று மோட்டார் வாங்கிப் போட்டுவிட்டார், இன்னும் அவருக்கு இணைப்புத் தரப்படவில்லை, அவர் மாட்டையும் விற்றுவிட்டார், மோட்டார் வாங்க வாங்கிய கடனையும் திருப்பிக் கட்ட முடியவில்லை. அவருடைய பெயர் சுப்பையாத் தேவர் என்பது.

அதேபோன்று நொச்சிகுளம் என்ற இடத்திலே செல்லையா தேவர் என்பவர், அவரும் கடனை வாங்கி மோட்டார் போட்டார், இன்னும் இணைப்புத் தரப்படவில்லை, கடனை வாங்கி அவர் அதையும் திருப்பிக் கட்டமுடியாமல் கஷ்டப்படுகிறார். இப்படி நிறைய இருக்கின்றன. எனவே, விவசாயம் சம்பந்தப்பட்ட வரையிலாவது முக்கியத்துவம் கொடுத்து மூன்று மாதம், ஆறு மாதம் என்று காலக்கெடு வைத்து அதற்குள்ளாக கட்டாயம் மின் இணைப்புக் கொடுக்கச் செய்வதற்கு அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்காமல் ஆனால் அதே லைனில் உள்ள ரைஸ்மில்லுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு ஓவர்லோட் என்று சொல்லி மறுக்கப்பட்டுவிட்ட அதே நேரத்தில் ரைஸ்மில்லுக்கும் மற்றத் தொழில்களுக்கும் அதே லைனில் உள்ளவர்களுக்கு பின்னாலே இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட குறைபாடுகளை யெல்லாம் போக்க வேண்டுமென்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. தொ. ப. சீனிவாசன் : துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை நான் வழங்க முற்படுகிறேன்.

பொதுவாகத் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிற சிறப்பான உணவு உற்பத்தியிலும், தொழில் வளர்ச்சியிலும் மின்சார இலாகா எந்த அளவிற்குச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது என்ற நிலைமையைப் பார்க்கிறபோது இந்த நிதிநிலை அறிக்கையைச் சட்ட மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் மனமார வரவேற்க வேண்டிய நிலைமையிலே இருக்கிறோம். அதே நேரத்திலே தமிழ்நாட்டிலே சென்ற ஆண்டு ஏற்பட்டுவிட்ட மின்சாரப் பற்றுக்குறை காரணமாக இதிலே அரசியல் கலப்பதின் காரணமாக சிலர் பொதுமக்களிடத்திலே தவறான கருத்துக்களைப் பரப்பிக் கொண்டு வந்த நேரத்திலேயும் மின்சார இலாகாவின் அதிகாரிகளும் அரசும் மிகுந்த அக்கறையோடும் ஆர்வத்தோடும் அதைச் சமாளித்ததற்காக தமிழ் மக்களின் சார்பிலே அதிகாரிகளையும் இந்த அரசையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

அதே நேரத்திலே தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கின்ற நம்முடைய கலைஞர் அவர்கள் இயற்கை சதி செய்தாலும் செயற்கையாக மின்சாரத்தை உற்பத்தி செய்து தொழில் உற்பத்தியிலும்

1973 நவம்பர் 23] [திரு. தொ. ப. சீனிவாசன்]

விவசாய உற்பத்தியிலும் தனிக் கவனம் செலுத்தி நிர்வாகத்திலே ஏற்பட்ட சிக்கலைப் போக்குகின்ற முறையிலே 5 தனிப்பிரிவுகளை ஏற்படுத்தி ஆவன செய்ததற்காக இந்த அமைச்சரவையையும் அரசையும் நாம் எல்லாம் இந்த அவையின் மூலமாகப் பாராட்டாமல் இருக்க முடியாது. முன்காலத்திலே யெல்லாம் விவசாயிகள் மாடு இருந்தால்போதும், இறைத்துப் பயிர்செய்துவிடலாம் என்ற நிலைமையிலே இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு அந்த நிலைமை மாறி அவர்கள் எல்லாம் நவீன முறையிலே விவசாயம் செய்ய வேண்டுமென்ற நிலைக்கு வந்து இருக்கிறார்கள். அவர்கள் தங்களிடமுள்ள அரை ஏக்கர் நிலத்தை விற்றுவது மின்சாரம் பெறவேண்டும், மோட்டார் போடவேண்டும் என்ற நிலைமைக்கு வந்துவிட்டார்கள். என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால் அப்படிப்பட்ட அக்கறை அதிக அளவிற்கு இருக்கிறது. மேல் அமைப்பிலே இருக்கின்ற அதிகாரிகள், தலைமைப் பொறியாளர் போன்றவர்கள் அக்கறை காட்டுகிறார்கள், அவர்களுக்கு ஆதரவு காட்டுகிறார்கள். ஆனால் கீழமைப்பிலே இருக்கின்றவர்கள்தான் விவசாயிகள். அவர்களிடம் செல்கின்றபொழுது அவர்களிடம் அக்கறைகாட்டாமல் இந்த அரசைக் காட்டிக் கொடுக்கிற தன்மையிலே நடந்து கொள்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மிக வேதனையோடு சொல்லித்தான் வேண்டியிருக்கிறது. அந்த அளவில் என்னுடைய தொகுதியில் மக்கள் ஒருமுறை ஊர்வலமாகச் சென்றபொழுது அந்த அதிகாரிகள் அவர்களை அன்பாக நடத்தாமல் வேதனையோடு காரியங்களைச் செய்தார்கள். போனதைப் பொறுத்த வரையில் டி.இ. அவர்கள் அந்த நிலையில் செய்தார்கள், பத்து மோட்டார்கள் எரிந்துவிட்டன என்று ஒரு கிராமத்திலுள்ள மக்கள் 20 பேர் வந்தார்கள். அவர்களை நானே அழைத்துச் சென்றேன். காரணம் என்னவென்றால் அந்தப் பகுதியிலே வரும் மின்சாரம் குறைந்த சக்தியாக வருகிறது. ஒரே நேரத்தில் தாங்க முடியாமல் தீய்ந்துவிட்டது. அந்த நேரம் பால்விடும் நேரம். இரண்டு நாட்களில் தண்ணீர் இறைக்காவிட்டால் கதிர் நாசமாகிவிடும். அந்த நேரத்தில் அவர்கள் சரியானமுறையில் பதில் சொல்லாமல், சேங்ஷனுக்காக எங்கோ சென்றிருக்கிறது, வந்தபிறகுதான் லைனை மாற்ற முடியும் என்று சொன்னார். எங்களுக்கு டெக்னிகல் விஷயம் தெரியாது, எங்கே சென்றிருக்கிறது என்று கேட்கவில்லை, துரிதமாக அதை சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டதற்கு அவர் அதைச்

சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று கடுமையாகச் சொல்லும் நிலை ஏற்பட்டது. அதுபற்றித் தயவு செய்து தலைமை அதிகாரிகள் அக்கறை காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் மோட்டார் வாங்கிவிட்டால் மின்சாரம் துரிதமாக அளிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் என்னுடைய தொகுதியில் பட்டியல் போட்டுக் காண்பிக்க முடியும். இரண்டாண்டுகளுக்கு மேல் மோட்டார் வாங்கியும் இன்னும் மின்சாரம் கிடைக்கவில்லை. கேட்டால் கமர்ஷியல் என்ற பிரிவுக்கு அனுப்பியிருப்பதாகச் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களுக்கு மின்சாரம் அளிக்கப்பட வேண்டும், கிராம மக்களும் நகர வாழ்விலே பங்குகொள்ள வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு தமிழக அரசு என்னுடைய பகுதியில் மலைஜாதி மக்கள் வாழும் பகுதிகளில் மின்சாரத்தை அளித்திருக்கிறார்கள். காட்டிலே வாழும் அந்தப் பகுதி மக்களுக்கு மின்சாரம் சென்றது. அதற்காக என்னுடைய தொகுதி மக்கள் இந்த அரசுக்கும், கலைஞர் அவர்களுக்கும், மின்சார அமைச்சருக்கும், மின்சார அதிகாரிகளுக்கும் பாராட்டைத் தெரிவிக்கிறார்கள். ஆனால் ஒரு ஆண்டு மின்சாரத்தை அனுபவித்த பிறகு அவர்களுக்கு இப்பொழுது விளக்குகள் எரியவில்லை. இதைப்பற்றி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் கேட்டேன். அதிகாரிகளில் அந்தப் பொறுப்பை யார் கவனிப்பது என்று தெரியவில்லை என்ற நிலை ஏற்பட்டபொழுது இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து, அதே நேரத்தில் கலைஞர் அவர்களின் உள்ளத்தில் தோன்றுகின்ற சிறந்த இலட்சியங்களை கீழ்த்தட்டில் உள்ள அதிகாரிகள் கவனிக்கவில்லை என்ற மனவேதனையை நாங்கள் அடைகின்றோம்.

அடுத்தபடியாக, மின்சார ஊழல் என்று, யாரோ நடத்திய ஊழலை எதிர்க் கட்சிக்காரர்கள் பயன்படுத்திக் கொண்டு, சுத்தமாக, நேர்மையாக, சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கும் மின்சார அதிகாரிகளின் மீது குறை சொல்லுகிறார்கள். குறை சொல்ல வாய்ப்பு வேண்டுமென்ற காரணத்திற்காக இதைப் பயன்படுத்துகிறார்கள். கலைஞரின் எண்ணத்திற்கேற்ப, தமிழக அரசின் எண்ணத்திற்கேற்ப அதிகாரிகள் நடக்க வேண்டுமென்றால் நான் ஒரு யோசனை கூறிக்கொள்ள விரும்புகிறேன். விளக்குகள், சோக்குகள் போன்றவைகளை கம்பெனியிடத்திலேயிருந்து வாங்கு

கிறார்கள், ஒருசில அதிகாரிகள் அதை வாங்கி விற்றுவிடுகிறார்கள். அந்த நிலைமைகளை நாங்கள் எப்படி நிரூபணம் செய்வது? எப்படிக் குறை சொல்வது? அது சர்வசாதாரணமாக நடக்கிறது. அதற்குப் பரிகாரம் காண வேண்டுமென்றால் அந்தக் கம்பெனியில் வாங்கும் சோக், பல்பு போன்றவைகளில் ஈ.பி. என்று மின்சார வாரியத்தின் முத்திரை பொறிக்கப்பட வேண்டுமென்று அந்தக் கம்பெனிக்கு உத்தரவிட வேண்டும். அதுதான் இதற்குப் பரிகாரம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் அடிக்கடி சொல்லுவேன், என்னுடைய பகுதியிலே நூற்றுக்கு நூறு விவசாயம்தானே தவிர வேறு எந்தத் தொழிற்சாலைகளும் இல்லாத தொகுதி என்னுடைய தொகுதி. சந்தவாசலில் வாழை, நெல்தான் முழுக்கமுழுக்க விவசாயம். அங்கேயிருப்பது எப்பொழுதோ போட்ட லைன்கள். அங்கே இப்பொழுது ஒரு சப் ஸ்டேஷன் அமைத்தாலொழிய அங்குள்ள விவசாயிகளுக்கு விமோசனமே யில்லை என்று அதிகாரிகள் நேரிலே சொல்கிறார்களே தவிர உடனடியாகப் பரிகாரம் செய்ய மறுக்கிறார்கள். சென்ற ஆண்டு உடனடியாக துணை மின் நிலையத்தை சந்தவாசலில் அமைக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இன்றுவரையில் அது நடக்கவில்லை. எனக்குக் கை ஒடிந்திருந்தும், விவசாயிகள் மாநாட்டைக் கூட்டி இந்த சம்பாப் பயிரை எப்படிச் செய்வது என்று கண்ணீர் விட்டார்கள். ஆகவே, தலைமைப் பொறுப்பிலே யிருக்கும் அதிகாரிகளும் மற்றவர்களும் இதிலே அக்கறை எடுத்துக் கொண்டால் அந்த விவசாயிகளுக்கு மிகுந்த வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பில்லைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்தக் கொடுமையை எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை. அதில் பல சிக்கல்கள் வருகின்றன. விவசாயிகளுக்கு ரெவின்யூ யூனிட் என்று இருக்கிறது. விவசாயிகளுக்கு 5 மாதம் 6 மாதம் என் ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு என்று சேர்த்துக்கூட பில்கள் வருகின்றன. அந்தப் பணத்தை சாதாரண விவசாயி எப்படி கட்ட முடியும்? இதைக் கேட்க ரெவின்யூ யூனிட்டிற்கு டி.சி.யைப் பார்க்கச் சென்றால், செக்ரட்டரி என்று அந்த யூனிட்டில் ஒருவர் இருக்கிறார். அவர் பெயரை வேண்டுமானாலும் சொல்கிறேன், சி. சுப்பிரமணியம் என்பவர், டி.சி.யைப் பார்க்க முடியாது, என்னைப் பார்க்க வேண்டு

மென்று சொல்கிறார். அவரிடம் மேற்கொண்டு ஏதாவது கேட்டால், என்னை யாரும் மாற்ற முடியாது, அமைச்சரே நினைத்தாலும் மாற்ற முடியாது என்று சொன்னால் நாங்கள் என்ன செய்வது? எனவே, மேலேயிருக்கின்ற அதிகாரிகள் இந்த உண்மைகளைக் கண்டறிந்தால் மற்ற பகுதிகளிலேயிருக்கின்ற யூனிட் செக்ரட்டரிகளும் மக்களைக் கொடுமைப்படுத்த மாட்டார்கள் என்பதற்காகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, களம்பூரில் இரவில் விளக்குகள் எரிவதில்லை. அங்கே இருப்பது எப்பொழுதோ போட்ட லைன். அது சரியான லைன்தானா என்று கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது. ஒருசமயம் போளூரிலே மாண்புமிகு அமைச்சர், பேராசிரியர் அவர்களை வரவேற்றபொழுது மேடை அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் அமைச்சர் பேசுவதற்குள் திடீரென்று மின்சாரம் நின்றுவிட்டது. அதிகாரிகள் அதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்றே தெரியவில்லை, இரண்டு மணி நேரம் ஆகியும் மின்சாரம் வராமல் எப்படியோ கூட்டம் முடிந்தது. ஜனங்கள் இருளில் போகும் நிலை ஏற்பட்டது. எப்படி மெயின் லைனில் போனது, சதி வேலையா என்று போலீசில் புகார் செய்யப்பட்டதா? சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எனக்கு எந்தவிதமான தகவலும் தரப்படவில்லை. அமைச்சரவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கொடுக்க முடியாமல் இருந்தது.

ஆகவே, எல்லாவிதமான நிலைகளிலும் மின்சாரம் இல்லை யென்றால் வாழ்வே இல்லை என்ற வகையில், அந்தக்காலத்திலே நீரும் உப்பும் எப்படி அவசியம் என்று சொன்னார்களோ அது போன்று இப்பொழுது மின்சாரம் ஆகிவிட்டது. இதில் அதிகாரிகள் அக்கறை எடுத்துக்கொண்டு கலைஞர் அவர்களின் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

திரு. கோ. செபமாலை : தலைவரவர்களே, இங்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்ற மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1973 ஆம் ஆண்டுக்குள்ளாக கிராமங்கள் பூராவும், சிற்றூர்கள் பூராவும், தமிழகத்தில் உள்ள எல்லா மக்களுக்கும் இந்த மின்சாரத்தின் நன்மைகள் கிடைக்க வேண்டுமென்ற முறையில் கலைஞர்

1973 நவம்பர் 23] [திரு. கோ. செபமாலை]

அவர்களும், மின்சார அமைச்சர் அவர்களும் திட்டம் உருவாக்கி, அதிகாரிகளின் ஒத்துழைப்போடு எல்லா கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின்சாரம் சென்று மக்களுக்குப் பயன்படுகிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் 25 ஆண்டுக்காலமாக ஒரு ஊரில் மின்சாரம் இல்லாமல் இருந்தது. அப்படிப்பட்ட நேரத்தில் இப்பொழுது படிக்கத் தெரியாதவர்களும் மின்சாரம் என்றால் என்ன என்று தெரிந்துகொள்ளும் அளவிற்கு கிராமங்களில் மின்சாரம் செல்லும் காட்சியைக் கண்டு ஏழை எளிய மக்களும், அரிசன மக்களும் போற்றுகிறார்கள். மின்சாரமே போகாத பகுதிகளிலுள்ள அரிசன மக்களுக்கு கலைஞர் அவர்களும், மின்சார அமைச்சர் அவர்களும் நல்லதொரு திட்டத்தை ஏற்படுத்தி அவர்களுக்கும் மின்சாரம் பயன்பட வேண்டுமென்ற முறையில் அரிசன மக்கள் வாழும் தெருக்களுக் கெல்லாம் மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நான் கலைஞர் அவர்களையும், மின்சார அமைச்சரவர்களையும் பாராட்டுகிறேன்.

மேலும், இந்த நேரத்தில் கிராமங்களுக் கெல்லாம் ரைஸ்மில் கிடைக்கிறது. முன்பெல்லாம் கிராமங்களைவிட்டு ஒருமைல், இரண்டு மைல் தள்ளி நகரங்களில்தான் இருக்கும். இப்பொழுது சிற்றூர்களி லெல்லாம் மில்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்னும் கிராமங்களிலுள்ள விவசாயிகளுக் கெல்லாம் பம்பு செட்டுகள் கொடுக்கப்பட்டதால் மின்சாரம் அதிகமாகப் பயன்படுகிறது. இதனால் மின்சாரம் கிராமங்களுக்குச் செல்வதாலும், மற்றும் தொழிற்சாலைகளுக்கும், பம்பு செட்டுகளுக்கும், மற்ற துறைகளுக்கும் மின்சாரம் கிராமங்களுக்குச் செல்வதால் இன்றைக்குப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப் பற்றுக்குறை ஏற்பட்டிருப்பதால் அரசாங்கத்திற்கு மின்சாரம் அதிகமாகத் தேவைதான். இருந்தாலும் அதிகமாக எப்படி மின்சாரத்தைப் பெறுவது என்பதில் மிகவும் தீவிரமாக இந்த அரசாங்கமும், மின்சார அமைச்சரவர்களும், வாரியத் தலைவரும் செயல்பட்டு ஆவன செய்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு துறையை ஊழல் என்று சொல்கிறார்கள். நடக்காததை நடக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி யெல்லாம் சொல்லி இந்தத் துறையை சீர்கேடான நிலைக்கு ஆக்கவேண்டுமென்று சொல்கிறார்களே தவிர, கிராமங்களுக்கு மின்சாரம் சென்று அந்த மின்சாரத்தின் நன்மைகளைப் பெறுகின்ற ஏழை எளிய மக்கள் அரசாங்கத்தைப் போற்றுகிறார்கள்.

[திரு. கோ. செபமாலை] [1973 நவம்பர் 23

[நண்பகல் 12-00]

நல்ல பல திட்டங்களைத் தீட்டி மக்களுக்கு நன்மை செய்து வருகிறது இந்த அரசு. மங்களூரில் கிராம தீவிர வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கலைஞர் அவர்கள் ஆட்சியில் நல்ல பல காரியங்கள் செய்யப்பட்டுள்ளன. சிற்றூர்களில் எல்லாம் சாலைகள், இணைப்புச் சாலைகள், பம்ப் செட்கள் இவைகள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றன. விவசாயிகளுக்கு பம்ப் செட்களுக்காக மின்சாரம் கொடுக்கப்பட்டு விவசாய உற்பத்தியை அதிகரிக்க வழி ஏற்படுத்தியிருக்கிறார்கள். ரைஸ் மில்களுக்கு, வேறு பல தொழிற்சாலைகளுக்கும் மின்சாரம் தேவைப்படுகிறது. பல்வேறு திட்டங்களுக்கு மின்சாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியிருப்பதால் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. பெரிய பெரிய நகரங்கள், நகராட்சிகள் இவற்றிற்கு ஏராளமான மின்சாரம் தேவைப்படுகிறது. ஆக நாம் அதிக அளவில் மின்சாரத்தைப் பயன்படுத்துவதால் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இன்று மின்சாரத்தை கள்ளச் சந்தையில் விற்பதாகச் சொல்கிறார்கள். அப்படி எதுவும் நடைபெறவில்லை. வேண்டுமென்றே இந்த ஆட்சிக்கு ஒரு களங்கம் கற்பிக்க வேண்டும், இந்த ஆட்சிக்கு நல்ல பெயர் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் மின்சாரப் பற்றாக்குறையை திசை திருப்பி விடுகிறார்கள். இந்த ஆட்சி செய்துள்ள நல்ல காரியங்களை இன்று மக்கள், குறிப்பாக ஹரிஜன மக்கள் நிதர்சனமாகப் பார்க்கிறார்கள். அதிகாரிகளானாலும் சரி, சீப் என்ஜினியர், எக்சிக்யூட்டிவ் என்ஜினியர் இவர்கள் எல்லாம் கிராமங்களுக்கு வந்து மக்களின் தேவையை அறிந்து செயல்படுகிறார்கள். நான் சிலயிடங்களுக்கு போகும் போது அதிகாரிகள் ஜீப்களில் வருகிறார்கள், விளக்குகள் எரிகின்றனவா இல்லையா என்றெல்லாம் கேட்கிறார்கள். அதிகமான தெரு விளக்குகள் போடப்பட்டுள்ள காரணத்தினால் சிலயிடங்களில் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. அதிகாரிகள் நல்லமுறையில் பணியாற்றுகிறார்கள். அடிக்கடி கிராமங்களுக்கு வந்து பார்க்கிறார்கள். இந்த வாரியத்தை ஏழை எளிய மக்கள், குறிப்பாக ஹரிஜன மக்கள் போற்றுகிறார்கள்.

(திரு. பெ. சௌந்தரபாண்டியன் தலைமை)

கலைஞர் அவர்களின் ஆட்சியில் கிராமங்களுக்கு நல்லமுறையில் மின் ஒளி தரப்பட்டுள்ளது. விவசாயிகளும் நல்லமுறையில் பயன்

அடைந்திருக்கிறார்கள். பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆக, இந்த வாரியத்தைச் சேர்ந்த அதிகாரிகளையும், மின்சார அமைச்சர் அவர்களையும் கலைஞர் அவர்களையும் பாராட்டி இந்த அரசு ஏழை மக்களுக்காகப் பாடுபடுகிறது என்று மீண்டும் கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. நா. வெ. குருசாமி:** தலைவர் அவர்களே, இந்த மின்சார மானியக் கோரிக்கை மீது எனது சில கருத்துக்களைக் கூறலாம் என்று ஆசைப்படுகிறேன்.

இன்று தமிழ்நாட்டில் மின்சாரம் தேவைக்குத் தகுந்தாற்போல் பெருகாதிருக்கிறது. மின்சாரத்திற்கு நாம் அண்டை மாநிலங்களை அணுக வேண்டியிருக்கிறது. குறிப்பாக, அண்டை மாநிலங்களோடு பண்டமாற்று முறையில்தான் சில பொருள்களை கொடுத்து அவர்களிடமிருந்து மின்சாரத்தைப் பெறவேண்டியிருக்கிறது. அதிலும் முக்கியமாகத் தேவைப்படுகிற சிமெண்ட், டயர், நூல் போன்ற சில பொருள்களை நாம் கொடுக்கிற காரணத்தினால்தான் நூல் கிடைக்காமல் நெசவாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டு சிலயிடங்களில் பிச்சை எடுக்கும் ஒரு சூழ்நிலை இருக்கிறது. சிமெண்ட் கிடைக்காமல் சில முக்கியமான வேலைகள் எல்லாம் தடைப்பட்டுக் கிடக்கின்றன. டயர் கிடைக்காமல் குறிப்பாக அரசுப் போக்குவரத்து வண்டிகள் சில எங்களுடைய மதுரை மாவட்டத்தில் சில ஷெட்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இவை எதனால் ஏற்படுகிறது என்றால் சரியான முறையில் திட்டமிட்டு இந்த அரசு செய்யாத ஒரு காரணத்தினால்தான் என்று மின்சார இலாகா மீது இந்தச் சந்தர்ப்பத்தில் நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

மின்சார சப்ளை கொடுக்கும்போது சர்வீஸ் போஸ்ட்டிலிருந்து பெட்டிக்குக் கொடுக்கக்கூடிய வயர்கள், ப்யூஸ் இவைகளையெல்லாம் நீங்கள் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று விவசாயிகளிடம் கேட்டு அவர்கள் வாங்கிக் கொடுத்தால்தான் போடுவது என்ற முறையில் இலாகாவினர் மக்கள் அவற்றை வாங்கிக் கொடுத்தால்தான் செய்கிறார்கள். இம்முறை மாறவேண்டும், தெரு விளக்குகள் எரியவில்லை என்று எதிர்க்கட்சி உறுப்பினர்களும், ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் தெளிவாகச் சொன்னார்கள். ஆகவே அதைப் பற்றி நான் மேலும் சொல்லி

காலத்தைப் போக்க விரும்பவில்லை. தெருவிளக்குகள் விஷயத்தில் இந்த இலாக்கா கண்காணிப்புடன் இருந்து தெரு விளக்குகளை நல்ல முறையில் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அக்டோபரில் இருந்து 15 சதவிகிதம் மின்வெட்டு என்று அறிவித்திருப்பதாகத் தெரிகிறது. எங்கள் பெரியகுளம் வட்டம் பம்ப் செட்களை நம்பியிருக்கும் ஒரு பகுதி. அங்கு பம்ப் செட்களுக்குப் பகல் நேரத்தில் பாதி நேரம்தான் மின்சாரம் கொடுக்கப்படுகிறது. அங்கு 15 சதவிகிதம் மின்வெட்டு என்றிருப்பதாகத் தெரியவில்லை. அது 50 சதவிகிதம் மின்வெட்டு என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, பம்ப் செட்களுக்கு மின்சாரம் முழு சப்ளையும் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

முன்பு அமைச்சர் அவர்கள் கோதையாற்றில் பின் இல்லை என்பதால் மின்சார உற்பத்தி பாதித்திருப்பதாகக் கூறினார்கள். இப்போது அந்த பின் வந்துவிட்டதா என்பதை அறிவிக்க வேண்டும். பின் வந்து உற்பத்தி தொடங்கிவிட்டதா? ஆக இருக்கிற சீர்கேடுகளை நல்லமுறையில் ஆராய்ந்து தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கே. பி. கோபால்:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை மீது ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

1971-72, 72-73-ம் ஆண்டு விவாதத்திலும், கடந்த மூன்று நாட்கள் விவாதத்தில் கலந்து கொண்டு உறுப்பினர்கள் பெரும்பான்மையோர் கட்சிகளுக்கப்பாற்பட்ட முறையில் பல குறைகளைக் கூறினார்கள். மின்சாரத் தட்டுப்பாடு அடிக்கடி ஏற்படுகிறது. விளக்குகள் சரியாக எரிவதில்லை. மோட்டார் பம்ப் செட்களில் மோட்டார்கள் அடிக்கடி தீய்ந்து விடுகின்றன. மின் இணைப்புக் கிடைப்பதில் காலதாமதமாகிறது. மின் வெட்டு காரணமாக சகல தரப்பினரும் பாதிக்கப்படுகிறார்கள் என்பவையேயாகும். இதற்குக் காரணம் என்ன என்பதுபற்றிச் சிந்திக்க வேண்டும்.

1973 நவம்பர் 23] [திரு. கே. பி. கோபால்]

மின் இணைப்பு எந்த அளவிற்குக் கொடுக்கிறோமோ அந்த அளவிற்கு மின் உற்பத்தியைப் பெருக்குவதில், மின் நிலையங்களை பராமரிப்பதில் அரசு தவறிவிட்டது. மூன்றாவது திட்டத்தில் காங்கிரஸ் அரசு 1961 முதல் 1966 வரையில் ஐந்தாண்டுக் காலத்தில் 850 மெகா வாட்ஸ் உற்பத்தி செய்து காட்டினார்கள். ஆண்டு ஒன்றுக்கு 160 மெகாவாட். ஆனால் தி.மு.க, அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் 289 மெகாவாட் உற்பத்தி செய்திருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 96 மெகாவாட் 1966 ஏப்ரல் முதல் இன்று வரை கணக்கிட்டுப் பார்த்தால் எட்டு ஆண்டுகளில் 884 மெகாவாட் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 110 மெகாவாட் ஆக மின் உற்பத்தியில் நிச்சயமாக காங்கிரஸ் அரசு பெரியதொரு சாதனையைச் சாதித்திருக்கிறது. அதைத்தான் எங்கள் பெருந் தலைவர் காமராஜ் அவர்கள், முழுமை விழா என்று சொல்லி கம்பி நீட்டு விழா நடத்துகிறார்கள் என்று கூறுகிறார்கள்.

அமைச்சரவை மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் வந்த போது அதன்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு நான் சமய நல்லூர் பற்றி குறிப்பிட்டேன். அப்போது அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எபிஷியன்ஸி அண்ட் எக்கானமி கமிட்டி என்ற எக்ஸ்பெர்ட் கமிட்டியின் சிபாரிசின்பேரில் அந்த மின்நிலையம் விற்கப் பட்டது என்று மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதைத்தான் மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களும் கூறினார்கள். ஆனால் இந்த நேரத்திலே நான் ஒரு முரண்பாட்டைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஊழல் புகார் பட்டியலின் பதில் பக்கம் 167-ல் இந்த எக்ஸ்பார்ட் கமிட்டி என்ன கூறியிருக்கிறது என்றால் அங்கேயுள்ள நிலக்கரி தீர்ந்தவுடன் அதை மூடிவிட்டு அதன் கருவிகளை நல்ல விதத்தில் பயன்படும் வாய்ப்பைப் பரிசீலிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறது. இந்த எக்ஸ்பார்ட் கமிட்டி இருப்பதை மூடிவிட வேண்டுமென்றும் அங்கேயுள்ள கருவிகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறதே தவிர அன்று அமைச்சர் கூறியதுபோல் சமயநல்லூர் மின் நிலையத்தை விற்கச் சொல்லவில்லை. புக் வேல்யூக்கு விற்று விட வேண்டுமென்று கூறவில்லை. எபிசியன்சி எகானமி கமிட்டியும் அவ்வாறு கூறவில்லை. மேலும் அந்தக் கருவிகள் சேதம் அடைந்ததாகவோ, அல்லது இயங்க முடியாத நிலையில் இருந்ததாகவோ இல்லை. அப்படியே அதை மூட வேண்டுமென்று சொல்லியிருக்

தாலும், அந்தக் கருவிகளை வைத்துக்கொண்டு வேறு இடத்தில் மின்நிலையம் ஆரம்பித்து இருக்கலாம். புக்வேல்யூக்கு விற்று விட்டோம் என்று சொல்கிறார்கள், ஏன் அதே முறையில் ‘புக் வேல்யூ’ கொடுத்து பஸ் தேசியமயமாக்கும்போது செய்யவில்லையென்று குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

காங்கிரஸ் ஆட்சி இருந்த நேரத்தில் வாரிய நிர்வாகத்தில் கட்டுப்பாடும் சிக்கனமும் சுதந்திரமாக செயல்படும் உரிமையுடனும் செயல்பட்டார்கள். திறமைமிக்க அதிகாரிகள் இருந்தார்கள். அந்த அளவுக்கு இன்றைக்கு இல்லை. இன்றைக்குத் திறமைமிக்க அதிகாரிகள் சிலர் இருந்தாலும் அவர்களுடைய சேவைகளைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறது. அவர்கள் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை.

எங்கள் ஆட்சி காலத்தில் பெரியார் மின்சார நிலையம் கட்டுவதற்காக திட்டமிட்டோம். 140 மெகாவாட் திட்டத்தை 5 ஆண்டு காலத்தில் 10½ கோடி செலவில் கட்டுவதாகத் திட்டமிட்டோம். 1955-ல் பிப்ரவரியில் அந்த பெரியார் மின் நிலையம் தொடங்கப்பட்டது. 1958 நவம்பர் மாதம் முடிவு அடைந்துவிட்டது. ஐந்து ஆண்டுக்குள் முடிக்க வேண்டுமென்று திட்டமிட்டுவிட்டு நான்கு ஆண்டுக்காலத்தில் ரூ. 9¼ கோடி செலவில் முடித்து, ரூ. 1¼ கோடி அரசுக்கு சேமிப்பு செய்யப்பட்டது.

இந்த அரசு இப்போது சுருளியாறு மின் நிலையம் கட்ட திட்டமிட்டு இருக்கிறது. 35 மெகாவாட் மின் உற்பத்தியாகும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. 1971-72-ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1978-ல் முடிவு அடையும் என்று சொல்கிறார்கள். இந்தத் திட்டத்திற்காக ரூ. 6.59 லட்சம் ஒதுக்கப்பட்டது. இந்த மூன்று ஆண்டுகளில் ரூ. 2.86 லட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. 1978-ம் ஆண்டில் முடிவடையாது என்று திட்டவட்டமாகக் கூறுவேன். இவ்வளவு செலவு செய்யப்பட்டும் பூர்வாங்க வேலைகள்தான் முடிவடைந்து இருக்கின்றன. அதோடு அந்தத் திட்டம் முறைப்படி திட்டமிடப்பட்டு செய்யப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அங்கேயுள்ள அதிகாரிகளும், அலுவலாளர்களும் 10 மைல் தொலைவிலுள்ள கடலூரில் அலுவல் பார்க்க வேண்டியிருக்கிறது 15 மைல் தொலைவிலுள்ள கம்பத்திலிருந்து முகாமிற்கு வந்து அலுவல் பார்க்கவேண்டியிருக்கிறது என்ற நிலையிருக்கிறது. பூர்வாங்க

1973 நவம்பர் 23] [திரு. கே. பி. கோபால்]

வேலைகள், ரோடு போடுதல் போன்றவை கூடச் சரியாக நடக்க வில்லை என்று தெரிகிறது. கோதையாறு திட்டத்தில் இருந்தவர் களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்பதற்காக அவசர அவசரமாக இங்கே வேலை ஆரம்பிக்கப்பட்டது என்றும் சொல் கிறார்கள். இந்த குறைகள் உடனடியாகப் போக்கப்பட்டு, துரித மாக அங்கே வேலைகள் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்வெட்டு இப்போது 15 சதவிகிதம் என்று சொல்கிறார்கள். விவசாயத்தைப் பொறுத்தவரையில் அது 60 சதவிகிதமாக இருக் கிறது. இரவு 8 மணிக்கு மேலும், அதிகாலை 4 மணிக்கு முன்பும் நிச்சயமாக மின்சாரம் விவசாயத்திற்குப் பயன்படாது. எனவே விவசாயிகளைப் பொறுத்த வரையில் மின் வெட்டு பகலில் இருக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். இதை நான் மட்டுமல்ல, ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் கூட 1972-73 ஆண்டு மின் வாரிய நிதிநிலை அறிக்கை மீது பேசுகிறபோது சொல்லியிருக்கிறார் கள். இதிலே அரசியல் காழ்ப்புணர்ச்சியோடும் சில இடங்களில் செயல்பட்டு வருகிறார்கள். 31—10—1972 அன்று எந்த வித நோட்டீசும் கொடுக்காமல் அலை ஓசை, நவசக்தி அலுவலகத்திற்கு மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டது. அதனால் 31—10—1972 அலை ஓசை பத்திரிகை வரவில்லை. 1—11—1972 நவசக்தி பத்திரிகை வரவில்லை. எவ்வளவுதான் மின்சாரம் அதிகமாகச் செலவு செய்து இருந்தாலும், அவர்களுக்கு அபராதமாக அதிகப்படியான கட்ட ணத்தை வசூலித்துக் கொள்ளவும் விதிகளில் இடமிருக்கின்றது. எனவே, முன் அறிவிப்பு இல்லாமல் மின்சாரம் துண்டிப்பது சரி யல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். இப்படிச் செய்வதால் பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்படுகிறது. இதற்கு முதல் அமைச்சர் தனக்குப் பொறுப்பு இல்லை யென்று நிருபர்களிடம் கூறி யிருந்தாலும் எந்த அதிகாரி செய்தாரோ அவர் மீது என்ன நடவ டிக்கை எடுக்கப்பட்டது என்பதையாவது தெரிவிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊரெல்லாம் ஒளி மயம் என்று சொல்கிறார்கள். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் வகாப் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் ஊரில் 350 டியூப் லைட்கள் இருப்பதில் 50 தான் எரிகிறது என்று சொன்னார்கள். அதேபோல் ஜப்பார் அவர்களும் கிராமப்புறங் களில் பெரும்பான்மையான விளக்குகள் எரியவில்லை என்று சொன்

னார்கள். தமிழகத்திலே எல்லா இடங்களுக்கும் மின் இணைப்பு 1972க்குள்ளே பூர்த்தியாகிவிடும் என்று முதலில் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு 1974 இறுதிக்குள் பூர்த்தியாகிவிடும் என்று சொல்கிறார்கள். ஏற்கனவே மின் இணைப்புக் கொடுக்கப்பட்ட கிராமங்களில் மின் விளக்குகள் எரியவில்லை. அப்படியிருக்கிறபோது மேலும் மின் இணைப்புக் கொடுப்பதால் என்ன பயன் என்று பார்க்க வேண்டும்.

மின்சாரக் களவு கண்டுபிடிக்கப்பட்டால் 15 சதவிகிதம் மின் வெட்டு இருக்காது என்று சொல்ல விரும்புகின்றேன். அப்படிக் கண்டுபிடிக்கிற பணியாளருக்கு ரூ. 50 பரிசு அளிக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ரூ. 500 கொடுத்தால் கூடத் தகும். இப்படி அதிகப்படி மின் உற்பத்தி கிடைத்தால் மின் வெட்டு கொண்டுவரத் தேவையில்லை என்று கூறி, இவ்வளவு நேரம் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

* திரு. எம். ஆர். கண்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மின்சார இலாக்கா நிதி நிலை அறிக்கை மீது என்னுடைய எண்ணங்களைச் சொல்ல விழைகிறேன்.

பொருளாதார வளர்ச்சிக்கு மிக மிக இன்றியமையாதது மின்சாரம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அது விவசாயத் துறையாக இருந்தாலும் சரி, தொழில் துறையாக இருந்தாலும் சரி, மிக முக்கிய பங்கு மின்சாரம் வகிக்கிறது. தமிழ்நாட்டில் மின்சாரத்தை எந்த அளவுக்கு நல்ல முறையில் பயன்படுத்த முடியுமோ அந்த அளவிற்குப் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம். அனல் மின்சார நிலையங்கள் ஓரளவிற்கு இருக்கின்றன. மேலும் அதிகமாக அனல் மின்சார நிலையங்கள் தேவை. தமிழக அரசு மத்திய அரசுக்கு இது குறித்து வற்புறுத்தி வருகிறது. அதே போன்று அணு மின்சார நிலையமும் மத்திய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. ஆனால் அது இங்கே நடைமுறைக்கு வரவில்லை. அதற்கு மத்திய அரசு காரணம் என்பதை நாமெல்லாம் அறிவோம். இன்றுள்ள நிலைமையில் மின்சாரத்தை எந்த அளவுக்கு நல்ல முறையில் பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு தமிழக அரசு பயன்படுத்தி வருகிறது. அதிலே எந்தவிதமான குறைபாடும் இல்லை. அந்த வாரியத்தினுடைய தலைவர் எந்த அளவுக்கு முயற்சிகளை எடுத்தக்

1973 நவம்பர் 23] [திரு. எம். ஆர். கண்ணன்]

கொள்ள வேண்டுமோ அந்த அளவுக்கு முயற்சிகளை எடுத்துக் கொண்டு அதை நல்ல முறையில் பயன்படுத்தி வருகிறார்கள். இங்கே பேசிய நண்பர்கள் எல்லோரும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, அவர்கள் சொல்லிய குறைகளெல்லாம் கொள்கையைப் பொறுத்தது அல்ல, பாலிஸி மாட்டரைப் பொறுத்தவரையில் அல்ல. பாலிஸியைப் பொறுத்தவரையில் சிறப்பாக இந்த அரசு எல்லா கிராமங்களுக்கும், எல்லா அரசின் மக்கள் குடியிருப்பு கிராமங்களுக்கும் மின்சாரம் தரவேண்டும் என்ற ஒரு நல்ல கொள்கையை வகுத்து, அதை நடைமுறைப் படுத்தி வருகிறது. இங்கே பலரும் சொல்லிய குறைகளெல்லாம் நிர்வாகத்தை அடிப்படையாகக் கொண்டதே தவிர, ஆட்சியை அடிப்படையாகக் கொண்டதில்லை. நிர்வாகத்தினால் ஏற்படக் கூடிய குறைகள் ஆட்சியினரைச் சாரும் என்று சொல்வார்கள். ஆட்சியிலுள்ள சில மந்திரிகளோ அல்லது சில சட்டமன்ற உறுப்பினர்களோ நிச்சயம் அந்தக் குறைகளை போக்கிவிட முடியாது. ஆட்சியிலுள்ள அதிகாரிகள் திறமையாகச் செயல்பட வேண்டும். அவர்கள் தாங்கள் அதிகாரத்தைச் செலுத்துவதற்கே இருப்பவர்கள் என்று எண்ணம் கொள்ளாமல் மக்களுக்கு சர்விஸ் செய்கிறோம் என்ற அடிப்படையில் இயங்க வேண்டும்.

நாமெல்லாம் ஓரளவுக்கு ஹானரரி சர்விஸ் செய்கிறோம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு சில ஆண்டுகள் பணி செய்கிறோம். ஆனால், அதிகாரிகள் சட்டத்தின் அடிப்படையில் நிரந்தரமாக வேலை செய்கிறார்கள். அவர்கள் மக்களுக்குச் சேவை செய்வதே தங்கள் கடமை என்ற உயர்ந்த எண்ணத்தின் அடிப்படையில் பணியாற்றினால்தான் இது போன்ற குறைகள் நீக்கப்படுமே தவிர, வேறு ஆட்சியிலிருப்பவர்கள் என்ன சிறப்பிற்குரிய முறையில் நடந்து கொண்டாலும் சரி, சிறப்பான திட்டங்களை தீட்டினாலும் சரி, மக்களுடைய குறைபாடுகள் தீராது. பல ஆயிரக்கணக்கான அதிகாரிகள் இந்த வாரியத்தில் வேலை செய்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் கண்ணும் கருத்துமாகப் பாடுபடவேண்டும். அவர்கள் எந்த அளவுக்கு முயற்சிகள் எடுத்துக் கொள்கிறார்களோ அந்த அளவுக்குத்தான் இந்தக் குறைபாடுகள் எல்லாம் தீரும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் கிடையாது.

[திரு. எம். ஆர். கண்ணன்] [1973 நவம்பர் 23

நாங்கள் மத்திய சர்க்கார் மீது குறை சொல்கிறோம் என்று கூறுகிறார்கள். ஆனால், எந்த ஒரு சிறிய திட்டத்தை எடுத்துக் கொண்டாலும், நாம் அதை எடுத்துச் செய்வதற்கு அதிகாரம் இல்லை. மக்களுடைய வோட்டுகள் வாங்கிக் கொண்டு வருகிறோம், 'உங்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வோம்' என்று அவர்களிடம் கூறி வோட்டு வாங்குகிறோம். அப்படி வந்த பிறகு எதற்கு எடுத்தாலும் மத்திய அரசை கேட்டுக் கொண்டுதான் அவர்கள் அனுமதி பெற்றுத்தான் செய்யவேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. அவர்கள் அனுமதி பெற்றுத் தான் மக்களுக்கு நன்மை செய்யவேண்டும். இது தான் இருக்கின்ற நிலைமை, இதை மாற்ற வேண்டும் என்று கேட்டால், பிரிவினை வாதி என்று சொல்கிறார்கள். இந்த ஆட்சி இந்த நாட்டில் ஏற்பட்ட பிறகு இங்கே பேசிய உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட கொள்கை அடிப்படையில் ஏதாவது குறை கூறியிருக்கிறார்களா, சொல்லுங்கள். அவர்கள் கூறிய குறைகள் நிர்வாக அடிப்படையில் அமைந்திருக்கின்றனவே தவிர, கொள்கை அடிப்படையில் அல்ல.

மதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் நேற்று இங்கே ஒரு பிரிவிலேஜ் மோஷன் மீது பேசியபொழுது, அஜிடேஷனைப் பற்றிப் பேசினார். எதாகிலும் குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் அவர்கள் சொன்ன வார்த்தைகள், உபயோகித்த வார்த்தைகள் தேவையற்ற வார்த்தைகள். அஜிடேஷன் தனிப்பட்ட முறையில் செய்தார்கள். ஆட்சியினர் ஏதாவது தவறு செய்தார்களா? இல்லை. 'நானாக இருந்தால், அடிப்பேன், உதைப்பேன்' என்று சொன்னார். அந்த எண்ணமே நிச்சயம் வரக்கூடாது. மக்கள் பிரதிநிதிகள் அப்படிச் சொல்வது நல்லதல்ல. அதிலும் குறிப்பாக மிகவும் முதியவர், நல்ல அனுபவம் உள்ள உறுப்பினர், அது போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது. ஆளை வைத்து அடிப்பேன் என்றெல்லாம் சொன்னார்கள், தற்காப்புக்காக அப்படிச் செய்வேன் என்று கூறினார்கள். தற்காப்புக்காக இருந்தாலும் சாதாரணமாக ஆட்களை வைத்து உதைப்பேன் என்று சொல்வதில்லை. அவர்களே தான் தன்னைச் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமே தவிர, ஆளை வைத்து தாக்குவது என்பது சரியாகாது. சாதாரணமாக அப்படிச் சொல்வது இல்லை.

1973 நவம்பர் 23] [திரு. எம். ஆர். கண்ணன்]

ஊழல், ஊழல் என்று சொல்கிறார்கள். ஆனால் குறிப்பிட்டு எதையும் சொல்லவில்லை. தவறான கொள்கையினால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று ஏதாகிலும் சொல்ல முடியுமா? அப்படி ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.

இந்த ஆட்சியைக் குறை கூறுபவர்கள் இரண்டு, மூன்று பேர்கள் தான். பிராமணப் பெருங்குடி மக்கள் குறை சொல்கிறார்கள். அவர்கள் கூடத் தவறாகக் குறை சொல்கிறார்கள். அவர்கள் நியாயத்தை உணர்ந்து கொண்டால் நிச்சயம் குறை சொல்லமாட்டார்கள். அர்ச்சகர்களாக எல்லா சமுதாயத்தினரைச் சேர்ந்தவர்களும் வரக்கூடாது என்பது அவர்கள் கருத்து. உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற எண்ணத்தில் அப்படிக் கூறுவது நல்லது அல்ல. நிலைமையை சீர்தூக்கிப் பார்த்தால் நிச்சயம் அவர்கள் இதை உணர்வார்கள். மனிதாபிமானத்தோடு எல்லா மக்களும் ஒரே நிலையில் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அதை அவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டும். அந்த அடிப்படையை உணர்ந்தால் அவர்களும் எதிர்க்க மாட்டார்கள்.

இரண்டாவது, பெரிய கோடீஸ்வரர்கள் எதிர்க்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் இருந்த நிலைமை கொஞ்சம் மாறுகிறது. அவர்களை யாரும் ஒன்றும் செய்துவிடவில்லை. அவர்கள் இருந்து கொண்டிருந்த நிலை கொஞ்சம் மாறுகிறது. நூறு மோட்டார் பஸ்களை வைத்துக் கொண்டிருந்தார்கள், பல மில்களுக்கு அதிபர்களாக இருந்தார்கள். நாட்டுடைமையாக்குகிறோம் என்றால் அவர்கள் எதிர்க்கிறார்கள். மனிதாபிமானத்தோடு அது ஒரு நல்ல கொள்கை, அந்தக் கொள்கையின் அடிப்படையில் மக்களுக்கு நன்மை கிடைக்கும், சமுதாயத்தில் உடனடியாக அவர்களுக்கு எந்தவிதமான மாறுதலும் ஏற்பட்டுவிடப் போவதில்லை என்பதை உணர்ந்தால் அவர்களும் எதிர்க்கமாட்டார்கள். அவர்கள் தங்கள் நிலையிலிருந்து கொஞ்சம் இறங்குகிறார்கள். அவ்வளவு தான். உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்ற எண்ணத்தினால் தான் இந்தத் தகராறுகள் வருகின்றன. பிராமண சமூகத்தினர் அந்த அடிப்படையில் தான் எதிர்க்கிறார்கள். வேறு யாரும் இந்த ஆட்சியை எதிர்ப்பதற்கு நியாயம் கிடையாது.

[திரு. எம். ஆர். கண்ணன்] [1973 நவம்பர் 23

தமிழ் மக்களுடைய நன்மைக்காகவே இந்த ஆட்சி நியாயமான முறையில், சிறப்பான முறையில் பல கொள்கைகளை வகுத்து, குறிப்பாக ஏழை மக்களுக்கு எல்லாத் துறைகளிலும் நன்மை பயக்கும்படி பணியாற்றிக் கொண்டு வருகிறது. இந்த ஆட்சியை யாரும் எதிர்ப்பதற்கு நியாயம் கிடையாது. எங்களை விட்டுப் பிரிந்து சென்ற அண்ணா தி.மு.க. வினர் தனிப்பட்ட முறையில் இருக்கிற கோபதாபங்களைக் கொண்டு தான் எங்களை எதிர்க்கிறார்களே தவிர, கொள்கை அடிப்படையில் எந்தவிதமான எதிர்ப்பும் இல்லை. தனிப்பட்டு இருக்கிற பொச்சரிப்பு பொறாமை காரணமாகத் தான் எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறதே தவிர, கொள்கை அடிப்படையில் எந்தவிதமான மாறுபாடும் கிடையாது. திடீரென்று ஞானோதயம் வந்தது போல் அவர்கள் பிரிந்து போனார்கள். அதனால் தான் அவர்கள் அப்படிப் பேசுகிறார்கள். அவர்களும் எங்கள் சகோதரர்கள் தான், எங்களுடன் இருந்தவர்கள் தான். எங்களுடைய கொள்கைகள் தான் அவர்களுக்கும். இன்று இல்லாவிட்டால் கூட நாளை நிச்சயம் அவர்கள் வருவார்கள் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. அவர்கள் இம்மாதிரி பேசுவதை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு நீங்கள் எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் சரி, மின்சாரத் துறையாக இருந்தாலும் சரி, மற்ற எந்தத் துறையாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சிகளும், மற்ற மாற்றுக் கட்சிகளும் விரோதமாக நினைக்கிறார்கள். அவர்கள் பேசும் பேச்சுக்கள் கொள்கையின் அடிப்படையில் இருக்கிறதா என்றால், இல்லை. ஊழல், ஊழல் என்று யார் வேண்டுமானாலும் சொல்லலாம். தெருவில் போகிறவன் கூட சொல்லலாம். யார், எப்படி, எங்கே ஊழல் என்று சொல்ல முடியுமா? ஊழல் பட்டியலைக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லலாம். அந்த ஊழல் பட்டியலில் எந்தவிதமான பொருளும் இல்லை, அதற்குக் கொடுத்த பதிலில் எல்லாவிதமான நியாயமும் இருக்கிறது என்பது மக்களுக்குத் தெரிந்துவிட்டது. அந்த நிலை தெரிந்தும் கூட இந்த ஆட்சியை . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காங்கிரஸ் கட்சியைப் பற்றிச் சொன்னார்கள். கார்ப்பரேஷனில் ஊழல் இல்லாமலா கலைக்கப்பட்டது? இதைப் பற்றி தாங்கள் ஊழல் இல்லை என்று சொல்கிறீர்களா?

1973 நவம்பர் 23]

திரு. எம். ஆர். கண்ணன் : கார்ப்பரேஷனில் சில ஊழல்கள் நடந்திருக்கின்றன. கார்ப்பரேஷனை கலைத்திருக்கிறார்கள். ஊழல்களை யார் நடத்தினார்கள்? தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்ஸிலர்களா நடத்தினார்கள்? ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு கவுன்ஸில் நடக்கிறது. சட்ட அடிப்படையிலே அதிகாரிகள் வேலை செய்கிறார்கள். அன்றாட நிர்வாகத்தில் அதிகாரிகள் உடந்தையாக இருந்தால்தான் ஊழல்கள் நடக்க முடியும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : கார்ப்பரேஷனில் ஊழல் நடந்திருக்கிறது. அங்கே நான்கு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மாநகராட்சிமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் ஊழலைச் செய்யவில்லை என்று சொல்கிறார்கள். அப்படி யென்றால் மாநகராட்சி மன்றத்தை ஏன் கலைக்க வேண்டும்.

திரு. எம். ஆர். கண்ணன் : மாநகராட்சிமன்றப் பொறுப்புக்கும் ஊழலுக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஊழல் நடந்திருக்கிறது அதிகாரிகளைப் பொறுத்தது. அந்த அதிகாரிகள் நல்ல முறையில் இயங்கவில்லை. அதிகாரிகளுடன்கூட கவுன்சிலும் சரிவரச் செயல்படவில்லை. ஆகவே, கலைக்கப்பட்டிருக்கிறது. கவுன்சில் அங்கத்தினர்கள் என்னுடைய கட்சிக்காரர்கள் மட்டுமல்ல. உங்களுடைய கட்சிக்காரர்களும் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். 48, 50 பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் குறைபாடுகளை ஏன் எடுத்துச் சொல்லவில்லை. அன்றாட அட்மினிஸ்டரேஷனில் கவுன்சிலர் எவரும் தலையிட முடியாது. அதிகாரிகள் தவறுதலாக நடந்து கொண்டிருக்கிறார்கள் . . .

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னை மாநகராட்சி மன்றத்தில் அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் 60 பேர்கள் இருப்பதாகச் சொன்னார்கள். அந்தக் கணக்கினை அவர்கள் சரியாகச் சொல்லவில்லை.

திரு. எம். ஆர். கண்ணன் : இந்த பாயிண்டை ரெய்ஸ் பண்ணிப் பேசியவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள். அவர்களுக்குச் சொன்ன பதிலே தவிர, எட்மண்ட் அவர்களுக்கு அல்ல. இரண்டு பேர்களுக்கும் சேர்ந்தாற்போல் கூட இந்தப் பதிலை எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, ஊழலைப்பற்றி நீங்கள்

தவருக எடுத்துக் கொள்ளவேண்டாம். அதிகாரிகள் தான் அன்ருடம் நிர்வாகத்தை நடத்துகிருர்கள். அது இந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, நகராட்சி மன்றமாகயிருந்தாலும் சரி...

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கார்ப்பரேஷனைக் கலைத்த தற்குக் காரணம் என்ன என்று உறுப்பினர் அவர்கள் கூறுவார் களா ?

திரு. எம். ஆர். கண்ணன் : கலைத்ததற்குக் காரணம், நிச்சயம் அதிகாரிகள் தவறு செய்திருக்கிருர்கள். அந்தத் தவறுகளுக்கு கவுன்சில் என்பது ஓரளவுக்குப் பொறுப்பாக இருக்கலாம். இங்கே பெரியவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அவர்களுடைய எண்ணத்தை உதாசீனப்படுத்த வேண்டாம், அவர்களுக்கு நாம் வாய்ப்பு தருவோம் என்று பெருந்தன்மையோடு கலைத்திருக் கிருர்கள். அங்கே இருக்கிற டி.எம்.கே. நகரமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அங்கே அவர்களுக்கு அன்ருட நிர்வாகத்தில் எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. சட்ட அடிப்படையில் இயங்கக்கூடிய சாதாரண சுகாதார அங்கம் தான். அங்கே யாரும் எந்தச் சட்டத்தையும் போடுவது இல்லை . . .

THIRU K. M. SUBRAMANIAM : Sir, there are three authorities in the Corporation—one is the Council, the second is the Standing Committee and the third is the Executive. If the Executive has committed the mistake and are corrupt according to the hon Member, why should this Government supersede the Council? Can he explain that?

[பிற்பகல் 12-30]

திரு. நா. வீராசாமி : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். இப் போது மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைமீது விவாதம் நடைபெறுகிறது அல்லது கார்ப்பரேஷன் மீது டிஸ்கஷன் நடக்கிறதா என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சௌந்தர பாண்டியன்) : இப்போது நடைபெறுவது மின்சார வாரியத்தின் மீதான விவாதம்தான். மாண்புமிகு உறுப்பினர்கள் அவையை திசை திருப்ப வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1973 நவம்பர் 23]

திரு. எம். ஆர். கண்ணன் : மின்சார வாரியம் இன்றைய தினம் மிக நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது. அதைக் காணப் பொறுக்காதவர்கள்—சில கட்சிக்காரர்கள், காங்கிரஸ்(ஓ) ஆக இருந்தாலும் அல்லது காங்கிரஸ் (ஆர்) ஆக இருந்தாலும்—பொருமைப்படுகிறார்கள், பொச்சரிப்படைகிறார்கள். இந்த ஆட்சி எதைச் செய்யத் தவறி விட்டது? விவசாயிகளுக்குக் குறை வைத்திருக்கிறதா? கல்வியில் குறை கண்டீர்களா? அல்லது தொழில் துறையிலே குறை கண்டீர்களா? எதிலே குறை கண்டீர்கள் இந்த ஆட்சியின்மீது குறை சொல்வதற்கு? எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் . . .

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், திரும்பவும் கனம் உறுப்பினர் அவர்கள் மின்சார வாரியத்தைத் தவிர மற்ற எல்லா விஷயங்களையும் பற்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இங்கே மின்சார வாரியத்தைப்பற்றி பேசினால் நல்லது. கட்சி விவகாரங்களைப்பற்றி மேடையில் பேசிக் கொள்ளட்டும்; இங்கே வேண்டாம்.

திரு. எம். ஆர். கண்ணன் : மின்சார வாரியத்தைப் பற்றிக் குறை சொன்னவர்களுக்குப் பதில் சொல்லும் வகையிலே சில தகவல்களைச் சொல்கிறேன். அதற்கான காரணங்களைச் சொல்கிறேன். மின்சார வாரியம் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. தவறுகள் எங்காவது ஒன்றிரண்டு இடங்களில் நடைபெற்றிருக்கலாம். அது சில அதிகாரிகளால் நடந்திருக்கலாம் அல்லது ஊழியர்களால் நடந்திருக்கலாம். அதற்காக ஆட்சியைக் குறைசொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு அதிகாரிகள் தான் பொறுப்பு. அப்படியிருந்தும் ஆட்சியின்மீது குறை சொல்வதானால் அது கட்சிக் கண்ணோட்டமே அல்லாமல் வேறல்ல. இந்த நாட்டை டாக்டர் கலைஞர் அவர்கள் சிறப்பாக ஆட்சி செய்கிறாரே, அமைச்சர்கள் நல்லமுறையில் பணியாற்றுகிறார்களே, சிறப்பாகத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுகிறார்களே, இப்படியே போய்க் கொண்டிருந்தால் மக்கள் நம்மை ஆதரிக்கமாட்டார்களே என்ற பொச்சரிப்பால் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும், காங்கிரஸ் ஆர்கனைசேஷனாக இருந்தாலும், ரூலிங் காங்கிரஸாக இருந்தாலும் அல்லது புதிதாகச் சில தோழர்கள் அமைத்திருக்கின்ற அ.தி.மு.க. ஆக இருந்தாலும்

சரி எல்லோருக்கும் இந்த ஒரே குறைதான். (திரு. முனு ஆதி, திரு. க. உரொ. எட்மண்ட் குறுக்கிடு), வேறு என்ன குறை இருக்க முடியும்?

திரு. முனு ஆதி: தலைவரவர்களே, அவர்கள் பேசும்போது அ.தி.மு.க. தோழமைக் கட்சிக்காரர்கள் என்று சொன்னார்கள். நாங்கள் ஒன்றும் தோழமைக் கட்சிக்காரர்கள் அல்ல.

திரு. செ. கந்தப்பன்: அவர் தோழமைக் கட்சிக்காரர்கள் என்று சொல்லவில்லை; தோழர்கள் அமைத்திருக்கிற அ.தி.மு.க. என்றுதான் சொன்னார்.

திரு. எம். ஆர். கண்ணன்: ஆகவே, இந்த ஆட்சி மிக மிகச் சிறப்பான ஆட்சி. திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர தமிழகத்திலே வேறு எந்தக் கட்சி வந்தாலும் இவ்வளவுச் சிறப்பாக ஆட்சி செய்ய முடியாது; மக்களுக்கு நன்மை செய்யும் ஆட்சி வரமுடியாது; ஆகவே, எல்லாக் கட்சிகளும் இந்த ஆட்சியை ஆதரிக்க வேண்டுமே அல்லாமல் பொறாமையால், பொச்சரிப்பால் புலம்புவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

இன்னும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன். எண்ணூரில் இராமசாமி முதலியார் நகர் இருக்கிறது. அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் நாரயணசாமி அவர்களும், நானும் எலெக்ட்ரிசிட்டி போர்டு சேர்மனிடம் இந்த விஷயத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறோம். அங்கே ஒரு வீட்டில் ஒரு கனெக்ஷன் கொடுத்திருக்கிறார்கள். அதிலிருந்து 100 குடியிருப்புகளுக்கு இணைப்புக் கொடுத்திருக்கிறார்கள். இந்தமாதிரியான முறைகளை உடனடியாக மாற்றி அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். நம்முடைய அமைச்சர் அவர்களிடமும் சொல்லியிருக்கிறோம். ஆகவே, இந்த விஷயத்தில் உடனடியாகத் தலையிட்டு, தொழிலாளர் குடும்பங்கள் வசிக்கும் அந்தக் குடியிருப்பில், ஒவ்வொரு வீட்டுக்கும் தனித்தனி கனெக்ஷன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். கனம் உறுப்பினர் அவர்கள் பேசும்போது, பொறாமை என்று சொல்லி, இன்னும் ஒரு வார்த்தையை அடிக்கடிச் சொன்னார்கள்.

1973 நவம்பர் 23] [திரு வா. மை. அப்துல் ஜப்பார்]

அது நம்முடைய சபைக்கு உகந்த வார்த்தை அல்ல. மேலும் நம்முடைய சபையிலே பெண் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அம்மாதிரியான வார்த்தைகள் உச்சரிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சௌந்தர பாண்டியன்) : அது வழக்கத்திலே உள்ள வார்த்தைதான். அதனால் அவர்கள் அந்த வார்த்தையை சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மீண்டும் ஜப்பார் அவர்கள் அந்த வார்த்தையை நினைவு படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவரவர்களே, இந்த மன்றத்தின்முன் வைக்கப்பட்டிருக்கின்ற 1973-74 ஆம் ஆண்டுக் கான மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான்கு தினங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த வாரியத்தனுடைய நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு உறுப் பினர்கள் பலர் இந்த வாரியத்தினுடைய பல்வேறுவிதமான சீர் கேடுகளை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருந்தாலும் இந்த ஆட்சியானது 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்று சொல்வதைப்போல எல்லாக் கிராமங்களுக்கும் மின்னொளி என்று சொல்லி சில விபரங்களையும் கொடுத்திருக் கிறார்கள். அது எப்போது கிடைக்கும் என்று இப்போதும் தெரியவில்லை. இப்போது மின்சாரம் வழங்கியிருக்கிற கிராமங்களை எல்லாம் பார்க்கிறோம். அதிலும், குறிப்பாக இந்தத் துறையை பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற திரு. ஓ. பி. இராமன் அவர்கள் வந்தபிறகு தெருவிளக்குகள் எல்லாம் எப்படி எரிகின்றன என்பதை நன்றாகப் பார்க்கிறோம். நான் தெருவிளக்குகள் என்று சொல்லும்போது, பொதுக் கூட்டங்களிலே அமைக்கப்பட்டி ருக்கும்—எப்போதோ ஒரு தடவை—விளக்குகளை, அலங்கார விளக்குகளைச் சொல்லவில்லை; ஊராட்சி ஒன்றியங்களிலே போடப்படுகின்ற தெரு விளக்குகளைப்பற்றிச் சொல்கிறேன். அந்த விளக்குகள் எல்லாம் தூக்குக் கயிற்றிலே தொங்குவதைப்போல தொங்கிக் கொண்டிருக்கின்றன. அவைகள் பொருத்தப்பட— வேண்டிய இடத்தில்—ஆங்கிள் என்று சொல்வார்களே, அந்த ஆங்கிளில் பொருத்தப்படாமல் மின்னிக் கொண்டிருக்கின்றன. கண்ணற்ற மக்களுக்கு கண்ணொளி வழங்குகிறோம் என்று

[திரு. துரை கோவிந்தராசன்] [1973 நவம்பர் 23

சொல்கின்ற இந்த ஆட்சியில், தெருவிலே தொங்கிக் கொண்டிருக்கின்ற விளக்கொளியைப் பார்க்கின்ற மக்களின் கண்கள் ஒளியிழந்து போகின்ற மாதிரி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவ்வளவு சுறுசுறுப்பாக இந்த மின்சாரம் வாரியம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்றுதான் நான் சொல்ல முடியும்.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

குறிப்பாக, இங்கே வைத்திருக்கிற நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கின்ற விஷயங்களைப் பார்க்கின்றபோது, ஒவ்வொரு வட்டம், மாவட்டம் வாரியாக, கிராமங்கள், குக்கிராமங்கள் வாரியாகக் கொடுக்கப்பட்டிருக்கின்ற விவரங்களைப் பார்க்கின்றபோது சின்னஞ்சிறு பள்ளிப் பிள்ளைகளுக்குப் படத்தைக் காட்டி பாடம் சொல்வதைப்போல இருக்கிறது. இத்தனைக் கிராமங்களுக்கு மின்சார இணைப்புக் கொடுத்துவிட்டோம்: இத்தனைப் பேர் பயனடைந்தார்கள். இதைச் செய்யப் போகிறோம் என்று புத்தகத்திலே அச்சிட்டுக் கொடுத்துவிட்டால், எல்லாம் செய்து முடித்துவிட்டத்தைப்போல், இதைப்போல் நல்லாட்சி நாட்டிலே இல்லை என்று சொல்கிறார்கள். குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த ஆட்சியையும் மின்சார வாரியத்தையும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். பாராட்டுபவர்கள் ஒரு பக்கத்திலே இருந்தாலும், விவசாயப் பெருங்குடி மக்கள் பல்வேறு வகைகளிலே பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஒவ்வொரு கிராமத்திலும் கிணறு வெட்டுவதற்காக அரசாங்கத்திடமிருந்து கடன் வாங்குகிறார்கள். அதிலே பம்புசெட் வைப்பதற்கும் கடன் வாங்குகிறார்கள். கிணற்றையும் வெட்டி, பம்புசெட்டையும் வைத்து, 'ஷெட்' என்று அடிப்படையிலே அதற்குக் கட்டடத்தையும் கட்டி வைத்துவிட்டு, இரண்டு, மூன்று ஆண்டுகளானாலும் மின்சார இணைப்புக் கிடைக்காமல் அவர்கள் வாங்கிய கடனுக்கு வட்டி என்ற பெயரால் வீட்டை விற்க வேண்டிய நிலைக்கு ஆளாகிறார்கள். நன்மை அடையலாம் என்று கடனை வாங்கி, இருப்பதையும் இழக்கின்ற நிலைதான் ஏற்படுகிறது பல இடங்களில். கிணறு வெட்டி, பம்புசெட் வைத்து, ஷெட் கட்டி முடிந்தவுடனே அந்த விவசாயிக்கு மின்சார இணைப்புக் கொடுத்தால் அவன் உற்பத்தியைப் பெருக்கி, வாங்கிய கடனையும் வட்டியையும் கட்டக்கூடிய நிலைமை ஏற்படும். ஆனால் மின்சார

1973 நவம்பர் 23] [திரு. துரை கோவிந்தராசன்]

வாரியத்தில் ஏற்படுகின்ற தாமதத்தினால் அவன் வட்டிக்கு விட்டை விட வேண்டியிருக்கிறது, என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் 1973-74 ஆம் ஆண்டில் 536 மில்லியன் யூனிட் பற்றாக்குறை ஏற்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பற்றாக்குறை ஏற்படாமல் இருப்பதற்கு இதுவரையிலும் இந்தத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகளும் அமைச்சர்களும் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ? ஒன்றும் இல்லை. இருக்கின்ற மின் வெட்டைத் தளர்த்துவதற்குரிய நடவடிக்கைகளை அவர்களால் இது வரையில் எடுக்க முடியவில்லை. குறிப்பாக மேட்டூரிலே அமைக்கப்பட வேண்டிய பவர் ஸ்டேஷனுக்கு இன்னும் அங்கீகாரம் கிடைக்கவில்லை. அதற்கு அங்கீகாரம் கிடைத்தால் 110 மெகாவாட் மின்சாரத்தை அங்கே உற்பத்தி செய்ய முடியும். அதற்கு இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. அதைவிட குறைவாகச் செலவாகக்கூடிய பல்வேறு திட்டங்கள்—ஹொக்கனக்கல் போன்ற 14 திட்டங்கள் இந்த நாட்டிலே இருக்கின்றன. அந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் இருக்கிறது என்றால் இந்த வாரியம் எந்த அளவுக்கு வேலை செய்கிறது என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

இந்த மின்சார வாரியத்திலே ஒரு பெரிய அதிகாரியை--ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டு, அவர் மாதத்தில் 20 நாட்கள் அண்டை மாநிலங்களுக்கும் மற்ற பகுதிகளுக்கும் சென்று வரக்கூடிய நிலைமைதான் இன்னும் இருக்கிறது. இங்கே ஏற்பட்டிருக்கிற மின்வெட்டைத் தளர்த்துவதற்கு இன்னும் அவர்களால் முடியவில்லை. ஆனால் இந்த நாட்டிலே இருக்கிற ஏழை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு 1972-73-ஆம் ஆண்டுக்குள் மின்சாரம் கொடுத்துவிட்டோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எல்லா வகையிலும் தன்னிறைவுப் பெற்றுவிட்டோம், உற்பத்தியைப் பெருக்கிவிட்டோம் என்று ஏட்டிலே சொல்லிவிட்டால் உற்பத்தி பெருகிவிடுமா அல்லது தன்னிறைவு பெற்றுவிட முடியுமா ? ஏட்டிலேதான் அதைப் பார்க்க முடியும்.

அதுமட்டுமல்ல. பெரிய பெரிய பொறுப்புகளிலே இருக்கின்ற அதிகாரிகள் பல தவறுகளைச் செய்கிறார்கள். இந்த மின்சார வாரியத்தின் தலைவர்களாக இருக்கிறவர்கள், அங்கே இரண்டு

உதவியாளர்களைப் போட்டிருக்கிறார்கள். அந்த உதவியாளர்களில் ஒருவர் அங்கே இருக்கின்ற ஜூனியர் அசிஸ்டன்ட் என்ற நிலையிலிருந்தவர், பலருக்கு கீழே இருந்தவர். அவரை நேர்முக உதவியாளராக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஏதோ சுற்றறிக்கை பெறப்பட்டதாகச் சொல்கிறார்கள். இனிமேல் எனக்குப் பதவி உயர்வு வேண்டாமென்று எழுதி வாங்கிக் கொண்டு தான் அந்த வேலை கொடுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட உதவியாளர்களை இங்கே வைத்துவிட்டு, வாரியத்தின் தலைவர் பல்வேறு வெளி நாடுகளில் சுற்றிக் கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட நிலைமைதான் இங்கே இருந்து கொண்டிருக்கிறது.

ஆனால் சொல்கிறார்கள், இந்த மாநிலத்திலே இருக்கிறவர்கள் குறிப்பாக மின்சார வாரியத்தில் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் பேர்கள் போர்டு விண்ணப்பத்தைப் பெற்று—1200, 2000 தான் இடங்கள் இருக்கின்றன என்கிற அளவில்—எல்லோருக்கும் வேலை அளிக்க முடியாது என்கிற நிலையில் இருபதாயிரம் பேர்களுடைய பணத்தைத் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். மீதியுள்ள 90 ஆயிரம் பேர்களுக்குப் பணம் திருப்பி அனுப்பப்படாமல் இருப்பதற்குக் காரணம்—அவர்களுக்கு பதவி வழங்கப்படுமா, இல்லையா என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏதோ ஆண்டுக்கு ஒருமுறை நடக்கிற பரிட்சையாக இது இல்லை. தற்போது பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த சிலர் மின்வாரிய எழுத்தர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதான அத்தாட்சியை மட்டும் பெற்று வைத்திருக்கிறார்கள். அவர்களும் இன்னமும் வேலைக்கு அழைக்கப்படவில்லை. இரண்டு தினங்களுக்கு முன்னால் இந்த அவையில் அதைப்பற்றிக் குறிப்பிட்டபோதுகூட ஒத்துக் கொண்டார்கள். 'அதிகாரிகளிடத்தில் ஊழல் இருக்கிறது, ஆட்சிக்கும் அதிகாரிகளுக்கும் சம்பந்தம் இல்லை' என்பதாகச் சொன்னார்கள். அதேபோல் இந்த மின்வாரியத்தில் பொதுவாகப், பரவலாக எங்கும் பேசப்படுகிறது, அங்கே பல்வேறு வகையான ஊழல்கள் நடைபெறுகின்றன என்பதாக. அதை இந்தச் சபையில் சொன்னால் ஆதாரம் இருக்கிறதா, ப்ரூப் இருக்கிறதா என்று கேட்கிறார்கள்.

அதேநேரத்தில் இன்றைக்கு மாநிலம் பூராவும் அங்கங்கே விளக்குகளே எரியாமல், மின்வெட்டு இருந்துகொண்டிருக்கிற சமயத்தில் சிலர் இந்திரலோகத்திற்குப் போவதற்கும் சந்திரலோகத்திற்குப் போவதற்குமாக—திருநெல்வேலியில் ஒரு பாலத் திறப்புக்கு பல்லாயிரக்கணக்கான யூனிட் மின்சக்தி விரயமாகக் கூடிய அளவில் விளக்குகள் போட்டிருந்தார்களே—அதைப்போல ஆங்காங்கே விளக்குகளைப்போட்டு விழாக்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் கிராம மக்களுக்குத் தரப்படவேண்டிய மின்சாரத்தை ஒரு சிலருக்கு மீட்டர்களை நிறுத்திவைத்துக் கொடுக்கக்கூடிய காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி நல்லமுறையில் சொன்னார்கள். அவர்கள் வாரியத்தையே நான்கு பகுதிகளாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே வேலை செய்கிற ப்யூன்களை எடுத்துக்கொண்டால் பத்து பேர்களுக்கு ஒரு ஹெட் ப்யூன் என்பதாகப் பதவி உயர்வு அளிக்கப்படவேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல அரசு அலுவலகத்தில் வேலைசெய்கிற சூப்பிரண்டெண்டுகளுக்கு செக்ஷன் ஆபிசர் என்று பெயர்மாற்றி செய்திருக்கிற அளவுக்கு அங்கு வேலை செய்கிற சூப்பிரண்டுகளுக்கும் செய்யவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் எப்படி இருக்கிறதென்றால் இன்றைக்கு ஊர்ப்புறங்களில் சிலவிடங்களில் பற்றி எரிகிறது. இருநூறு அடிக்கு ஒரு கம்பமாகப் போட்டு அந்தக் கம்பத்தில் அலுமினிய கம்பியை இழுத்து அவை ஊஞ்சல்போலத் தொங்கிக் கொண்டிருக்கின்றன. வைக்கோல் வண்டிகள் போனால் கூட இடித்துப் பற்றி எரிகிறது. மின்சார வாரியத்தில் நடக்கிற ஊழல்களை, வெளியில் மக்கள் பேசிக்கொள்வதை இங்கே சொல்ல முடியாது. ஆனால் என்ன நடக்கும் என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மின்சார இணைப்புக்குச் செப்புக் கம்பி கிடைக்காத நேரத்தில் தான் சென்னையில் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஒரு செப்புக் கம்பி ரோலே வீட்டு வசதி வாரியத்தைச் சேர்ந்தது, காணமல் போய்விட்டது, பிறகு கண்டுபிடிக்கப்பட்டது, அதுவும் முக்கிய

மான மிகவும் பிரபலமான ஒருவர் வீட்டுக்கு முன்னே இருந்தது— அதிலே பல அடிகள் வெட்டி வெட்டி கொண்டுபோகப்பட்டிருந்தது —இதற்கும் ஒரு அதிகாரி உடந்தையாக இருந்திருக்கிறார் என்கிற அளவில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல்விடப் பட்டிருக்கிறது, ரூ. 75 ஆயிரத்திற்கு மேல் அதில் இருந்து கம்பிகள் வெட்டப்பட்டு விற்கப்பட்டிருக்கிறது என்பது பொதுமக்களி டத்தில் சந்தேகமான நிலையிலேயே இருந்துகொண்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : சென்னையில் இருக்கிற அந்தப் பெரியவர் யார்? அவர் பெயர் என்ன என்கிற விவரங்களையும் தந்தால் அரசாங்கம் அதன்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வாய்ப்பு இருக்கும்.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, அவர் சென்னையில் இருக்கிறவர், நாங்கள் கிராமப்புறங்களில் இருந்து வருகிறோம். சென்னையில் இருக்கிறவர்கள் நாங்கள் சொல்வதைக் கேட்டுந்தான் அறிந்துகொள்ள வேண்டும். எனக்கு இதுவரை கிடைத்த விவரங்களைத்தான் சொன்னேன். அந்தச் செப்புக் கம்பிச் சுருள் யாரிடம் இருந்தது, அதை உடைத்தவர் யார் என்பதை அவரிடம் தெரிகிறபோது சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வீராசாமியிடம் தனிப்பட்ட முறையில் சொல்லக்கூடிய விவரங்களை இந்தப் பேரவையிலும் சொல்லலாம்.

திரு. துரை கோவிந்தராசன் : ஆகவே இப்படிப்பட்ட இந்த மின்சார வாரியம் இந்த நாட்டுமக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிற நேரத்தில் அண்ணா அவர்கள் சொன்னார்களே—பாடுபடுகிறவன் ஒருவன், பட்டா பெறுகிறவன் ஒருவன், உழுகிறவன் ஒருவன், உண்டு களிக்கிறவன் ஒருவன் என்பதாக—அதைப்போல பி.ஏ. படித்துவிட்டு, எம்.ஏ. படித்துவிட்டு இரண்டாண்டு, மூன்றாண்டாக தற்காலிகமாக உழைத்துக்கொண்டிருந்தவர்களுக்கு அங்கே வேலை கொடுக்கப்படாமல், தினக்கூலியாக உழைத்தவர்களுக்கு அங்கே வேலை கொடுக்கப்படாமல், வேறுமுறையில் உள்ளே நுழைகிற வர்களை அங்கே வேலைக்கு நியமிக்கப்படுகிற செயல்கள் மிகவும் வருந்தத்தக்கவை. இப்பேர்ப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளைச் செய்து கொண்டிருக்கிற மின்வாரியத்தின் நிதிநிலை அறிக்கை வெறுக்கத்தக்கது என்று நான் தெரிவித்து முடித்துக்கொள் கிறேன்.

1973 நவம்பர் 23]

திரு. என். இராசாங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மின் வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது நான்கு நாட்களாக இங்கே விவாதம் நடக்கிறது. இந்த விவாதத்திலே நாட்டு மக்கள் எதிர் பார்ப்பது விளக்கு இல்லாத பகுதிகளைச் சொல்லி, பம்புசெட்டு களுக்கு இணைப்புக் கிடைக்காத இடங்களைச் சொல்லி, மின் வாரியம் எங்கெங்கே நாட்டுமக்களுக்கு நன்மையான காரியங்களை உடனடியாகச் செய்தாகவேண்டும் என்பதைச் சொல்லி அதிலுள்ள குறைபாடுகளை அகற்ற தக்க யோசனைகளைச் சொல்ல வேண்டும் என்பதுதான். லட்சக்கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அவ்வாறு ஆக்கப்பணிகளுக்கு ஆலோசனை கூறுகிற முறையில் விவாதம் அமைந்திருக்கிறதா என்று பார்த்தால் பொது வாக இல்லை என்றே நான் வருத்தப்படுகிறேன். நாங்கள் எல்லாம் முன்பு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் விவாதத்திலே ஈடுபட்ட போது—அப்போது வெங்கட்டராமன் இருந்தார்கள்—செய்ய வேண்டிய காரியங்களை வற்புறுத்தி செய்யச் சொன்னோம். அவர்கள் அதைக் கேட்கவில்லை. இன்றைக்கு விவாதம் அப்படி யின்றி எங்கோ ஓயர் போய்விட்டது என்று சொல்லி ஆதாரமே இல்லாமல் எல்லாம் ஊழல் என்பதாகத்தான் பேசுகிறார்கள். நான் மூன்று தடவையாக தொடர்ந்து இந்த அவை உறுப்பினராக இருந்து வருகிறேன்.

1967-க்கு முன்னால் இந்த வாரியம் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட பகுதிகளையே கவனித்தது இல்லை. 1967-க்குப் பின்னால் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட பகுதிகளை மின் ஒளிமயமாக இந்த ஆட்சி செய்து வருகிறது என்பது ஒன்றுதான் அவர்கள் எல்லாம் இதனைக் குறை சொல்லக் காரணமாக இருக்கலாம். காங்கிரஸ் கட்சியின் 20 ஆண்டு கால ஆட்சியில் எவ்வளவு தாழ்த் தப்பட்ட காலனிகளுக்கு மின்வசதி அளிக்கப்பட்டது என்கிற கணக்கை வேண்டுமானாலும் எடுத்துப்பார்க்கலாம். இந்த ஐந்தாறு வருஷங்களிலே 23 ஆயிரம் அரிசனக் காலனிகளுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களது காலனிகளுக்கு கழக அரசு மின்வசதி அளித்திருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது. இது ஒன்று போதாதா? நாங்களெல்லாம் வாழ்க்கையிலே முன்னேறி வருகிறோம். எங்களுடைய கூரைகள் எல்லாம் சுத்தமாக இருப்பதற்கும், எங்கோ கிடக்கிற மக்களுக்கு வெளிச்சம்

[திரு. என். இராசாங்கம்] [1973 நவம்பர் 23

போட்டு, அங்கே ஒரு இடம் இருக்கிறது என்று மற்றவர் தெரிந்து கொள்ள, அடையாளம் காட்டுவதற்கு அதை விட வேறு என்ன காரணம் இருக்க முடியும் என்ற என்னுடைய அனுபவபூர்வமான எண்ணத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லையா ?

காலனிகளுக்கெல்லாம் வெளிச்சம் போடுகிறார்கள். ஒரு வார்த்தை அதைப் பற்றி ; ஒரு பாராட்டு உண்டா அதற்கு ? பன்னிரண்டு பம்ப் செட்டுகளை வைத்துக் கொண்டு மின்சாரம் வேண்டுமென்று கேட்பவர்களுக்கு மின்சாரம் கொடுக்க முடியுமா ? ஒரு பம்ப் செட் வைத்திருக்கிற ஏழை, ஒரு ஏக்கர் வைத்திருக்கிற ஏழை, தனது விவசாயம் நல்லமுறையில் இருக்கவேண்டுமென்று நினைக்கிற காலம் வந்துவிட்டது. இல்லாதவர்களுக்குக் கொடுக்கும் போது மின்வாரியம் தயக்கம் காட்டுவதில்லை. முதல் தடவையாகக் கேட்கிறார்கள், கொடுக்க வேண்டுமென்று கொடுத்துவிடுகிறார்கள்? ஆனால் 12 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்து விட்டு, அவரே 13-வது பம்பு செட்டுக்கு மின் இணைப்புக் கேட்டால் கொஞ்சம் யோசனை செய்கிறது. அப்படி யோசனை செய்வதுதான் ஊழல். சராசரி ஏழையும், சாதாரண மக்களும் 1 ஏக்கர், 2 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறவர்களும் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும் என்று அரசு விரும்புகிறது, வாரியம் விரும்புகிறது. பத்து, பன்னிரண்டு பம்ப் செட் வைத்திருப்பவர்கள் தங்களுடைய சொந்த முயற்சியிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று அதிகாரிகள் கூறும்போது அதிகாரிகளும் ஊழலானவர்களாகி விடுகிறார்கள் ; ஏழைகள் முன்னேறி வருகிறபோது அரசாங்கமும் ஊழல். அவர்கள் முன்னேறினால் அரசாங்கம் ஊழலாகி விடுகிறது. இப்படித்தான் அவர்கள் சொல்கிறார்கள். இதைத் தவிர வேறு ஒன்றும் என்னால் சொல்ல முடியாது.

சென்ற மாதம் ஹைதராபாத்தில் அகில இந்திய ஆராய்ச்சி ஒன்று நடைபெற்றது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து 4-வது ஐந்தாண்டுத் திட்டம் வரை ஒவ்வொரு மாநிலமும் எப்படி வருவாயைப் பயன்படுத்தியது, ஒவ்வொரு மாநிலத்தினுடைய முன்னேற்றம் என்ன என்பதை 30 நாட்கள் பல நிபுணர்கள், அகில இந்தியாவிலிருந்து மட்டுமல்ல, கென்யா, கம்போடியா, காறு போன்ற நாடுகளிலிருந்து வந்து ஆராய்ந்தார்கள். அங்கு பேசிய நிபுணர்களெல்லாம், மின்சாரத் துறையில், விவசாயத்

1973 நவம்பர் 23] [திரு. என். இராசாங்கம்]

துறையில், சமூக முன்னேற்றத்தில் என்று இப்படிப்பட்ட தலைப்புகளை எடுத்து விவாதிக்கும்போது மின்சாரத் துறையில் 1970-ம் ஆண்டு வரைக்கும் இந்திய உபகண்டத்திலேயுள்ள எல்லா மாநிலங்களிலும் பஞ்சாப் முதலாவது இடத்தை வகித்தது. 1970-க்குப் பின்னர் பஞ்சாப் முழுமை பெற்றதற்குப் பின்னால் இங்கே எந்த குறையை எதிர்க்கட்சிகள் சொல்கின்றனவோ, அதே குறையை அங்கே எழுப்பினார்கள். கம்பியைப் போட்டு ஓரளவு சரி செய்துவிட்டு, பிறகு சமயோசிதமாக, சந்தர்ப்பத்திற்கேற்ற வாறு, இருக்கிற நிலைமைகளுக்கேற்ப எல்லா காரியங்களையும் ஆரம்பிக்கலாம் என்று விட்டுவிட்டார்கள். அது முழுமை அடைந்ததாக பத்திரிகைகளிலெல்லாம் செய்திகள் வந்தன. ரெகார்டுகளில் காண்பித்தார்கள். நாமும் முழுமை பெறாமல் அங்கங்கே வைத்திருக்கிறோம். 1970-ம் ஆண்டிற்குப் பிறகு பஞ்சாபைவிட அதிகமாகச் செயல்பட்டு, தமிழ்நாடு மின் வாரியம் முழுமை அடைகிற நிலைமையில் இருக்கிறது. ஆகவே, மொத்தத்தில் பார்க்கும்போது தமிழ் நாடு முன் நிற்கிறது என்று இந்தியாவிலுள்ள நிபுணர்கள், பல்வேறு பகுதிகளிலும், எல்லா வகையிலும் முன்னேறி இருக்கிறது என்று முடிவெடுத்திருக்கிறார்கள்.

அதேபோல் உணவுத் துறையில். மின்சாரம் இல்லை என்றால், இன்றைக்கு தமிழ்நாட்டு நிலை என்ன ஆகியிருக்கும்? 1968-69-ம் ஆண்டு ஓராண்டு மழை இல்லை. வரட்சி வந்தது, நமக்கு நன்றாகத் தெரியும். அந்த வரட்சிக்குப் பிறகு மந்திரம் போட்டா உணவு உற்பத்தியை பெருக்கினோம். மின்சார வாரியத்தினுடைய உழைப்பால் அல்லவா உருவாக்கினோம். மின்சார வாரியத்திற்கு அரசாங்கம் கொடுத்த உழைப்பும், மின்சார வாரியம் செய்த சேவையின் பொருட்டும்தான் நாட்டு மக்களுக்கு உணவு வழங்கக் கூடிய நிலை ஏற்பட்டது. இந்தியாவில் பற்றாக்குறை மாநிலமாக இருந்ததை, தன்னிறைவு பெற்ற மாநிலமாக ஆக்கி, பிற மாநிலங்களுக்கும் உணவுப் பொருள் வழங்குகிற உபரி மாநிலமாக இல்லாவிட்டாலும், உபரி மாநிலம் போல் நமது மாநிலம் இருக்கிறது என்றால் அதற்கு மின்சார வாரியம் தவிர வேறு யார் காரணமாக இருக்க முடியும்?

நாமெல்லாம் சிறுவர்களாக இருந்தபொழுது பெய்த மழையா இப்பொழுது பெய்கிறது? கார்த்திகை மாதத்தில் சித்திரை மாதத்து வெயில் இருக்கிற காலம் இது. ஆகவே, உண்மையா

புரிந்துகொண்டு சொல்லவேண்டும். ஒன்றே ஒன்று, தமிழ் நாட்டு மக்களுக்கெல்லாம் தெரிந்தது. ஆளுகிறவர்களெல்லாம் சாதாரண ஆட்கள். ஆளுகிறவர்களெல்லாம் சாதாரண குடி மக்கள். திறமையாக ஆளுகிறார்கள். வெளி மாநிலங்களிலே யுள்ளவர்களுக்கு இந்தத் திறமை தெரியவே கூடாது. சூழல் சூழல் என்று கத்தி, ஜனங்களும் என்னமோ இருக்கிறது என்று ஆர்ப்பரித்து, அவர்கள் பக்கம் சேர்ந்து சொல்லக் கூடிய நிலை இருக்கிறது. யார் வேண்டுமானாலும், என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். தாங்கள்தான் அறிவாளி என்று சொல்கிறார்கள். குறையை குறை என்று சொல்லவேண்டும், இருக்கிற நிலையை இன்ன நிலை என்று சொல்லவேண்டும். நாமெல்லாம், உண்மை நிலையைப் பிரதிபலிக்கவில்லையென்றால் மக்களுக்கு எப்படி பண் பாடுகளை, நல்லவைகளைச் சொல்ல முடியும்? நாமெல்லாம் அரசியல்வாதிகளாக இருந்துவிட்டால், எதிர்கால மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமே தவிர, எதையாகிலும் சொல்லிவிட்டு, தங்களை வளர்த்துக்கொள்ளவேண்டுமென்ற நிலை என்ன ஆகும் என்று பெரிய, பெரிய சித்தாந்த வாதிகள், அரசியல்வாதிகள் நினைத்துப்பார்க்கவேண்டும். என்னவோ, அரசியலை வளர்ப்பதற்கு மட்டும் தலைவர்கள் இருக்கிறார்கள். நாட்டிலே கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையை நிர்ணயிக்கத் தலைவர்கள் இல்லை. அந்த ஒரே காரணத்தினால்தான் நல்லதை நல்லது என்று சொல்ல மறுக்கிறார்கள். நான் அதிகமாகப் பேசவிரும்பவில்லை. காரணம், மின்சார வாரியம் தமிழ்நாட்டுக்கு உயிர் கொடுக்கின்ற நிலையில் இருக்கிறது. தொழில்துறை முன்னேற வேண்டுமானாலும், விவசாயத் துறை முன்னேற வேண்டுமானாலும் மின்சார வாரிய உதவி இருக்கவேண்டும். அப்படி மின் வாரிய உதவி இல்லா விட்டால் எந்தக் காரியமும் நடக்காது. குற்றம் செய்தவர்கள் என்ன குற்றம் செய்தார்கள், அந்தக் குற்றத்திற்கு என்ன தண்டனை அளிக்கலாம், அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று அரசாங் கத்திற்கு தெரிவிக்கிற கடமை எல்லோருக்கும் உண்டு. இங்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு உரிமை இருக்கிறது. எல்லாம் மக்களுக்காகத்தான். அரசாங்கத்தைப் பொறுத்து காரியத்தைச் செய்கின்ற உரிமை. இன்னொரு பக்கம் குறையைக் கண்டு பிடித்துச் சொல்கிற உரிமை எதிர்க்கட்சிக்கு. இப்படி இருப்பதை தவிர, இங்கு வேறு என்ன வேறுபாடு இருக்க முடியும்? ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசாங்கம் செய்த நன்றிக்கு

த

1973 நவம்பர் 23] [திரு. என். இராசாங்கம்]

யார் எதிர்த்தாலும் கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களின் நல்ல அனுதாபம் இந்த கட்சிக்கு இருக்கும் என்று கூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. எம். முத்தையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரிய அறிக்கையின் மீது எனது கருத்தினைச் சொல்ல விழைகின்றேன். மனிதனுக்கு முக்கியமாக பிராண வாயு எப்படி தேவையோ அதேபோல் மின்சாரம் தேவை. நாட்டிற்கு மட்டுமல்ல, வீட்டிற்கும் தேவை மின்சாரம். இன்றைக்கு வீட்டிலே மின்சாரம் முக்கியமா அல்லது சம்சாரம் முக்கியமா என்றால் மின்சாரம்தான் முக்கியம் என்று 90 சதவிகிதத்தினர் சொல்வார்கள். அந்த வகையிலே இருக்கும் மின்சாரத்தை அளிக்கும் துறை எந்த வகையிலே இயங்கி வருகிறது? ஆமை வேகத்தில்தான். 1961-லே என்னூர் அனல் மின்சார நிலையம் ஆரம்பித்து, 1964-லே மத்திய சர்க்கார் அனுமதி பெற்று, அன்று எத்தனை மெகாவாட் உற்பத்தியானது என்று பார்த்தால் 400 மெகாவாட் என்று இருந்து, 10 ஆண்டுக்குப் பின்னர் இப்பொழுது 100 மெகாவாட் தான் உற்பத்தியாகிறது. 400 மெகாவாட் உற்பத்தியாக எவ்வளவு நாள் ஆகும் என்று நினைத்துப் பார்த்தால், நாம் இருப்போமோ இருக்க மாட்டோமோ என்ற நிலைதான் தோன்றுகிறது. அவ்வளவு மந்தத்தில் மின்துறை இயங்குகிறது.

அடுத்தபடியாக, தூத்துக்குடியில் அனல் மின்சார நிலையம் ரூ. 75 கோடியிலே இயங்குவதாக இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், 100 மெகாவாட்டிற்கே 10 ஆண்டு ஆகிறது. அது இன்னும் 10 ஆண்டு கழித்தோ, 15 ஆண்டு கழித்தோ என்ற எண்ணம் தான் தோன்றுகிறதே தவிர, இப்படி மிகவும் ஆமை வேகத்தில் நடந்துகொண்டிருந்தால், இதற்குப் பின்னால் உள்ள தொழில் துறைகளோ, மற்ற விவசாயமோ, அல்லது பொதுவாக கிராமங்களுக்கோ எப்படி மின் இணைப்பு கொடுக்க முடியும் என்று நான் மிகவும் சந்தேகப்படுகிறேன். அப்படி இருக்கிற இந்தத் துறையை இன்னும் துரிதப்படுத்தி இன்னும் எவ்வளவு மின்சாரம் தேவை என்றாலும் கொடுக்கலாம் என்ற உடனடியான உறுதிப் பாட்டை, இந்த அரசும் அதைச் சேர்ந்த அதிகாரிகளும் எடுத்துக் கொள்ளவேண்டும். அந்நிலையை உருவாக்கவேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 1-00]

அதற்கடுத்தப்படியாக என்னவென்றால் குந்தாத் திட்டம். நீலகிரி மலையிலே உள்ள அந்த குந்தாத் திட்டத்தில் 5 மின் உற்பத்தி நிலையங்கள் பவர் ஹவுஸஸ், பல கோடிக்கணக்கான ரூபாய் அளவிலே வெளிநாட்டிலிருந்து கனடா நாட்டிலேயிருந்து உதவித் தொகை கொடுத்து இயங்குகிறது என்று சொல்கிறார்கள். அந்த ஐந்து மின்நிலையங்களும் எப்படி இயங்குகின்றன என்றால்—நான் கேள்விப்பட்டவரையிலே சொல்கிறேன்—பல ஆண்டு களுக்கு ஒருமுறைதான் இயங்குகிறது, 'புல்' ஆக சரிவர இயங்க வில்லை என்று சொல்கிறார்கள். காரணம் என்ன என்று கேட்ட பொழுது சொல்கிறார்கள், அதனுடைய நீர்த்தேக்கங்கள் சரியாக நிரம்புவது இல்லை, அரை குறையாக நிரம்புகிறது என்று சொல்கி றார்கள். பருவ மழை தவறியதால் அந்த நிலை என்று சொல்லப் படுகிறது. அதிலும்கூட சில அறிஞர்களிடத்திலே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே நான் வினவியபோது அவர்கள் சில விளக் கங்கள் கொடுத்தார்கள், அவை உண்மையோ இல்லையோ எனக்குத் தெரியாது, உண்மையாக இருந்தால் எடுத்துக்கொள்ளுங்கள், இல்லாவிட்டால் விட்டுவிடுங்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் நீலகிரி மலையிலே உள்ள நீர்த்தேக்கம் இருக்கிற பகுதியிலே யூகலிப்ட்ஸ் மரங்கள் வன இலாகாவினால் பயிர் செய்யப்படுகின்றன. அவை நீர்த்தேக்கத்திலே உள்ள தண்ணீரை அந்த மரங்கள் உறிஞ்சக்கூடிய நிலைமை இருக்கிறது, அதனால்தான் நீர்த்தேக்கத் திலே தண்ணீர் வற்றிவிடுகிறது என்று நீர்-நிலவள ஆராய்ச்சி யாளர்கள் சொல்கிறார்கள். அது உண்மை என்றால் சம்பந்தப் பட்ட அதிகாரிகளும் அமைச்சர் அவர்களும் இந்த வன இலாகா அதிகாரிகளுடன் கலந்து பேசி அந்த மரங்கள் அதற்குத் தடையாக இருந்தால் அதை வெட்டி அப்புறப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது மின் உற்பத்திக் கழகம் என்ற ஒன்று அரசால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத்தக்க விஷயம். உற்பத்திக் கழகத்திற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தலைவராக இருக்கின்றார்கள், என்று அறிக்கையிலே கூறப் பட்டிருக்கிறது. பெருமைப்படுகிறோம். ஆனாலும் இதற்கு ஒரு அமைப்பாளராக ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீஸரைப் போடுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. எற்கெனவே ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீஸர்தான்

1973 நவம்பர் 23] [திரு. எம். முத்தையா]

சேர்மனாக இருந்துவருகிறார், அதற்காக நாங்கள் வருத்தப்படவில்லை, சம்பளம் கொடுப்பது அரசாங்கம். ஏற்கெனவே இருக்கிற ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி போதும், இன்னொரு ஐ.ஏ.எஸ். ஆபீசர் தேவைதானா? ஏன் என்றால் அதற்குத் தலைவராக மின்சாரத் துறை அமைச்சர் இருந்தாலும்கூட உப தலைவராக பொறியியல் வல்லுநர் ஒருவர் இருந்தால்தான் நல்லதாக இருக்கும், இல்லாவிட்டால் சிவப்பு நாடா கட்டின கதையாகத்தான் இருக்கும். ஆகவே அமைச்சர் அவர்களும் அதிகாரிகளும் கலந்து ஆலோசித்து டெக்னிக்கல் சம்பந்தப்பட்ட ஒரு பொறியியல் வல்லுநரை உப தலைவராக அதற்குப் போடவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஒட்டுமொத்தமாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் இன்றைக்கு அரசால் பசுமைப் புரட்சித் திட்டம் என்ற முறையிலே கிணறு வெட்டுவதற்கும் பம்புசெட்டுகள் வாங்குவதற்கும் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. ஆனால், விவசாயிகள் கடன்களை வாங்கித் திருப்பிக் கட்ட முடியாமல் கஷ்டப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஏன் மின்சார இணைப்புக் கிடைக்கவில்லையென்று கேட்டால், மின்சார வெட்டு காரணம் என்று சொல்கிறார்கள். ஆனால், கடனை வாங்கிக்கொண்டு திருப்பிக் கட்ட முடியாமல் மிகவும் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். நான் என்ன நினைக்கிறேன் என்றால், சிவனே என்று இருந்த விவசாயிக்கு கிணறு வெட்டக் கடன் கொடுக்கிறேன், பம்புசெட்டு வாங்கக் கடன் கொடுக்கிறேன் என்று சொல்லி கடன்களைக் கொடுத்து கடைசியிலே அவனுக்கு மின் இணைப்புக் கிடைக்காமல், அவர்கள் திருப்பிக் கட்ட முடியாமல், சர்க்காரால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதை நினைக்கும்போது "சும்மா இருந்த சங்கை ஊதிக் கொடுத்தானாம் ஆண்டி" என்பதைப்போல் அவர்கள் இருந்த மாட்டை விற்று, விவசாயம் செய்துகொண்டிருந்ததையும் விட்டு விட்டு, இப்பொழுது கடனுக்குள்ளே மாட்டிக்கொண்டு திண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள். விவசாயிகள் பம்புசெட்டுகளுக்காக சர்வீஸ் கேட்டால் உடனடியாக மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்பதை நான் இந்த மன்றத்திலே வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். என் வட்டத்திலே சில விவசாயிகளுக்கு பம்பு செட்டுகளுக்கு சர்வீஸ் கிடைக்கவில்லை. அதிகாரிகளிடம் சொன்னால் அவர்கள் சொல்கிறார்கள் சமீபத்திலே அரசு உத்திரவு

போட்டு இருக்கிறது, இப்பொழுது சர்வீஸ் கொடுக்கக் கூடாது என்று சொல்கிருர்கள். அப்படி அரசு உத்திரவிடவில்லை என்று எனக்குத் தெரியும். இருந்தாலும், விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிருர்கள். இந்த நிலையிலே அரசாங்கம், விவசாயிகள் என்றைக்கு டெபாசிட்டுக்கு மின்சார இணைப்பு கோரி விண்ணப் பித்துக் கொடுக்கிருர்களோ அதிலிருந்து 1 வருஷத்திற்குள்ளாக, இணைப்பு கொடுக்கவேண்டும். நான் மற்றவர்களைப்போல் 3 மாதம், 6 மாதம் என்று சொல்லவில்லை. ஒரு வருஷத்திற்குள்ளாக இணைப்பு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பயன்படுத்துகிறவர்களுக்கு 100 யூனிட்டுக்கு கீழே உள்ளவர்களுக்கு ஒரு ரேட்டும், 100 யூனிட்டுக்கு மேலே உள்ளவர்களுக்கு ஒரு ரேட்டும் கட்டணம் வாங்குகிருர்கள். 100 யூனிட்டுக்கு மேலே கரண்ட் ஓடுகிறது என்ருல் அவர் ஒரு முதலாளியாகத்தான் இருப்பார். அவருக்கு ஏன் குறைந்த கட்டணம் வாங்கவேண்டும்? நூறு யூனிட்டுக்கு குறைந்து இருந்தால் அவனுக்கு அதிகமாக கட்டணம் வாங்குகிருர்கள். இந்த பாரபட்சமான நிலைமை இருக்கக்கூடாது. எவ்வளவுக்கெவ்வளவு கரண்ட் அதிகமாக செலவழிக்கிருர்களோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமான மின்சார கட்டணமும் உயரவேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு குறைந்த அளவுக்குக் கரண்ட் செலவழிக்கிருர்களோ அவர்களுக்கு குறைந்த கட்டணமும் வாங்குவதுதான் சரியான முறை.

அது மட்டுமல்லாமல், இன்றைக்கு ஆடம்பரமாக வீடுகளிலே அடுப்பு, ஃபேன், லிப்ட்க்கும் என்ன என்ன வீட்டு வேலை பண்ண வேண்டுமோ அவ்வளவுக்கும் ஆடம்பரம்—அத்தனையும் கரண்டிலே செய்கிருர்களே அவர்களுக்கு ஏன் குறைந்த கட்டணம் வாங்க வேண்டும்? 35 யூனிட்டுக்கு மேலே இருந்தால் அதிகமாக கட்டணம் வாங்கவேண்டும். 35 யூனிட்டுக்குக் கீழே இருந்தால் அவர்கள் 1 பல்பு, 2 பல்புகள்தான் எரிப்பார்கள், வேலைக்குச் செல்லும் பொழுது அணைத்துவிட்டுச் செல்வார்கள். அப்படிக் குறைந்த அளவிற்குப் பயன்படுத்துகிறவர்களுக்குக் குறைந்த கட்டணம் தான் வாங்கவேண்டும். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இதிலே ஏழை பணக்காரர் என்ற வித்தியாசம் காட்டாமல் இதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த துணைத் தலைவர் அவர் களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

1973 நவம்பர் 23]

*திரு. செ. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின்கண் வைக்கப்பட்டிருக்கும் மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

